
# திருக்கோயில்

"என் கடன் பணி செய்து கிடப்பதே"


7 - JUN 1965



கூத்தப்பிரான், திருவாஞ்சியம்

மாலை 7] விசுவாவசு வைகாசி—ஜூன் 1965 [ மணி 9

சென்னை அரசாங்க அறநிலையப்



காஞ்சிபுரம் ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோயில்—உற்சவரும் ஸ்ரீ ஆண்டாளும்.

## பொருள் அடக்கம்


1. மூல இலக்கியம்
2. சிவஞான சுவாமிகள்
3. திருச்சந்த விருத்தம்
4. திருவாய் மொழி
5. இராமலிங்கரும் கோயில்வழிபாடும்
6. சமயங்கள்
7. வண்ணத்தியல்பு நூல்
8. ஸ்ரீவைஷ்ணவ குருபரம்பரை
9. பராங்குசமுனியும்—பரகாலகவியும்.
10. மதுராந்தகம் கல்வெட்டுக்கள்
11. ஸ்ரீவைஷ்ணவ—பரிபாஷைச் சொற்கள்
12. திருஞான சம்பந்தர் பிள்ளைத் தமிழ்


**ஆண்டுச் சந்தா ரூ. 10/-** **தனி இதழ் விலை ரூ. ஒன்று**

## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள் **"திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34"** என்னும் முகவரிக்கு ரூபா **பத்து** அனுப்பி, எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்கள் ஆகச் சேர்ந்து கொள்ளலாம்.

அல்லது, அவ்வவ் வட்டார **அறநிலைய உதவி ஆணையாளர்களின்** அலுவலகங்களிலும், மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

ஓர் ஆண்டின் நடுவில் எந்தமாதத்திற் சேர்ந்தாலும், அடுத்த ஆண்டில் அந்த **மாதம்** வரையில், 12 இதழ்கள் அனுப்பப்பெறும்.

ஓர் ஆண்டிற்குக் குறைந்த சந்தாத் தொகை ஏற்கப் பெறுவதில்லை.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல், இதழ்கள் தவறுமற் சேர்தற்கு மிகவும் இன்றியமையாதது.

—ஆசிரியர்.

திருக்கோயில்

திங்கள் வெளியீடு

மாலை 7] விசுவாவசு வைகாசி—ஏப்ரல் [மணி 9

# 'மூல இலக்கியம்'

**முன்னுரை :**

ஒரு நாட்டின் நாகரிகச் சிறப்பினை விளக்குவனவற்றுள், அந்நாட்டிற் குரிய இலக்கியங்கள் தலை சிறந்தனவாகும். நாகரிகச் சிறப்பின் மிக்கு ஓங்கித் திகழும் நாடுகளிலேயே, அழியாச் சிறப்புடைய அரும் பெறல் இலக்கியங்கள் தோன்றுதல் இயலும். ஒரு சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் நடாத்தும் வாழ்வின் வளமும் நலமுமே, இலக்கியங்கள் தோன்றுவதற்கு வழி வகுக்கின்றன. ஒரு நாட்டின் வரலாறும் பண்பாடும், அதன் இலக்கியங்களிலேயே சிறப்புற நிழலிட்டுத் திகழ்கின்றன !

நாட்டு மக்களின் வாழ்க்கை நல்ல நிலையிற் செழித்தோங்கி யிருந்தால், அது போது அங்குத் தோன்றும் இலக்கியங்களும் செழித்துச் சிறந் தோங்கி விளங்கும். குப்தர்களின் பொற் காலத்தில் தான், **காளிதாசர்** போன்ற மாபெருங் கவிஞர்கள் தோன்றினர். உரோம நாட்டில் **அகஸ்டஸ் சீஸர்** ஆண்டு கொண்டிருந்த பொழுதுதான் (Augustan Age), சிசரோ (Cicero) போன்ற பேரறிஞர்கள் வாழ்ந்திருந்தனர். இங்கிலாந்து தேசம் செல்வச் செழிப்பு மிக்குச் சீரும் சிறப்பும் ஓங்கித் திகழ்ந்திருந்த, **எலிசபெத் அரசியின்** ஆட்சிக் காலத்தில் தான், **ஷேக்ஸ்பியர்** போன்ற பெருங் கவிஞர்கள் தோன்றலாயினர். சோழப் பேரரசு கடல் கடந்த நாடுகளிலும் பரவித் தமிழகம் எல்லாத் துறைகளிலும் புகழோங்கிப் பொலிந்திருந்த நிலையில் தான், **சேக்கிழாரும் கம்பரும்** போன்ற சிறந்த பெருங் கவிஞர்கள் விளங்கி யிருந்து, தம்முடைய ஒப்புயர்வற்ற இலக்கியங்களை இயற்றி யருளினர் !

இலக்கியங்கள் வளர்ந்தால் நாடும் வளரும். இலக்கியங்கள் இழிநிலை எய்தினால் நாடும் இழிநிலை எய்தும். நாட்டின் வளமும், மக்களின் வாழ்வும் உயர்ந்திருந்தால், இலக்கியங்களும் உயர்ந்தன வாக அமையும். அவைகள் நலிவுற்றுச் சிதைந்து சீரழிந்து போயிருந்தால், அந்நிலையில் தோன்றும் இலக்கியங்களும் தரங்குன்றித் தாழ்ந்திழிந்து நிற்கும். இஃதோர் இயற்கைப் பொது நியதி போலவே, யாண்டும் என்றும் காணப் படுகின்றது. எனவே சமுதாய வாழ்வின் தாழ்வும் தளர்ச்சியும் போக்கி, நலம் பல பெருக்கிச் செழிப்பும் சிறப்பும் எய்தச் செய்ய வல்லவை, சீரிய இலக்கியங்களே யாகும் எனத் துணிந்து கூறலாம்.

## இலக்கியச் சிறப்புகள் :

தேசம் இடையிட்டவற்றையும், காலம் இடையிட்டவற்றையும் நம் மனோர்க்குக் காட்டியுணர்த்துதல் பற்றி, இலக்கியங்களைக் "**கண்கள்**" என்று **திருவள்ளுவர்** புகழ்ந்து கூறுகின்றார். **ஜான் ரஸ்கின்** (John Ruskin) என்னும் ஆங்கில அறிஞர், 'தற்காலத்திற்கு மட்டுமே யுரியவை' என்றும் 'எக்காலத்துக்குமே யுரியவை' என்றும், நூல்களை இருதிறனாகப் பிரித்தார். அதனை யொப்ப நம்முடைய திருவள்ளுவர் தாமும், நூல்களை இருவகையிற் பிரித்திருக்கின்றார். ஒன்று, வெறும் '**நூல்**' மற்றொன்றோ 'இலங்கு நூல்'. இது தமிழ் இலக்கணத்தில் 'வினைத்தொகை' எனப்படும். அஃதாவது மூன்று காலத்திற்கும் பொதுவானது. எனவே "**பண்டும் இன்றும் என்றும் உள்ள பொருள்**" என்று இறைவனைப் பெரியார் குறித்திருப்பது போல, இறப்பு நிகழ்வு எதிர்வு என்னும் மூன்று காலங்களிலும், நாட்டில் எத்தனை எத்தனை மாறுதல்களும் புரட்சிகளும் நடந்தனவாயினும், அவற்றால் தம் ஒளியும் புகழும் நலமும் சிறிதும் குன்றாமல், மஞ்ஞான்றும் ஒரே பெற்றிமையிற் சிறந்தோங்கித் திகழும் நூல்களே, "இலங்கு நூல்கள்" எனப் பெறும் ஏற்றம் உடையனவாகும் என்று, நாம் உரைலாம். நாம் இந்நாளில் 'Classics' எனக் குறிப்பிடுவனவற்றையே, 'இலங்கு நூல்' எனத் திருவள்ளுவர் சுட்டியருளினர் போலும் (1). இலக்கியங்களைக் கல்லாதவர்களின் இழிவினை "விலங்கொடு மக்கள் அனையர் **இலங்கு நூல்** கற்றாரோடேனை யவர்" என அவர் இகழ்ந்துரைத் திருத்தலைக் காண்கின்றோம்.

இலக்கியங்கள் சுவைபெருக்கிப் பயன் விளைக்கும் பண்பு இத்தகையது என்பதனை, "நவில்தொறும் நூல் நயம் போலும் பயில்தொறும் பண்புடையாளர் தொடர்பு" என்று, அவர் விளக்கி யருளியிருத்தல் அறிந்தின்புறற்பாலது.

"இவ்வுருவு நெஞ்சென்னும்
கிழியின்மேல் இருந்து இலக்கித்து

அவ்வுருவு நினைப்பென்னும்
துகிலிகையால் வருத்தித்துக்

கவ்வியதன் நோக்கினாற்
கண்விடுத்துக் காதல் நீர்

செவ்விதில் தெளித்தானைக்
காமப்பூச் சிதறினான்"

எனவரும் **சீவக சிந்தாமணிச்** செய்யுளில், 'இலக்கித்து' எனனும் சொல் 'எழுதி' என்னும் பொருளில் ஆளப் பெற்றிருத்தலால், 'இலக்கியம்' என்னும் சொல்லின் பொருள் இனிது தெளியப் படும் (2).

இலக்கியங்கள் எல்லாரையும் எல்லாக் காலத்திலும் இன்புறுத்தும் தகைமை வாய்ந்தன. அவை காலத்தால் வாடி வதங்குவதில்லை; அவற்றின் அளவிலா நலங்கள் பலகால் பயிலுதலால் சுவை குன்றித் தெவிட்டுவதில்லை.

காலத்தால் வாடிக் கழியாது; பன்னலமார்
சீலத்தாற் குன்றாச் சுவை திகழும்;
—காலத்தான்
ஊட்டிப் பசிபெருக்கும்; ஓங்கும் இலக்கியநன்
மாட்சிக் கிணையுண்டோ? மற்று.

—ஆசிரியர் மொழி பெயர்ப்பு (3)

## இருண்ட காலம் :

தமிழகத்தில் பொற்காலம் எனத் தகுந்த சங்க காலத்திற்குப் பிறகு,

(1) "A '**Classic**' may be simply defined as a book which has stood the **test of time,** and which by its **stability** and **permanence,** and the **universality** and **persistency** of its appeal, has given unmistakable assurance of **immortal life.**"

—**William Henry Hudson,**
The study of Literature, p. 308.

தமிழக வரலாற்றில ஓர் 'இருண்ட காலம்' நிலவியது. அஃது ஏறத்தாழக் கி. பி. மூன்றும் நூற்றுண்டு முதல் ஆறும் நூற்றுண்டு வரையில், முந்நூறு ஆண்டுகள் நீடித்தது. அவ்விருண்ட காலத்தில் நாட்டின நிலைமையும் பல்லாற்ருன் நலிவுற்றுக் கிடந்ததனுல், நல்ல இலக்கியம் எதுவும் அதுபோது தோன்ருதொழிந்தது. அவ்விருண்ட காலத்தில் சேர சோழ பாண்டியர்கள் ஆகிய தமிழ் வேந்தர்களின் ஆட்சி வலி குன்றிச் சீரழிந்திருந்தது. வேற்றரசர்கள் தமிழகத்திற் புகுந்து ஆட்சி செலுத்தத் தலைப்பட்டனர். சங்ககால வாழ்க்கை வரன் முறைகளும், பழக்க வழக்கப் பண்பாடுகளும், போற்றுவார் இன்றி அழியத் தலைப்பட்டன. பழம் பெருந் தமிழ்ச் சமயங்களாகிய **சிவநெறியும் திருமால் நெறியும்** பொலிவுழந்து மங்கிக் கிடப்ப, ஒன்றுக்கொன்று முரண்பாடு உடையனவும், ஒன்ருேடொன்று இகலிப் பெரும் பகை கொண்டு, ஒன்றையொன்று அழித்தற்கு அற்றம் நோக்கி யிருந்தனவும் ஆகிய பல புதுப் புதுக் கொள்கைகள், தமிழகத்திற் புகுந்து நுழைந்து வேரூன்றிப் பரவிச் செல்வாக்குப் பெற முயன்று கொண்டிருந்தன.

---

(2) "Literature is a record of best thoughts"—Emerson

"Literature is fundamentally an expression of life through the medium of language."

—W. H. Hudson.

(3) "Age cannot wither her;
nor custom stale
Her infinite variety;
other women cloy,
The appetite they feed;
but she makes hungry
where most she satisfies."

—Shakespeare.

## சமய ஆசிரியர் செயல்கள் :

இவ்விருண்ட காலத்திற்குப் பின்னர்க் கி. பி. ஆறு, ஏழாம் நூற்றுண்டுகளிற் பல்லவப் பேரரசு தலையெடுத்து வளர முற்பட்டது. அப்பல்லவப் பேரரசின் காலத்தில்தான், நமது சைவ சமய ஆசிரியர்களாகிய திருநாவுக்கரசரும் திருஞான சம்பந்தரும் தோன்றி வாழ்ந்து விளங்கினார்கள். அவ்விரு பெருமக்களும் நமக்குக் காலத்திருற் செய்த நன்றியின் அருமை பெருமைகளை, அவர்கள் காலத்துத் தென்னிந்தியாவின் அரசியல் பொருளியல் சமயவியல் சமூகவியல் வரலாறுகளையெல்லாம் நன்கினிது ஆராய்ந்தறிந்தன்றி ஒரு சிறிதும் உணர்தல் இயலாது. **புதுமை, புரட்சி, சீர்திருத்தம், மறுமலர்ச்சி** என்பன போலும் பல சொற்கள் சொற்றொடர்களை, இன்று நாம் பலரும் பலநாளும் முழங்கக் கேட்கின்ருேம். இவை தம்மையெல்லாம் இற்றைக்குப் பல நூற்றுண்டுகட்கு முன்னரே, நமது சமய ஆசிரியர்கள் நிகழ்த்திக் காட்டி யிருப்பதனை நம்மிற் பலர் அறிவதில்லை. திருநாவுக்கரசர் திருஞான சம்பந்தர் முதலிய நமது சமய ஆசிரியர்கள் தமது காலத்தில் தமிழ் நாட்டிற் பல பெரும் புரட்சிகளைச் செய்தனர் : புதுமைகளை வகுத்தனர் ; சீர்திருத்தங்களை நிகழ்த்தினர் ; மறுமலர்ச்சிகளை விளைத்தனர் !

பாடிய செந்தமி ழாற்பழங்
காசு பரிசில்பெற்ற
நீடிய சீர்த்திரு ஞானசம்
பந்தன் நிறைபுகழான்
நேடிய பூந்திரு நாவுக்
கரசோடு எழில்மிழலைக்
கூடிய கூட்டத் திருல்உள
தாய்த்தித் குவலயமே

—நம்பியாண்டார் நம்பிகள்.

## திருமுறை இலக்கியம் :

இலக்கியங்களின் அமைப்பிலும் போக்கிலும் கருத்திலும் புரட்சி நிகழ்ந்தால், அவை நாட்டின் நிலையிலும் பெரியதொரு புரட்சியை விளைவிக்கும். நாட்டில் ஏதேனும் புரட்சி நிகழுமாயின், அதன் அறிகுறிகளும் விளைவுகளும் இலக்கியங்

களிற் பதிந்து இடம்பெறும். இவ்வுண்மைக்கு நம் சைவத் திருமுறை இலக்கியங்கள் சான்று பகர்ந்து நிற்கும் தன்மையன வாதல் காணலாம்.

சங்ககால இலக்கியங்களுக்கும், அவற்றிற்குப் பின்னர் அவற்றின் அடிப்படையில் எழுந்த திருமுறை இலக்கியங்களுக்கும் இடையே, அமைப்பிலும் போக்கிலும் கருத்திலும் நடையிலும் சிற்சில வேறுபாடுகள் உண்டு. பிற துறைகளில் மட்டும் அன்றி, மொழித்துறை இலக்கியத்துறை கவிதைத்துறை முதலியவற்றிலும்கூட, ஒரு புதுநெறியையும் மறுமலர்ச்சியையும் புரட்சியையும் நம்முடைய சமய ஆசிரியர்கள் நிகழ்த்தியிருக்கின்றனர். இதனைச் சங்க காலத்திற்குப் பின்னர் எழுந்த தமிழ் இலக்கியங்களின் போக்கினாலும் அமைப்பினாலும் நம்மனோர் நன்கினிது அறியலாம்.

திருஞானசம்பந்தர் அருளிய தேவாரத் திருப்பதிகங்களில், அவரே தமக்கு முன்னரும் பின்னரும் இல்லாத முறைகளில், புத்தம் புதிய பலவகைக் கவிதைகளை முதன்முதலாக வியக்கத் தக்கவாறெல்லாம் பாடியிருத்தலைக் காண்கின்றோம். தமிழில் பலப்பல புதுப்புது வகைக் கவிதைகளை முதன்முதலாக இயற்றியளித்த பெருமை, திருஞான சம்பந்தரையே சாரும். **'முத்தமிழ் விரகர்'** ஆகிய திருஞானசம்பந்தப் பெருமான், முதன் முதலாகத் தாமே புதிது படைத்துப் பாடிய பல அற்புதக் கவிதைகளைத்தான், ஆசிரியர் **சேக்கிழார்** பெருமான், **'மூல இலக்கியம்'** எனச் சிறந்தெடுத்து மொழிந்து, புகழ்ந்து மகிழ்கின்றார். அவற்றுள் ஒருசில முதன்மையான கவிதை வகைகளை மட்டும் தாலிபுலாக நியாயம் (Specimen) பற்றி, இயன்ற பெற்றி ஈண்டுச் சுருக்கமாகக் கண்டு அமைவோம்!

(1) **மொழிமாற்று:** 'கலையை மறைத்து வைத்துப் புலப்படுத்தும் முறையிலேயே கலைத்திறன் உள்ளது' (4) என அறிஞர்கள் கூறுவர். அவ்வுண்மைக்கேற்ப, மொழிகளை மாற்றியமைத்து மயக்கம் விளைத்துப் பின்னர் வியப்பையளிக்கும் ஒருவகைப் பாடலே, மொழிமாற்று எனப்படும்.

காட தணிகலம் காரரவம்
  பதி காலதனில்
தோட தணிகுவர் சுந்தரக்
  காதினில் தூச்சிலம்பர்
வேட தணிவர் விசயற்கு
  உருவம் வில்லும் கொடுப்பர்
பீட தணிமணி மாடப்
  பிரம புரத்தாரே

எனவரும் திருப்பதிகம் போல்வன மொழிமாற்று எனப்படும். இதன்கண் "காடதுபதி, கார் அரவம் அணிகலம், காலதனில் தூச்சிலம்பர், சுந்தரக் காதினில் தோடது அணிகுவர், வேடது அணிவர் உருவம், விசயற்கு வில்லுங் கொடுப்பர் பிரமபுத்தாரே" என வருவதற்குரிய மொழிகளை மாற்றி மாற்றி அமைத்துப் பாடியிருத்தலின், இது மொழிமாற்று என வழங்குவதாயிற்று.

(2) **மாலைமாற்று:** ஒரு மாலையினை எப்பக்கம் மாற்றிப் பிடித்தாலும் அதன் தன்மை மாறாதிருத்தல்போல, ஒரு செய்யுளை முன்னிருந்து பின்னாயினும், பின்னிருந்து முன்னாயினும் மாற்றிப் படித்தாலும் ஒரே தன்மை யுடையதாகப் பொருள் பயந்து சிறந்து நிற்பது. இது போல்வனவற்றை ஆங்கிலமொழியின்கண், Palindrome என வழங்குவர்.

யாமாமாநீ யாமாமா
  யாழீகாமா காணாகா;
காணாகாமா காழீயா
  மாமாயாநீ மாமாயா

எனவரும் பாடலில் முதல்வரியைத் திருப்பிப் படிக்கும் முறையில் இரண்டாம் வரி அமைந்திருத்தல் காணலாம்.

(3) **இயமகம்:** இது வடமொழிப் பெயர். தமிழில் இதனை **'மடக்கு'** என்பர். ஒரு செய்யுளில் ஒருகாற்

---

(4) "Art lies in concealing art."
—**Prof. A. C. Bradley**

பயின்ற சொல்லே, அதன்கண் மீண்டும் பலகால் மடக்கி வருதலால் மடக்கு என வழங்கும். இங்ஙனம் சொற்கள் செய்யுட்களில் மடக்கிவரும் முறைகள் 315 வகைப்படும் என்பர் இலக்கண நூலார்.

உற்றுமை சேர்வது மெய்யினையே
உணர்வது நின்னருள் மெய்யினையே...

ஆலநீழல் உகந்த திருக்கையே
ஆனபாடல் உகந்த திருக்கையே...

(4) **ஏகபாதம்:** ஒரு பாடலில் ஓரடியே சிறிதும் மாறுமல் ஏனைய மூன்றடிகளாகவும் வந்து, வெவ்வேறு வகையிற் பொருள் அமைந்து நிற்பது. அடிதோறும் எல்லாச் சீர்களும் ஓரடியிற் போலவே மீண்டும் மடக்கி வருவதாகிய இயமகமே ஏகபாதம் எனப்படும். ஏக பாதம்-ஓர்அடி. இஃது ஒருவகை அரிய மிறைக் கவி யாகும்.

பிரம புரத்துறை பெம்மான் எம்மான்
பிரம புரத்துறை பெம்மான் எம்மான்
பிரம புரத்துறை பெம்மான் எம்மான்
பிரம புரத்துறை பெம்மான் எம்மான்

(5) **இருக்குக் குறள்:** இரு சீரால் இயன்ற அடிகளையுடைய பாடல், வெண்பா இனத்தில் '**குறள்**' என்பதொரு வகை இரண்டடிகளான் இயன்று வருவதுண்டாகலின், அதனினின்று இதனைப் பிரித்துக் காட்டுதற் பொருட்டு, இஃது "இருக்குக் குறள்" எனப் பெயர் பெறுவதாயிற்று. '**இருக்கு**' என்பது வடமொழியில் ஒருவகைச் செய்யுள் அமைப்புக்குப் பெயர். அதனுல் அம்மைந் தமை பற்றியே 'இருக்கு வேதம்' எனப் பெயர் பெற்றது என்பர். எனவே இதனை, ஆசிரியர் சேக்கிழார் "**தமிழ் இருக்குக் குறள்**" என்று சிறப்பித்து ஓதினர்.

"வாசி தீரவே
காசு நல்குவீர்
மாசின் மிழலையீர்
ஏசல் இல்லையே"

என்பன போன்று வரும் பல திருப்பதிகங்கள் "திரு இருக்குக் குறள்" என்று பெயர் பெற்று வழங்கும்.

(6) **திருமுக்கால்:** ஒரு செய்யுளில் இரண்டாம் அடியும், நான்காம் அடியும் முச்சீரால் முடிவது, திருமுக்கால் ஆகும். இத்தகைய பதிகங்கள் ஆறு, திருஞான சம்பந்தர் தேவாரத்தில் இடம் பெற்றுள்ளன.

விண்ணவர் தொழுதெழு வெங்குரு மேவிய
சுண்ணவெண் பொடியணி வீரே!
சுண்ணவெண் பொடியணி வீர்உம தொழுகழல்
எண்ணவல் லார்இடர் இலரே.

(6) **எழு கூற்றிருக்கை:** ஏழு கூறுகளால் தேர் போல அமைத்து, ஒன்று முதல் ஏழுவரை ஒவ்வோர் எண் மிகுத்தும் குறைத்தும் எண்ணலங்காரம் அமைய இணைக்குறள் ஆசிரியப்பாவாற் பாடப் பெறுவது, நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்துள் திருமங்கை யாழ்வாரும், பதினொன்றும் திருமுறையில் நக்கீர தேவ நாயனுரும் திருவெழு கூற்றிருக்கை பாடியுள்ளனர். இதற்குரிய இலக்கணத்தினை **மாறன் அலங்காரம்** முதலிய நூல்களிற் காணலாம்.

... ஒருங்கிய மனத்தோடு
இருபிறப்பு ஓர்ந்து
முப்பொழுது குறைமுடித்து
நான்மறை ஓதி
ஐவகை வேள்வி அமைத்து,
ஆறு அங்க முதல்எழுத்து ஓதி
வான்முறை பயின்று
எழுவான் தனை வளர்க்கும்
பிரமபுரம் பேணினை ...

(7) **ஈரடி:** இரண்டு அடிகளால் இயன்ற குறள் வெண்பா முதலியவற்றின் வேறுபட்டு வருவது.

பரசு பாணியர் பாடல் வீணையர்
பட்டினத்துறை பல்லவன் ஈச்சரத்து;
அரசு பேணி நின்ருர் இவர்
தன்மை அறிவார் ஆர்!

*(8)* **ஈரடிமேல் வைப்பு :** செய்யுள்கள் பெரும்பாலும் நான்கு அடிகளால் அமைந்து வருதல் இயல்பு. அங்ஙன மின்றிச் செய்யுளின் நான்கடிகளில், முன்னை இரண்டடிகள் ஒருவகையாகவும், பின்னை இரண்டடிகள் ஒருவகையாகவும் அமைந்து, சந்தமும் பொருளும் ஒட்டி வைத்தாற்போலக் காணப்படுவது. இவ் வாறு வைப்பாக வரும் பின்னை ஈரடிகள் ஒன்றேயாக வேனும், வெவ்வேறாக வேனும் மகுடம் போல வருவது உண்டு.

*கொட்டமே கமழும் கொள்ளம் பூதூர்*
*நட்டம் ஆடிய நம்பனை யுள்கச்*
*செல்ல உந்துக சிந்தை யார்தொழ*
*நல்கு மாறருள் நம்பனே*

*(9)* **நாலடிமேல் வைப்பு:** 'ஈரடி வைப்பு' என்பது போலவே, நான்கு அடிகளுக்குமேல் இரண்டு அடிகள் சந்த மும் பொருளும் ஒத்து ஒட்டி வைத்தாற் போன்று வருவது.

*இடரினும் தளரினும் எனதுறுநோய்*
*தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்*
*கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை*
*மிடறினில் அடக்கிய வேதியனே*
*இதுவோஎமை ஆளுமா றீவ தொன்றிலை யேல்*
*அதுவோஉன தின்னருள்ஆவடு துறை யரனே*

*(10)* **திருஇராகம் :** முடுகிய சந்த நலம் உடையதாய்க் குறில் நெடில் வல் லினம் மெல்லினம் இடையினம் என்னும் இவற்றில், ஏதேனும் ஒவ்வோர் இன எழுத்துக்களே மிக்குச் செறிந்து வரப் பாடல் தோறும் வெவ்வேறு வகையான எழுத்துக்களால் இன்னோசை நலம் கெழுமப் பாடப் பெறுவது, "**வானவர் கள் தானவர்கள்**" "**வானவரி கோள புலி**" "**கோளழை மிடறுகக்** கவிகோளும் இலவாக" என்பன போலும் தொடக்க முடைய பல திருப்பதிகங்கள் திருவிராகம் எனப்படும். தமிழின் இனிய ஒலி நலத் தினையும், சொற்செல்வவளச் சிறப்பினை யும் இப்பதிகங்களிற் காணலாம்.

*(11)* **வழிமொழித் திருவிராகம் :** மேற் கூறப்பெற்ற திருவிராக அமைப்பிலேயே, சீர்காழியின் 12 திருப் பெயர்களையும் முறை பிறழாமற் கிளந்தெடுத்துக் கொண்டு, அவற்றினைப் பாடல்களின் கடைசி யடிகளில் அவ்வவற்றிற்கேற்ற எதுகை அமைதிகள் பெற வழிமொழிந்து பாடிச் செல்லப் பெறுதலின், இது "வழி மொழித் திருவிராகம்" எனப்படும். "**பல் பெயர்ப் பத்து**" என்னும் பதிக மும் இவ்வாறே வந்திருத்தல் கண்டு மகிழ்தற் குரியது.

*(12)* **சக்கரமாற்று :** சீர்காழியின் 12 பெயர்களும் சக்கரத்தின் ஆர்கள் போல முறை முறையே மாறி மாறிச் சுழன்று வரப் பாடப் பெறுவது. பெயர்கள் முறை மாறாமலும், அவ்வவற்றிற்கு ஏற்ற எதுகை மோனை முதலிய சொல்லமைதி கள் கெடாமலும், அசை சீர் தளை முதலியன கெடாமலும், பொருள் நலம் முதலியன சிதையாமலும் பாடப் பெறல் வேண்டு மாதலின், இது மிகவும் அருமை யும் பெருமையும் வாய்ந்ததாதலை எண்ணி யுணரலாம்.

*விளங்கியசீர்ப் பிரமனூர் வேணுபுரம்*
*புகலிவெங் குருமேற் சோலை*
*வளங்கவரும் தோணிபுரம் பூந்தராய்*
*சிரபுரம்வண் புறவம் மண்மேல்*
*களங்கமிலூர் சண்பைகமழ் காழிவயம்*
*கொச்சை கழுமலம்என் றின்ன*
*இளங்குமரன் தன்னைப்பெற் றிமையவர்தம்*
*பகையழிவித் திறைவ னூரே*

இதன்கண் சீர்காழிக் குரிய 12 பெயர் களும் முறைமாறாமல் வந்திருத்தலும், இங்ஙனமே ஏனைய பிற பாடல்களிலும் தவறாமற் பயின்று வந்திருத்தலும் கண்டு கொளற்குரியது,

*(13)* **கோமூத்திரி:** ஒரு பசுவானது நடந்துகொண்டே சிறுநீர் பெய்யும் போது, அந்நீர் ஒழுகிய தாரையானது எவ்வாறு நெளிந்த வடிவுடன் மாறி மாறிக் காணப்படுமோ, அவ்வாறு பாடப் பெறும் கோமூத்திரி என்னும் சித்திர

கவியாகும். "**பூமகனூர் புத்தேளுக்கு இறைவனூர்**" எனத் தொடங்கும் பதிகம், இதற்கு உதாரணம் ஆகும். இதனை "**வழிமுடக்கும் ஆவின்பாச்சல்**" எனத் திருஞான சம்பந்தர் குறிப்பிட்டருளியிருக்கின்றார்.

## 14. திருத்தாளச் சதி:

திருஞான சம்பந்தர் திருக்கோலக் காவில் இறைவன்பாற் பொற்றாளம் பெற்றவராதலின், தாளக் கணக்கின் ஒலிநுட்பங்கள் பலவும் அமைய, அரிய முறையிற் பாடிய "பந்தத்தால் வந்தெப்பால்" என்னும் தொடக்கம் உடைய திருப்பதிகம் 'திருத்தாளச் சதி' என வழங்கும். இப் பதிகத்தின் சிறப்பினை "ஏழே ஏழே நாலே மூன்றிசை இயல்பா" எனத் திருஞான சம்பந்தர் தாமே புகழ்ந்து போற்றி யிருத்தல் நினைந் துணரற்பாலது. 'தேமாங்காய் தேமாங்காய் புளிமா தேமா கூவிளம் தேமா தேமா தேமாங்காய் கருவிளம் கருவிளங்காய்' என்னும் வாய்பாடு அமைய, இப்பதிகம் பாடப் பெற்றுள்ளது.

## 15. யாழ்மூரி :

இதனை 'யாழ்முரி' எனவும், 'யாழ் மூறி' எனவும் கூட வழங்குவர். தேவாரத் திருப்பதிக இசை, கருவிகளின் அளவுபடாத சிறப்பும் மாட்சிமையும் செறிந்தது என்னும் உண்மையை உலக மக்கள் உணர்ந்து கொள்ளும்படி பாடப் பெற்ற "மாதர் மடப் பிடியும் மட அன்னமும் அன்னதோர்" எனத் தொடங்கும் திருப்பதிகம். திருநீலகண்ட யாழ்ப் பாணர் தம் யாழில் இதனை இசைக்க இயலாதவராகி, இறையருள் இசைநலத்தின் பெருமையை உணர்ந்தனர் என்பர். இயற்றமிழ் நலமும் இசைத்தமிழ் நலமும் ஒருங்கே சேர்ந்த இத் திருப்பதிகத்தின் சிறப்பு, சைவத் தமிழுலகம் நன்கறிந்தது ஒன்றாகும்.

## முடிவுரை :

இங்ஙனமெல்லாம் திருஞான சம்பந்தர் பாடல்களிற் பலப்பல புதுமைகளையும் வியத்தகு நுட்பங்களையும் காணலாம். பழைய முறைகளையே பின்பற்றிச் செல்லும், தன்மையானது புதிது புதிதாகப் படைத்தியற்றும் திறனுக்குப் பெரும்பாலும் பகையாகவே அமைகின்றது' (4) எனத் திருவுள்ளங் கொண்டு, தமது காலத்தில் தமிழ் நாட்டில் ஒருவகைப் புதுமையையும், புரட்சியையும், மறுமலர்ச்சியையும், சீர்திருத்தத்தினையும் விளைத்து, நம் தமிழ் மக்களுக்குப் பல்லாற்றானும் புத்துணர்ச்சியும் புத்துயிர்ப்பும் ஊட்டியருளிய திருஞான சம்பந்தப் பெருமானின் சிறப்பினை யுணர்வதற்கு, இன்னோரனைய பல புதுவகைப் பாடல்களை ஆராய்தலும் ஒரு நெறியாகும். '**கிளியோபேட்ரா**வின் மூக்கின் அமைப்பு இன்னும் சிறிது நீண்டோ குறுகியோ மாறியமைந்திருந்தால், உலக வரலாறே முற்றிலும் மாறிப் போய் அமைந்திருக்கக் கூடும்' என, அறிஞர் ஒருவர் குறிப்பிடுகின்றார் (5).

அதன் உண்மை எங்ஙனமாயினும், திருஞான சம்பந்தப் பெருமான் போன்ற நமது சமய ஆசிரியர்கள் தோன்றாதிருப்பின், நமது தமிழ்நாட்டின் வரலாறே முற்றிலும் சீர்குலைந்து மாறிப்போய் ஒழிந்திருக்கக்கூடும். அங்ஙனம் கேடு நேராமற் காத்து நின்று, சங்க காலத்தில் வழங்காத இத்தகைய பலப்பல புது வகைக் கவிதைகளை மிகமிக வியக்கத் தகும் வகையிற் பாடிக் காட்டி, நம் தமிழ் நாகரிகப் பண்பாட்டின் நலங்களையெல்லாம் அழிந்து படாமல் வளர்த்தளித்த அரும்பெருஞ் சிறப்பு, "**நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிய**" நம் ஞான சம்பந்தர்க்கே உரியதாகும்.

---

(4) "Conformity is often the enemy of creativity".

(5) "If Cleopatra's nose had been an inch longer or shorter, all history would have been changed" — Blaise Pascal.

# சிவஞான சுவாமிகள்

**முன்னுரை:**

சிவஞான சுவாமிகள் இற்றைக்கு ஏறத்தாழ 180 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்திருந்த பெரும்புலவர்! தமிழ் நாட்டில் அண்மைக் காலத்தில் விளங்கிய பெரும்புலவர்களின் விசையில், தலை சிறந்த ஒருவராகத் திகழ்பவர் நம் சுவாமிகள். தமிழ்ப் புலமை யுலகிலும், சைவசித்தாந்தத் தத்துவ வுலகிலும், அனைவராலும் பெரிதும் மதித்துப் போற்றப் பெறுபவர் சிவஞான சுவாமிகள். மகாவித்துவான் **மீனாட்சி சுந்தரம் பிள்ளை**, ஆசிரியர் **மறைமலை அடிகள்** போன்ற எத்துணையோ பல பேரறிஞர்கள், நம் சுவாமிகளைத் தெய்வநிலையில் வைத்துப் போற்றிச் சிறப்பித்துப் பாராட்டி ஒழுகி வந்துள்ளனர்.

**பலதுறைக் கலைஞர்:**

புலமை நலத்திற் குரிய துறைகள் எத்துணையுண்டோ, அத் துறைகள் எல்லாவற்றிலும் சிவஞான சுவாமிகள் பேராற்றல் பெற்றுப் பிறங்கி யிருந்தனர். புலமை **நெறியில்** அவர் தொடாத துறையுமில்லை; தொட்டுப் பொன்னாக்காத பொருளும் இல்லை (1). இலக்கணம், இலக்கியம், கவிதை, உரை நடை, மொழிபெயர்ப்பு, கவிதை, ஆராய்ச்சி, மறுப்புரை என்னும் இன்னோரன்ன பலவற்றிலும் சிவஞான சுவாமிகள் ஒப்புயர்வற்ற பெருந்தகையாளர். இத்துறைகள் அனைத்தினிலும் அவர் பல அரிய பெரிய நூல்களை இயற்றி அளித்திருக்கின்றார்!

---

(மூல இலக்கியம்—தொடர்ச்சி)

அதுபற்றியே, இவற்றின் அருமை பெருமைகளையெல்லாம் ஆராய்ந்து நன்கினிது உணர்ந்தவர் ஆகிய ஆசிரியர் **சேக்கிழார்** பெருமான், இன்னோரனைய ஞானசம்பந்தர் பாடல்களையெல்லாம் நம் மனோர்க்குப் பட்டியிட்டுத் தொகுத்துக் காட்டி, அவற்றின் நலங்களை நமக்குத் தெருட்டுதற் பொருட்டு, அவற்றை **'மூல இலக்கியம்'** என விதந்தெடுத்து, வியந்துரைத்துப், புகழ்ந்து போற்றி மகிழ்வாயினர் என்பது!

செந்தமிழ் மாலை விகற்பச்
செய்யுட்களால் மொழிமாற்றும்

வந்தசொற்சீர் மாலை மாற்றும்
வழிமொழி எல்லா மடக்குச்

சந்த இயமகம் ஏக பாதம்
தமிழ்இருக்குக் குறள்சாத்தி

எந்தைக் கெழுகூற் றிருக்கை
ஈரடி ஈரடிமேல் வைப்பு;

நாலடிமேல் வைப்பு மேன்மை
நடையின் முழுகும் இராகம்

சால்பினில் சக்கரம் ஆதி
விகற்பங்கள் சாற்றும் பதிக

மூல இலக்கியம் ஆக
எல்லாப் பொருள்கோளும் முற்ற

ஞாலத் துயர்காழி யாரைப்
பாடினர் ஞானசம் பந்தர்!

—பெரிய புராணம்

[சீர்காழியில் ஸ்ரீ சட்டைநாத சுவாமி கோயிற் பெருவிழாவில், 'திருஞான சம்பந்தர்' என்னும் பொருள் பற்றி நிகழ்த்திய சொற்பொழிவினைத் தழுவியது. (9-5-65) —ஆசிரியர்]

**எல்லை தேர்ந்தவர்:**

சுருங்கக் கூறலுறின் அவரை ஒரு பெரும் **பல்கலைக் குரிசில் (2), புலமை வல்லாளர் (3)** என்று கூறுதல் பெரிதும் பொருந்தும். உரையாசிரியர்களிற் **சேனா வரையர்** போன்று, சிவஞான சுவாமிகளும் **'வடநூற்கடலை நிலைகண்டு உணர்ந்தவர்;** கம்பர் இராமபிரானைக் கூறுமாறு போல, நாமும் இவரைத் **'தென்சொற் கடந்து வடசொற் கடற்கு எல்லை தேர்ந்தார்'** என்று குறிப்பிடின், அஃது உண்மையாகுமே யன்றி, வெறும் புகழ்ச்சி யாகாது.

**மறுக்கவும் நிறுக்கவும் வல்லவர்:**

"கல்வி தறுகண் இசைமை கொடை எனச் சொல்லப்பட்ட பெருமிதம் நான்கே" எனத் **தொல்காப்பியனார்** குறிப்பிடும் நான்குவகைப் பெருமிதத்துள், கல்வி பற்றிய பெருமிதத்துக் குரியவராகப் பிறங்கியவர் நம் சிவஞான சுவாமிகள். **'வல்லான் வகுத்ததே வாய்க்கால்'** என்பதற் கேற்ப, எக்கொள்கையினையும் தம் கல்வி வல்லமையால் நிறுக்கவும் மறுக்கவும் வல்லவர் அவர்! இலக்கண விளக்கச் சூறாவளி, கம்பராமாயண முதற்செய்யுட் சங்கோத்தர விருத்தி, சிவசமவாத உரை மறுப்பு, எடுத்து என்னும் சொல்லுக்கு இட்ட வைரக்குப்பாயம் முதலிய நூல்கள், சுவாமிகளின் அளப்பருங் கல்வியாற்றலை விளக்கும் நல்ல பெருஞ்சான்றுகளாக அமையும்.

**பேருரையாளர்:**

சுவாமிகள் **'மதிநுட்பம் நூலோடு உடையவர்'.** அவர்தம் **'நுண்மாண் நுழைபுலம்'** நினைத்தொறும் வியப்பும் விம்மிதமும் விளைப்பது. 'தவத்தால் மனம் தூயராய் இறையருள் பெற்றோ' அவர், உயர் சிவஞான போத நூலுக்கு உரை வகுத்தனராதல் வேண்டும். வடமொழியிற் சங்கரர், இராமாநுசர், மத்துவர் போன்ற சான்றோர்கள் இயற்றியருளிய பேருரை நூல்களைப் போலவே, தமிழ் மொழியில் இவர் இயற்றியருளிய **சிவஞான போத மாபாடியம்,** சிவஞான போதச் சிற்றுரை, சிவஞான சித்தியார் உரை முதலியன, ஈடும் எடுப்பும் அற்றுப் பீடு மிக்குத் தலைசிறந்து திகழ்கின்றன.

**அறிவின் பிழம்பு :**

'அன்பெலாம் ஒரு பிழம்பெனத் திரண்டவர் **கண்ணப்பர்**' ஆதல் போல, அறிவெலாம் ஒரு பிழம்பெனத் திரண்டவர் சிவஞான சுவாமிகள் எனலாம். **திருஞான சம்பந்தர்** போலச் சிவஞான சுவாமிகளும் 'ஞானத்தின் திருவுருவம்' என்றலிற் பிழையில்லை.

**பாண்டித்துரைத் தேவர் :**

மதுரை மாநகரில் நான்காம் தமிழ்ச் சங்கத்தினை நிறுவிய (1905) செந்தமிழ்ப் பெருஞ்செம்மல் ஆகிய இராமநாதபுரம் **பாண்டித்துரைத் தேவர்** அவர்கள், சிவஞான சுவாமிகளின் அரும்பெறல் நூல்களை அருமையறிந்து பலகாலும் பயின்றுணர்ந்து மகிழ்ந்து இன்புற்றவர் ஆவர்! சுவாமிகளை அவர் தம்முடைய 'வழிபடு தெய்வம்' எனவே கொண்டு ஒழுகி வந்தார். சுவாமிகள் திறத்தில் அவர்க்கு இருந்த அன்பும், மதிப்பும், பற்றும் அளப்பரியன. தம்முடைய பாடல் ஒன்றில், கல்வியிற் பெரிய சுவாமிகளை உயிர்களிற் பெரிய யானையாக, அவர் உருவகம் செய்து அழகுறப் பாடுகின்றார். ஆயிரம் படைவீரர்கள் சேர்ந்தாலும் யானை ஒன்றின்முன் நிற்கலாற்றாமை போல, எத்துணைப் புலவர்கள் கூடினரெனினும், அவர்களெல்லாம் புலமைத்துறையில் நம் சுவாமிகளின் முன் நிற்கலாற்றார் என்பது கருத்து.

**அழகிய உருவகம் :**

இங்ஙனம் சுவாமிகளை ஓர் இணையற்ற புலமை யானையாக உருவகம் செய்த பாண்டித்துரைத்தேவர், யானைக் குரிய இயல்புகளெல்லாம் நம் சுவாமிகளுக்கும்

(1) "He touched nothing which he did not adorn"
—Samuel Johnson on Goldsmith.

(2) Versatile Genius

(3) Intellectual Giant

அமையும் வண்ணம் அழகுற இயைத்துப் பாடுகின்றார். கடலிற் குளித்தல், சங்கிலியை அறுத்தல், தறியை (தூணை) வீழ்த்துதல், தருக்களை அகழ்ந்தெறிதல், முகபடாம் அணிதல், இருமருங்கும் மணிகள் இரட்டி ஒலிப்ப வருதல், மதம் பெருக்கல் முதலியன, யானைக்குரிய இயல்புகள் ஆகும்.

**வெற்றி வாரணம் :**

எனவே, சிவஞான சுவாமிகள் ஆகிய வெற்றி வாரணம், கலைதேர் நமச்சிவாய குருவின் கருணைக் கடலில் திளைத்தாடுகின்றது; உலகப் பற்றுகள் ஆகிய சங்கிலித் தொடரை அறுத்தது; காமம் ஆகிய கட்டுந்தூணை விழும்படி செய்தது; உலகம் ஆகிய சோலையில் நுழைந்து, அங்கேயுள்ள பலவேறு சமயங்கள் ஆகிய மரங்களையும் அசைத்து ஆட்டி அடிவேரோடு அகழ்ந்தெறிந்து மறுத்தொழித்தது; இறைவனின் திருவருளையே முன்னிட்டு முகபடாம் என அணிந்து நின்றது; வேதம் ஆகமம் என்னும் பொது நூல் சிறப்பு நூல்களாகிய இருதிற மணிகளும் முழங்கச் சைவ சித்தாந்தம் என்னும் மத நீரினைப் பொழிந்து கொண்டு, பெருமிதம் தோன்ற உலகம் முற்றும் வெற்றியோடு சுற்றி உலாப் போதருகின்றது! என்னும் கருத்து அமையும் படியும், பலவகைச் சொற்பொருள் நலங்கள் நிரம்பித் துளும்பும் படியும், பின்வரும் அழகிய பாடலைப் பாடுகின்றார்!

கலைதேர் நமச்சி வாயகுரு
கருணைக் கடலில் திளைத்தாடிக்,
கலகப் பாசத் தொடர்அறுத்துக்
காமத் தறியை அறவீழ்த்தி,
அலையும் சமயத் தருக்களைக்கீழ்
அடிவே ரோடும் அகழ்ந்தெறிந்திட்டு,
அருளின் படாத்தை முகமேற்கொண்டு,
ஆதி வேதா கமங்களென்னும்
தொலையா மணிகள் இருமருங்கும்
தொனிக்கச் சைவ மதம்பொழிந்து,
துங்க மோடும் உலகமுற்றும்
சுற்றும் வெற்றி வாரணமே!
மலையா தருளும் முனிவர்சிகா .
மணியே! வருக! வருகவே!
வளமார் துறைசைச் சிவஞான
வள்ளால்! வருக! வருகவே!

சிவஞான சுவாமிகளின் சிறந்துயர்ந்த இணையற்ற பெரும்புலமைப் பெற்றியினை, இப்பாடல் எத்துணைச் சுவையும் அழகும் பொலிய இனிதெடுத்து விளக்குகின்றது பார்மின்கள்! சுவாமிகளின் அருமை பெருமைகளை யுணர்த்துதற்கு, இவ்வினிய பாடல் ஒன்றே அமையும் எனத் தடையும் உண்டோ?

பண்புயர் செந்தமிழ்ப் பாண்டித் துரைத்
தேவர்
எண்பெருக யானை எனவியந்தால்,—
நுண்புலமைத்
தோன்றல் உயர்சிவ ஞான சுவாமிகள்சீர்
ஏன்றளந்து கூறவல்லார் யார்?

—ஆசிரியர்

**சிவஞான போதப் பேருரை :**

சிவஞான சுவாமிகள் தோன்றியருளிற்றிலராயின், சைவசித்தாந்தத் தத்துவக் கொள்கை, இந்நாளில் இத்துணை விளக்கம் பெற்றிருத்தல் இயலாது. சுவாமிகளின் சிவஞானபோதப் பேருரை, **நீலகண்டர் சங்கரர் இராமாநுஜர் மத்துவர்** முதலிய சான்றோர்கள் **பிரம்ம சூத்திரம்** முதலிய நூல்களுக்கு வகுத்தருளிய பேருரைகளுக்கு நிகரானது எனலாம். வடமொழி தென்மொழி என்னும் இருபெரு மொழிகளினும் புலமை நிரம்பப் பெற்று, தமிழில் மிகச் சிறந்த எழில்நலஞ் சான்ற உரைநடை வரையும் திறமும் வாய்ந்து, தாம் இயற்றியருளிய பற்பல நூல்களால் நம் தமிழ் மொழியினைப் பொற்புற மிக வளம்படுத்தி, வடமொழியறிவு வேண்டும் என்னும்

யாப்புறவு இன்றியே, சைவ சித்தாந் தத்தினை யாவரும் தம்முடைய நூல் களின் துணைகொண்டு எளிதினிதே தமி ழிற் கற்றுணருமாறு செய்துள்ள சுவாமி களின் தொண்டு, நாம் பெரிதும் நன்றி யுடன் பாராட்டுதற் குரியது. சைவ சித்தாந்த மெய்ப்பொருள் நுட்பங்களை விளக்குதலில், சுவாமிகள் ஆற்றியுள்ள தொண்டு எல்லையில்லாதது. 'நீனும் அத்தொண்டின் நீர்மை நினைக்கில் ஆர் அளக்க வல்லார் ?'

**காஞ்சிப் புராணம் :**

சைவ சித்தாந்தத் தத்துவப் பொருள் நுட்பங்களை, உரையாசிரியர் என்னும் நிலையில் நின்று விளக்குவது மட்டுமே யன்றி, ஒரு பெருங் கவிஞராகவும் திகழ்ந்து, அவை தம்மை நம்மனோர்க்குப் புலங்கொள விளக்கும் பெருந்தகையாக வும் சுவாமிகள் இலங்குகின்றார்! இதனை அவர் இயற்றிய **காஞ்சிப் புராணம்** என்னும் கவின்மிகு நூலிற் காணலாம். "கவிஞர்களின் இயல்பான உண்மை உள நிலைகள், அன்னோர் அவ்வப்போது கை யாளும் உவமைகளின் வாயிலாக நிழ லிட்டுப் புலனாகும்" என ஆராய்ச்சி யாளர்கள் கூறும் உண்மையினை, நம்மு டைய சுவாமிகள் காஞ்சிப் புராணத்தின் கண் கையாளும் சைவ சித்தாந்த உவ மைகள், தகவுறப் பெரிதும் வலியுறுத்து கின்றன. ஈண்டு ஒரு சில எடுத்துக் காட்டுகளை மட்டும் காண்போம் :

(1) சிவஞான முனிவர் தாம் இயற் றும் காஞ்சிப் புராணம் என்னும் நூலுக்கு அவையடக்கம் கூறுகின்றார். 'என்னுடைய பாடல்கள் வெறும் பிதற் றுரையாக இருந்தாலும், திருவே கம்பரின் தூய கதையினை உள்ளடக்கிக் கொண்டிருத்தலால், குற்றமற்றதாகவே விளங்கும் ;— மாயா காரியப் பொருள் களாகிய **சாணம் மண் கல் செம்பு** முத லிய இழிந்த பொருள்களும் கூட இறை வனின் திருவுருவச் சிலைகளாகச் செய்யப் படுமாயின், அருள்வடிவங்களாக மாறித் தூய்மையுற்றுச் சிறப்போங்கித் திகழ் தல் போல. (பிதற்றுரை-மாயாகாரியப் பொருள்கள் ; நூலாதல்-சிலையாகி அருள் வடிவம் பெறுதல்).

மாயை காரிய உருக்களும்
எம்பிரான் வடிவம்
ஆய வேல், அவை அருள்மயம்
ஆகும் ; மற்று அதுபோல்
பேய னேன்பிதற் றுரையும்
ஏகம்பர் தம்பெருமை
தூய காதைஉள் ளுறுதலால்
துகளறத் தோன்றும்

(2) கார்காலத்தில் நல்ல பெருமழை பல நாட்கள் தொடர்ந்து பொழிகின்றது. அதனால் பறவைகளும் விலங்குகளும் வெளியே செல்ல இயலாமல் வருந்திக் கொண்டிருக்கின்றன. பின்னர் மழை நின்றொழிகின்றது. ஆயினும் **தூவானம்** விடாமல், மரஞ் செடி கொடிகளினின்று நீர்த்திவலைகள் காற்றினால் இடையீடின் றிச் சிதறிக் கொண்டுள்ளன. இங்ஙனம் அடைமழை விட்டும் செடிமழை விடா மையால், விலங்குகளும் பறவைகளும் மேலும் சின்னாட்கள் வருந்த நேர்டுகின் றன. இந்நிலைமை, ஞானம் எய்திய பொழுது ஆணவமலமானது வலிகுன்றித் தேய்ந்தொழியுமாயினும், **வாசனாமலம்** தாக்கி உயிரை மேலும் சிலகாலம் வருத்த முயலுதலைப்போல உள்ளது. (மழை நிற்றல் - ஆணவமலம் கெடுதல்; தூவா னம் தூற்றல் - வாசனாமலம் தாக்குதல்).

போதம்மே லாகப் பண்டே
புல்லிய மலநோய் தீர்ந்தும்
வாதனை தாக்கு மாபோல்,
மழைப்பெயல் மாறித் தீர்ந்தும்
காதல்செய் துறையும் புள்ளும்
மாக்களும் கவன்று நெஞ்சம்
நோதக மரங்கள் எல்லாம்
நுண்துளி துவற்றும் மாதோ !

(3) நந்தி மால்வரையிற் பலவேறு இடங்களில் தோன்றிப் பெருகி வீழு கின்ற அருவிகள் எல்லாம், ஒருங்கு கூடிச் சென்று பாலாற்றிற் கலந்து ஒன்றாகச்

சேருகின்றன. அஃது, ஒருவன் தான் எய்திய பலவேறு பிறவிகளிலும், பல வேறு புவனங்களையும் அடைந்து செய்து தேடிக்கொண்டு, அங்கங்கே விட்டுவிட்டு வந்துள்ள நல்வினை தீவினைகள் ஆகியவற்றின் தொகுதியானது, அவன் எய்தும் மறுபிறவியின்கண், அவன்பால் ஒருங்கே திரண்டு வந்து சேர்ந்து, தத்தம் பயன்களை விளைவிப்பது போல இருக்கின்றது. (பற்பல அருவிகள் - வெவ்வேறு வினைகள்; பாலாற்றிற் கலத்தல் - ஒருங்கு திரண்டுவந்து பயன் விளைவித்தல்).

பாரிடம் குழித்து வீழும்
 பல்வயின் அருவி யெல்லாம்

ஓரிகும் பாலி யாற்றின்
 ஒருங்குசென் றணையும் தோற்றம்,

சீரிய புவனந் தோறும்
 சிதறிய வினைகள் எல்லாம்

ஓரிடத் தொருவன் றன்பால்
 உடங்குசென் றுறுதல் போலும்!

(4) நந்தி மால்வரையில் வெவ்வேறு இடங்களில் தோன்றும் **அருவிகள்,** தனித்தனியாக ஓடிவந்து வீழ்கின்றன வாயினும், பின்னர் அவைகள் பாலாற்றிற் கலந்து கூடும் தோற்றம்; பலவழிகளும் ஓர் ஊரினையே சென்று சேர்தல் போலவும், பற்பல **மதங்களும்** முடிந்த முடிபாகிய அனுபவ நிலையில் வேறுபாடின்றி ஒன்ருகவே உணரப்படுதல் போலவும் உள்ளது.

விலகிவீழ் அருவித் தாரை
 வேறுவே ருக ஓடிக்

குலநதிப் பாலி வைப்பின்
 ஏகமாய்க் கூடும் தோற்றம்,

அலகில்பல் வழியும் மூதூர்
 அணிமையின் ஒன்ரு மாறும்

பலபல மதமும் ஈற்றின்
 ஒருவழிப் படலும் போலும்!

(5) பாலாறு ஒன்றே பற்பல கால்களாகப் பிரிந்து பாய்ந்து, வயல்களை வளஞ்செழிக்கச் செய்கின்றன. அத்தன்மை, "நவந்தரு பேதம் ஏக நாதனே நடிப்பன்" எனச் சிவஞான சித்தியார் கூறுவதற்கு ஏற்ப, ஒருவன் ஆகிய சிவபெருமானே, உலக உயிர்களையெல்லாம் காத்தருளுதற்பொருட்டுச் **சிவம் சக்தி நாதம் விந்து சதாசிவன் மகேசுவரன் உருத்திரன் திருமால் பிரமன்** என்னும் ஒன்பது நிலைகளையும் மேற்கொண்டு, பல் வேறு தொழில்களைப் புரிந்தருளுதலைப் போல விளங்குகின்றது. (பாலி - சிவ பிரான்; பற்பல கால்கள் - நவந்தரு பேதங்கள்).

ஒருவன் ஆகிய சிவபிரான்
 உலகுயிர் அளிப்பக்

கருணை கூர்ந்துமுன் நவந்தரு
 பேதமும் காட்டும்

திருவி கர்ப்ப, ஓர் பாலியே
 வயல்வளம் செழிப்பப்

பெருகு தண்புனல் பற்பல
 கால்களாய்ப் பிரியும்.

(6) உழவர்கள் பாலாற்று நீரினை வயல்களுக்குப் பாய்ச்சுகின்றனர். பல மடைகளின் வழியே பிரிந்து சென்று நீரானது வீணாகி விடாமல் தடுத்து, ஒரு மடையிலேயே நீரைச் செலுத்தி, அவர்கள் அதனை வயல்களுக்குப் பாய்ச்சுகின்றனர். இச் செய்கையானது, ஞான நெறியில் நிற்போர் தம்முடைய அறிவினை ஐம்பொறிகள் வழியாக ஐம்புலன்கள் மேலும் பரவிச் சென்று கெட்டொழியாமல் தடுத்து, அருளியல் நெறியில் இறைவனை நோக்கியே செல்லுமாறு ஒருமுகப்படுத்தி ஒழுகுதலைப் போலத் திகழ்கின்றது. (நீர் - மனம்; பல மடைகள் - ஐம்புலன்கள்; ஒரு மடை - அருளியல் நெறி).

பொறிகள் ஐந்தையும் புறஞ்செலாது
 அடக்கினர் நெறிக்கே

குறிகொ ளும்படி செலுத்து
 பேராளர்தம் கோள்போல்,

பிரிவு றும்பல மடைகளிற்
 பிழைத்திடா தொதுக்கிச்

செறித ரும்புனல் முழுவதும்
 அகன்பணை செறிப்பார்.

(7) உழவர்கள் தம்முடைய வயல்களில் மிகவும் பாய்ச்சிக் கட்டிவைத்துக் குழப்பிய நீரானது, கலங்கல் நீங்கித்

தெளிந்து வண்டல் மண் எல்லாம் வயலிற் படிந்து விட்டதும், அந்நீர் முழுவதும் வடிந்து செல்லும்படி, கீழ் மடையைத் திறந்து விட்டு விடுவார்கள். அவர்களின் செயல், **சிவஞானியர்கள்** தமக்கு ஞானம் மேலிட்ட அளவில், முன்னே தம்முடையன என்று பிழை படக் கருதி யிருந்த **தனுகரண புவன போகங்கள்** எல்லாவற்றையும், தமக்கு அவற்றைத் தந்தருளிய இறைவனிடமே ஒப்படைத்து விட்டு, அருளுணர்விற் றலைப்பட்டுத் தம் செயலற்று நிற்றலைப் போல இருக்கின்றது. (கலங்கல் தெளிதல் - ஞானம் மேலிடல்; நீர்கவிழ்த்தல் - இறைவன்பால் ஒப்படைத்தல்; உழவர் - சிவஞானிகள்).

அருள் விளங்கலும் உடல்பொருள்
ஆதிய பந்தம்
தரும் அவன்புடை எய்துறக்
கொடுத்திடும் தகைபோல்,
பெருக யாத்தநீர் கலங்கல்போய்த்
தெளிந்தபின் முழுதும்
மருவு சால்வழி வடிந்துறக்
கவிழ்ப்பர்கள் மள்ளர்.

(8) உழவர்கள் பயிரை அறுவடை செய்து, பின்னர்ப் பிணை அடிக்கின்றனர். அதுபோது வைக்கோலினின்று நெல் மணிகள் பிரிந்து குவிகின்றன. நெல் மணிகள் வைக்கோலினின்று பிரிந்ததும், பிணையடித்தலை நிறுத்தி, உழவர்கள் கடா மாடுகளைக் கட்டவிழ்த்து விடுகின்றனர். இவ்வியல்பு, உடலினின்றும் உயிரானது பிரிந்த அளவில், பிராரத்த கன்மங்களும் அப்பொழுதே முடிவுற்று அழிந்தொழிதலை உணர்த்துவதாக உள்ளது. (வைக்கோல் - உடல்; நெல் மணி - உயிர்; கடாமாடுகள் - பிராரத்த கன்மங்கள்).

உடலின் ஆவி பிரிந்தென ஊழ்வினைத்
தொடர்பு நீங்குவ தொப்ப, தொகுத்த நெற்
படலை வையினில் நீங்கிப் பகட்டினம்
அடையவும் தொடர் நீங்கி அகலுமால்

(9) பிணையடித்த பின்னர், உழவர்கள் நெல்லைக் காற்றெதிர் தூற்றுகின்றனர். அங்ஙனம் தூற்றுங்கால் வைக்கோற் பொடியும், நெற்பதர்களும் அகன்று விரைந்து பரந்தோடுகின்றன. இவ்வியல்பானது, இறையருளை எய்திச் **சிவஞானம்** பெற்றுளிரும் **சீவன்முத்தர்கள்** பால் இருந்து, ஐம்பொறி புலன்கள் அகன்றொழிதலை ஒத்திருக்கின்றது.

வை அகற்றி வளிஎதிர் தூற்றலும்
பொய் அகன்றவர் ஐம்பொறி போதல்போல்
கை அகன்று கழிவைப் பொடியொடும்
ஒய் எனப்பதர் அப்புறத் தோடுமால்

(10) தொண்டை நாட்டிற் பெரிய பெரிய ஏரிகள் பலப்பல உள்ளன. அவற்றில் மிகுதியான நீர்நாய்கள் இருக்கின்றன. அவைகள் ஏரியின் அலைகள் அலைக்கும் தோறும், மேலும் கீழும் சென்று துவண்டு வருந்தி உழலுகின்றன. இக்காட்சியானது, சுவை ஒளி ஊறு ஒலி நாற்றம் என்னும் ஐம்புலன்களின் வழிப்பட்டு மயங்கி நிற்கும் மனம், அங்கும் இங்கும் மேலும் கீழும் அலைந்து திரிந்து வருந்தும் நிலையினை நினைவூட்டுகின்றது. (நீர்நாய் - மனம்; அலைகளிற் சுழலுதல் - ஐம்புலன்களிற் சிக்கி வருந்தி யுழலுதல்).

சுவைஒளி ஊறொலி நாற்றமென்
றைந்தின் தொடர்பற்றிக்
கவர்படு நெஞ்சில் திரை திரை
தோறும் கடைநீர்நாய்
துவள எழும்பா முறைமுறை
கீழ்நீர்ச் சுழல்காட்சி,
எவரும் இறும்பூ துற வுள
ஏரித் தடம்எங்கும்.

**முடிவுரை.**

இங்ஙனம் கவிதை நலத்திலும், கற்பனைத் திறத்திலும், அரிய பெரிய சைவ சித்தாந்த நுட்பங்களை அழகிய உவமைகளாக ஆராய்ந்துணர்த்தும் சிறப்பிலும், இணையற்றுத் திகழும் காஞ்சிப்புராணம் போன்ற பல அரும்பெறல் நூல்களை ஆக்கி அளித்துள்ள சிவஞான சுவாமிகள், நம்மனோர் அனைவரும் போற்றி வழிபடத் தகுந்த நல்ல ஞானாசிரியர் ஆவர்! அவர்தம் நூல்களை யெல்லாம், நாம் கற்றுப் பயன் அடைவோமாக!

# திருச்சந்த விருத்தம்

(முன் இதழ்த் தொடர்ச்சி : பக்கம், 386)

குரக்கினப் படைகொடு
குறைகடலின் மீதுபோய்
அரக்கர் அங்கு அரங்க
வெஞ்சரம் துரந்த ஆதிநீ
இரக்க மண் கொடுத்தவற்கு
இருக்க ஒன்றும் இன்றியே
பரக்கவைத்து அளந்துகொண்ட
பற்ப பாதன் அல்லையே!

**(பொழிப்புரை)** குரங்குகள் ஆகிய திரளான படைவீரர்களைத் துணையாகக் கொண்டு, ஒலிக்கின்ற கடலின்கண் அணை கட்டி, அதன் மீது சென்று, அங்கே இலங்கையில் இருந்த **இராவணன்** முதலிய அரக்கர்கள் அழியும்படி, வெம்மையான அம்புகளை அவர்களின் மேற் செலுத்திய, வீரர்களில் தலைவன் நீயே! வாமநனுகச் சென்று நீ இரத்தற் றொழிலைச் செய்ய, நினக்கு மூவடி நிலத்தினைக் கொடுத்தவன் ஆகிய **மகாபலிக்கு**, அவன் குடியிருப்பதற்கு ஒருசாண் நிலமும் இல்லாதபடி, நின் திருவடியை மிகவும் பரவலாக வைத்து, மூன்றுலகங்களையும் அளந்து நினக்கே உரிமையாகும்படி செய்துகொண்ட, தாமரை போன்ற திருவடிகளையுடைய பெருமானும் நீயே யன்றோ?

**(குறிப்புரை)** அரங்க - அழியும்படி, வெம் - கொடிய, சரம் - அம்பு, துரந்த - செலுத்திய, ஏவிய; பற்பம் - தாமரை, பாதன் - திருவடிகளையுடையவன். "**இரக்கம்** ஒன்றும் இன்றியே" என்றும் பாடம் உண்டு. **பெரியவாச்சான் பிள்ளை** அவர்களின் பேருரையில், "பூமியில் அவனுக்கு ஒரு பதந்யாஸமும் சேவியாதபடி" என்று அருளிச் செய்யப் பெற்றிருத்தலால் "**இருக்க** ஒன்றும் இன்றியே" என்றும் பாடம் உண்டு எனத் தெரிகின்றது. (32)

---

**(வெண்பா)**

ஆய கலையனைத்தும் ஆய்ந்துணர்ந்து கற்றுவல்ல
**தூயசிவ ஞான சுவாமிகள்**தாம்,—நேயமிகக்
**காஞ்சிப் புராணம்** கவின்மிகச் செய்தளித்தார்,
தீஞ்சுவைகள் எல்லாம் செறித்து.

தலச்சிறப்பைச் சாற்றும் புராணங்கள் தம்முள்
கலைச்சிறப்பார் **காஞ்சிப் புராணம்**,—நலச்சிறப்புப்
பற்பலவும் வாய்ந்து, பயில்வார்க் கறிவூற்றும்;
பொற்புமிக ஓங்கிப் பொலிந்து.

தொட்ட இடந்தோறும் தூயசைவ சித்தாந்த
நுட்பங்கள் தோற்றி,உயர் நோக்கமைந்து,—மட்டில்லா
இன்பம் விளைக்கும்; இறையுணர்வில் தோய்விக்கும்;
நன்றுயர்காஞ் **சிப்புரா ணம்**.

—ஆசிரியர்.

**மின்னிறத்து எயிற்று அரக்கன்**
**வீழ வெஞ்சரம் துரந்து**
**பின்னவற்கு அருள்புரிந்து**
**அரசளித்த பெற்றியோய் !**
நன்னிறத்தொர் இன்சொல் ஏழை
பின்னை கேள்வ ! மன்னுசீர்ப்
பொன்னிறத்த வண்ணன் ஆய
புண்டரீகன் அல்லையே !

**(பொழிப்புரை)** மின்னலின் நிறத்தை யுடைய பற்களைக் கொண்ட இராவணன் மாளும்படி, கொடிய அம்புகளை அவன் மேல் ஏவி, அவன் தம்பியான விபீடணனுக்கு அருளுதலைச் செய்து முடி சூட்டு விழாவை நிகழ்த்தி வைத்த பெருந்தகையே! நல்ல நிறத்தையும், ஒப்பற்ற இனிய சொல்லையும் உடைய பெண் ஆகிய **நப்பின்னைப்** பிராட்டியின் காதலனே! நிலைபெற்ற சிறப்பினையுடைய, பொன் போன்ற நிறமும் அழகும் உடையவன் ஆகிய தாமரைக் கண்ணன் நீயே யாவாய்.

**(குறிப்புரை)** மின் - மின்னல், எயிறு - பல், பின்னவன் - தம்பி, பெற்றி - இயல்பு, பெருமை, ஏழை - பெண், பின்னை - நப்பின்னை, கேள்வன் - காதலன், கணவன். புண்டரீகம் - தாமரை, புண்டரீகன் - தாமரை போன்ற கண்களையுடையவன், **திருவள்ளுவர்,** திருமாலைத் 'தாமரைக் கண்ணன்' (குறள் : 1103) எனச் சிறப்பித்துக் குறிப்பிட்டிருத்தலும், இங்கு நினைவு கூர்தற்கு உரியது. (33)

**ஆதி ஆதி ஆதி ஓர்**
**அண்டம் ஆதி ஆதலால்**
**சோதி யாத சோதிநீ**
**அதுண்மையில் விளங்கினாய் !**
**வேதம் ஆகி வேள்வி ஆகி**
**விண்ணி னோடு மண்ணுமாய்**
**ஆதி யாகி ஆயன் ஆய**
**மாயம் என்ன மாயமே !**

**(பொழிப்புரை)** மூன்று வகையான காரணங்களும் நீயே ஆகின்றாய். ஒப்பற்ற பல அண்டங்களையும் படைத்து, அவை எல்லாவற்றையும் இயக்குபவனும் ஆய் விளங்குகின்றாய். ஆதலால், ஆராய்ந்தறிய வேண்டாத பேரொளிப் பொருளாக நீ திகழ்கின்றாய். அத்தகைய நின் இயல்பு, உண்மை நூல்களில் தெளிவுற வெளிப்படும்படி, நீ என்றும் விளக்கம் பெற்று நிற்கின்றாய். வேதங்களை நடத்துபவனாய், வேள்விகளால் வழிபடப் படுபவனாய், விண்ணுலகையும் மண்ணுலகையும் விரும்பியபடி செலுத்த வல்லவனாய், இங்ஙனமெல்லாம் எல்லாச் செயல்களுக்கும் நீயே மூல முதற் காரணனாகி விளங்கி நின்றும், நீ ஓர் எளிய இடையனாகப் பிறந்தருளிய மாயம், எத்தகைய வியக்கத் தக்கதொரு செயல் !

**(குறிப்புரை)** ஆதி - காரணம் **'ஆதி'** என்னும் சொல்லை மூன்றுமுறை ஆழ்வார் வழங்கி யிருத்தலால், இறைவன் உலகத்தின் தோற்றத்துக்குரிய மூவகைக் காரணங்களாகவும் விளங்குதல் சுட்டப் பெற்றது. மூவகைக் காரணங்களாவன ; உபாதான காரணம், ஸஹகாரி காரணம், நிமித்தகாரணம் எனப்படும். இவற்றை முறையே முதற்காரணம், துணைக்காரணம், வினை முதற் காரணம் எனவும் வழங்குவர். **குடம்** என்னும் பொருள் (காரியம்) தோன்றுதற்கு **மண்** உபாதான காரணம் ; **சக்கரம்** கோல் தண்ணீர் முதலியன சஹகாரி காரணம் ; **குயவன்** நிமித்த காரணம். இம்மூவகைப்பட்ட காரணங்களாகவும், உலகப் படைப்புக்கு இறைவன் விளங்குகின்றான் என்பது கருத்து. 'அண்டம் ஆதி ஆதலால்' என்புழி, **ஆதி** என்பது ஆகின்றாய் எனப் பொருள்படும். இதனை நிகழ்கால முன்னிலை ஒருமை வினைமுற்று என்பர். **'ஆகுதி'** என்னும் சொல் 'ஆதி' என இடைக்குறைந்து வந்தது. 'உண்மையில் விளங்கினாய்' என்புழி, **உண்மை** என்பது ஆகுபெயரால் உண்மை நூல்கள் ஆகிய வேதங்கள் முதலியனவற்றைக் குறித்தது. மாயம் - வியப்பு, வியத்தகு செயல் (34).

அம்பு உலாவு மீனும் ஆகி
ஆமை யாகி ஆழியார்
தம்பி ரானும் ஆகி மிக்கது
அன்பு மிக்கது அன்றியும்
கொம்பு அராவு நுண் மருங்குல்
ஆயர் மாதர் பிள்ளையாய்
எம்பி ரானும் ஆய வண்ணம்
என்கொலோ எம் ஈசனே.

**(பொழிப்புரை)** எங்கள் இறைவனே! தாங்கள் திருவாழியாழ்வானை யுடைய பரம புருஷனாய் இருந்து வைத்து, நீரில் உலாவி வாழ்கின்ற மீனாகியும், ஆமை யாகியும் தோன்றியருளி வியப்பை விளை வித்தீர்! மிகுந்த அன்பையும் காட்டி யருளினீர்! இதற்கு மேலும், வஞ்சிக் கொடியைப் போன்ற நுட்பமான இடை யுடைய இடைப்பெண்ணுக்குப் பிள்ளை யாகப் பிறந்து, எங்களின் மேலான தலை வனுமாக நின்ற சிறப்பு, எத்தகைய அற்புதம்!

**(குறிப்புரை)** அம்பு - நீர், 'ஆழியார் தம்பிரான்' திருவாழியாழ்வானை ஏந்திய மேலான தலைவன். திருவாழி ஏந்தி நிற்றல், பரத்துவத்திற்கும் அளவிலாற் றல் உடைமைக்கும் அறிகுறி. சிறப்புடை மை கருதி '**ஆழியார்**' என்றார். மிக்கது- இழிபொருள்கள் போலப் பிறந்தாலும் மேன்மையே விளங்க நிற்றல்; முன்னி லைப் பொருளில் வந்த படர்க்கை எனவும் கூறுவர். கொம்பு - வஞ்சிக்கொடி, அராவுதல் - தேய்த்தல், வருத்துதல் எனினுமாம் (35).

ஆட கத்த பூண்முலை அசோதை
ஆய்ச்சி பிள்ளையாய்
சாடு உதைத்து ஓர் புள்ளது ஆவி
கள்ள தாய பேய்மகள்
வீட வைத்த வெய்ய கொங்கை
ஐய பால்அமுது செய்து
ஆட கக்கை மாதர்வாய் அமுதம்
உண்டது என்கொலோ?

**(பொழிப்புரை)** பொன்னாற் செய்யப் பெற்ற அணிகலன்களை அணிந்த முலை களை யுடையவளாகிய **யசோதை** என் னும் இடையர்குல மகளுக்குப் புதல் வனாக உதித்தருளி, **சகடாசுரன்** என்ப வனைத் திருவடிகளால் உதைத்துக் கொன்று, இளங் குழந்தைகளைப் பற்றி வருந்தச் செய்கின்ற ஒரு பறவையின் வடிவுகொண்டு வந்த வஞ்சகி ஆகிய **பூதனை** என்னும் பேய்மகள் ஆனவள், நீ இறந்துபட வேண்டும் என்று, நின் உதடு களில் கொணர்ந்து வைத்த நஞ்சுதீற்றிய கொடிய முலையிலுள்ள நுண்ணிய பாலைத் திருவாயினாற் பருகி, பொன்வளைகளை அணிந்த கைகளையுடைய இடைக்குல மாதர்களின் உதடுகளிலுள்ள அமிழ்தத் தினை அருந்தியது, எத்தகைய வித்தகச் செயல்!

**(குறிப்புரை)** ஆடகம் - பொன், பூண் - அணிகலன்கள். யசோதை எனற் பாலது **அசோதை** என வந்தது. சாடு - சகடு, சகடாசுரன். புள் - பறவை. 'ஆவி கள்வதாய பேய்மகள்' - பூதனை. வீட - இறந்து போக, வெய்ய - கொடிய, ஐய - நுட்பமான, நுண்ணிய. பூதனை யின் பாலை யுண்ட நஞ்சுதீரும் பொருட்டு, ஆயர்குல மகளிரின் அதரபானம் ஆகிய அமிழ்தத்தினை யுண்டனை போலும் என்றபடி. (36)

—தொடரும்.

---

சேமநல் வீடும் பொருளும் தருமமும் சீரியநற்
காமமும் என்றிவை நான்கென்பார் ; நான்கினும் கண்ணனுக்கே
ஆமது காமம் அறம்பொருள் வீடிதற் கென்றுரைத்தான்
வாமனன் சீலன், இராமா நுசன்இந்த மண்மிசையே —திருவரங்கத் தமுதனார்.

# திருவாய் மொழி

(முன் இதழ்த் தொடர்ச்சி : பக்கம் 379)

**(முன்னுரை)** திருவாய் மொழியின், முதற் திருவாய் மொழியில் **நம்மாழ்வார்** பகவத் விஷயத்தில் ஆழங்காற் பட்டு அநுபவித்து மகிழ்ந்தார். இனி இவ் **விரண்டாம்** திருவாய் மொழியில், தாம் அநுபவித்து மகிழா நிற்கும் இறையருளின்பம் தனியே அநுபவிக்கத் தக்கதன்று ஆதலின், சேதநர்கள் ஆகிய உலக மக்கள் எல்லோரையும் கூடத் தம்மோடு சேர்த்துக் கொள்ளுதலை விரும்பி, இறைவனின் பெருமைகளையும், உலகியற் பொருள் நுகர்ச்சிகளின் நிலையாமை இழிதகவு முதலியனவற்றையும் எடுத்துரைத்து, உலகியல் வேட்கைகளை ஒழித்துவிட்டு, இறை வழிபாட்டில் ஈடுபட்டொழுகி உய்யுங்கள் என்று, அறிவுறுத்தி யருளத் தலைப்படுகின்றார்.

வீடுமின் முற்றவும்
வீடுசெய் தும்முயிர்
வீடுடை யானிடை
வீடு செய்ம்மினே

**(பொழிப்புரை)** இறை வழிபாட்டிற்குத் தடையான உலகியற் செயல்கள் அனைத்தையும் விடுத்தொழியுங்கள்; அங்ஙனம் விடுத்தொழித்து, உங்களுடைய உயிர் ஆகிய பொருளை, வீட்டுலகத்திற்கு உரிமையுடையவன் ஆகிய இறைவனிடத்திலே, ஒப்படைத்து அடைக்கலமாகச் சாருங்கள்.

**(குறிப்புரை)** 'விடுமின்' என வருதற்குரிய சொல், 'வீடுமின்' என நீட்டல் விகாரம் ஆயிற்று, **திருவள்ளுவர்** கல்வியின் இன்றியமையாமையினை வலியுறுத்த எடுத்த எடுப்பிலேயே 'கற்க' என விதித்தவாறு போல, இங்கே ஆழ்வாரும் உலகியல் நுகர்ச்சிகளின் தீங்கினையுணர்த்துவதற்கு முதல் முதலிலேயே **'வீடுமின்'** எனப் பணித்தருளினார். தீயனவற்றுள் ஒன்றையேனும் தவிராது, அவையனைத்தையுமே ஒருங்கே விடுதல் வேண்டுமாகலின் **'முற்றவும்'** என்றார். வீடு செய்தல்—அறவே விடுத்து ஒழித்தல், **'உம் உயிர் வீடுடையான்'** என்னும் அழகிய தொடர், பலவகையிற் பொருள் கொள்ள இடந்தரும். (1) உங்களுடைய உயிரையும், அதற்கு வீடாகிய உடலையும் தனக்கு உடலாக உடைய இறைவன் (2) உங்களுடைய உயிரைத் தனக்கு வீடாக உடைய இறைவன், **வீடு**—விடும் இடத்தில். **வீடு உடையான்**—வீடாகிய பரமபதத்தை யுடைவன். **வீடு செய்ம்மின்**—ஸமர்ப்பியுங்கள்; ஒப்படையுங்கள். **'வீடு இசைமினே'** என்றும் பாடம், அதற்கு 'விட்டுவிட இசையுங்கள்' என்பது பொருள். **'உம் முயிர்'** என்றது, என்னுடைய சுய நலங் கருதிச் சொல்கின்றேன் அல்லேன்; உங்கள் நன்மை கருதியே கூறுகின்றேன் என்னும் குறிப்பினை உட்கொண்டுள்ளது. (1)

மின்னின் நிலையில
மன்னுயிர் ஆக்கைகள்
என்னுமி டத்திறை
உன்னுமின் நீரே

**(பொழிப்புரை)** உயிரானது பொருந்தி நிற்கின்ற உடல்கள், மின்னலைப் போன்று நிலையுடையன அல்ல என்று, நூல்களும் பெரியோர்களும் கூறிவரும் தன்மையினை, நீங்களே சிறிது சிந்தித்துப் பாருங்கள்.

**(குறிப்புரை)** மின்னின்—மின்னலைப் போல, மின்னலைக் காட்டிலும், ஆக்கைகள்—உடல்கள், மன்னுதல்—பொருந்துதல். இறை—சிறிது, கடவுளை எனினும்

ஆம். உன்னுமின்—சிந்தித்து உணருங்கள். நீரே—நீங்களாகவே; யான் கூறுதற்காக அன்றி என்றபடி. (2)

நீர் நும தென்றிவை
வேர் முதல் மாய்த்து இறை
சேர்மின் உயிர்க்கு அதன்
நேர்நிறை யில்லே

**(பொழிப்புரை)** அகப்பற்று புறப்பற்று எனப்படும் இவற்றை, வேரோடு முதலும் கெடும்படி அழித்து, இறைவனை அடையுங்கள், உயிர் நலம் பெறுதற்கு அதனைப் போன்ற நிறைவு வேறு இல்லை.

**(குறிப்புரை)** யான் என்பது அகப்பற்றும், எனது என்பது புறப்பற்றும் ஆகும். இவற்றை முறையே அகங்காரம், மமகாரம் என்பர் வடநூலார். விடவேண்டியன பலவற்றையும் தொகுத்துச் சுருக்கிக் கூறியபடி. '**யான் எனது**' என்று கூறுவதே மரபு ஆயினும், 'ஒழுக்கம் உடையவர்க்கு ஒல்லாவே தீய வழுக்கியும் வாயாற் சொலல்' எனத் **திருவள்ளுவர்** கூறியவாறு, வழிமொழுதல் (அநுவாதம்) பற்றிய முறையானும் கூற இசையாமல், அக் கருத்துப்பட '**நீர் நுமது**' என்று ஆழ்வார் குறிப்பிட்டருளினர். "நான் எனது என்று தம் வாக்காலே சொல்ல மாட்டாரே, நாக்கு வேம் என்று" என்பது **ஈட்டுரை**. "யான் எனது என்னும் செருக்கறுப்பான் வானோர்க்கு உயர்ந்த உலகம் புகும்" என்னும் **திருக்குறள்** இங்கு இயைபு பற்றி எண்ணத் தக்கது. (3)

இல்லதும் உள்ளதும்
அல்லது அவன் உரு
எல்லையில் அந்நலம்
புல்குபற்று அற்றே

**(பொழிப்புரை)** அந்த எம்பெருமானுடைய சொரூபமானது, அழிந்து இல்லையாகும் அசத்தின் தன்மையை யுடையதும் அன்று; என்றும் அழியாமல் உள்ளனவாகிய சத்துப் பொருள்களின் தன்மையை யுடையதும் அன்று. எல்லையில்லாத நல்ல அந்தப் பரம் பொருளினையே, பிற பொருள்களிற் செல்லும் பற்றுதல்களை நீக்கிவிட்டுத் தழுவிப் பிடித்துக் கொள்ளுங்கள்.

**(குறிப்புரை)** வைஷ்ணவ சித்தாந்தத்தில் யாவும் உள் பொருள்களே யன்றி, இல்லாத பொருள் என்பது எதுவும் இல்லை. ஆதலால் இங்கே **இல்லது** என்பதற்கு அசத்து, அழியும் தன்மை யுடையது எனப் பொருள் கொள்ளுதல் வேண்டும். எனவே **உள்ளது** என்பது, அழியாத பொருள் ஆகிய சத்து என்பதனைக் குறிக்கும். இல்லது-அசத்து, அசேதனம், ஜகம். உள்ளது-சத்து, சேதனம் ஜீவன். இவ்விருதிறத்தினையும் கடந்துநிற்கும் இறைவனின் தன்மை '**எல்லையில் அந் நலம்**' எனப் பெற்றது. நலம்-இன்பம், ஆனந்தம். இறைவன் இன்பமயமாக இருக்கும் இயல்பினைப் புலப்படுத்தியபடி. (4)

அற்றது பற்றெனில்
உற்றது வீடுயிர்
செற்றது மன்னுறில்
அற்றிறை பற்றே

**(பொழிப்புரை)** உலகியற் பற்று அற்றொழிந்தது என்னும் அளவிலேயே, உயிரானது விடுபேற்றை அடைந்துவிட்டது. அந்த வீடுபேற்றின்பத்தை வெறுத்து, நிலைநிற்கும்படி இறைவனை அணுக முயன்றால், அப் பெருமானுக்கென்றே அற்றுத் தீர்ந்து அந்த எம் பெருமானைப் பற்றிக் கொள்க.

**(குறிப்புரை)** வீடு-மோட்சம். '**உற்றது**' என இறந்த காலத்தாற் கூறினர், விரைவும் தெளிவும் பற்றி. "ஏகினன்" எனத் **திருக்குறள்** கூறியவாறு போல. **செற்று + அது** எனப் பிரிக்க. செற்று-வெறுத்து, **மன்ன + உறில்** என்பது 'மன்னுறில்' எனவந்தது. **அற்று**-அற்றுத் தீர்ந்து, முழுஅடிமை பூண்டு. பற்று-பற்றுக; வியங்கோள் வினைமுற்று.

[இத் திருவாய் மொழித் திருப்பாடலை ஆசிரியர் பரிமேலழகர் "பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும் மற்று நிலையாமை காணப்படும்" (349) என்னும் திருக்குறள் உரையில் மேற்கோளாக எடுத்தாண்டுள்ளமை அறிந்து நினைவு கூர்தற்குரியது. "காரணம் அற்ற பொழுதே காரியமும் அற்றதாம் முறைமை பற்றிப் 'பற்றற்ற கண்ணே' என்ருர்; 'அற்றது பற்றெனில் உற்றது வீடு' என்பதூஉம் அதுபற்றி வந்தது."] 5

பற்றிலன் ஈசனும்
முற்றவும் நின்றனன்
பற்றிலை யாய் அவன்
முற்றில் அடங்கே

**(பொழிப்புரை)** இறைவன் எல்லாவற்றையும் எல்லாரையும் ஆளும் தலைமையுடையவன் ஆயினும், அடியார்களுடன் பொருந்தியிருக்கும் பற்றினையே தனக்கு இயல்பாக உடையவன். மேலும் அவனே தன் அடியார்களுக்குத் **தாரகம் போஷகம் போக்கியம்** என்னும் எல்லாப் பொருள்களாகவும் விளங்கியருள்கின்ருன். ஆதலின் அவ்விறைவனுடன் பொருந்தி நிற்கும் பற்றினையே நினக்கு இயல்பாகக் கொண்டு, அவனுடன் எல்லாத் துறைகளிலும் ஒன்றி அடங்கி ஒழுகுக.

**(குறிப்புரை)** ஈசன்-ஆளும் தலைமையுடையவன். 'பற்றிலன்' என்னும் தொடர், 'பற்றில்லாதவன்' என்றே பெரும்பாலும் பொருள் படும். ஆனல் ஈண்டு 'மிகவும் பற்றுடையவன்' என்ற குறிப்பிற் பயின்றுள்ளது. எனவே **பற்று + இல் + அன்**-பற்றைத் தனக்கு இல்லமாக - இயல்பாக - உடையவன் என்று பொருள் கொள்ளுதல் வேண்டும். "சர்வேசுவரனே யாகிலும் ஆச்ரிதர் எல்லார் பக்கலிலும் ஒக்க ஸ்நேக சுபாவனுகை இருக்கும்" என்று அருயிரப்படி யுரையில் **திருக்குருகைப்பிரான் பிள்ளான்** அருளிச் செய்திருத்தல் அறிந்தின்புறற்பாலது. தாரகம்-தாங்குவது. போஷகம்-வலிமை தருவது. போக்கியம்-நுகரப்படுவது. **'பற்றிலையாய்'** என்பது, முன்னே போந்த 'பற்றிலன்' என்ருற் போல, அதன் முன்னிலை ஒருமை வடிவாய் வந்த சொல். இறைவன் நின்னிடத்திற் பற்றுடையவனுக விளங்குதல் போல, நீயும் அவனிடத்திற் பற்று மிகவும் உடையையாய் என்பது பொருள். **பற்றிலன்-பற்றினன்** எனவும், பற்றிலையாய்-**பற்றினையாய்** எனவும் கொள்ளின், பொருள் எளிதிற் றெளிவாகும். உலகத்தை விளித்துச் சொல்லியபடி.

[இனி இப்பாசுரத்திற்குக் கூரத்தாழ்வாரின் புதல்வரும், எம்பார் என்பவரின் மாணுக்கரும், ஸ்ரீ ரங்கராஜஸ்தவம் ஸ்ரீ குணரத்நகோசம் முதலிய பலநூல்களை இயற்றியவரும் ஆகிய பராசர பட்டர், இயல்பாகவே நேரிய முறையிற் பின்வருமாறு பொருள் கூறியிருத்தல் அறிந்து சுவைக்கத் தகுவது. "ஷாட்குண்ய பரிபூரணனய் ஸ்ரீ வைகுண்ட நிலையனை எம்பெருமானும், அங்குள்ள நித்திய முக்தர்களிடத்திற் பற்று இல்லாதவனுய், இங்கு இன்று ஆச்ரயிக்கிற ஸம்ஸாரிகளிடத்திலேயே பரிபூரணமான காதல் கொண்டிருக்கின்ருன். ஹேய விஷயங்களிலே நீ வைத்திருக்கிற பற்றை விட்டவனுகி, அவனையே எல்லாமாகப் பற்றுவாயாக."] (6)

அடங்கெழில் சம்பத்து
அடங்கக் கண்டு ஈசன்
அடங்குஎழில் அஃதென்று
அடங்குக உள்ளே

**(பொழிப்புரை)** முற்றிலும் அழகியதான எம்பெருமானுடைய செல்வங்களை யெல்லாம் பார்த்து, அவைகளெல்லாம் எம்பெருமானுக்குரியது ஆகிய சிறப்பு என்று தெளிந்து, எம்பெருமானுடைய திருவருளின் உள்ளே ஈடுபட்டு ஒன்றி நிற்பாயாக.

**(குறிப்புரை)** அடங்க-முற்றிலும், முழுவதாக. **அடங்க + எழில்**; 'அடங்கெழில்' என வந்தது. சம்பத்து-செல்வம், விபூதி. எழில்-அழகு, சிறப்பு, பெருமை. அடங்கக் கண்டு-முழுவதும் பார்த்து. இறைவன் அளவிட முடியாத உபய விபூதிச் செல்வங்களை யுடையனுயினும், அடியவர்களுக்கு மிகவும் எளியன் ஆகும் இயல்பினன்.

ஓர் அரசகுமாரன் பூங்கா ஒன்றினைக் கண்டு புக அஞ்சியவழி, இஃது உன் தந்தையினுடையது காண் என்று கூறினால், அவன் அச்சம் நீங்கி அதன்கண் விரும்பிப் புகுந்து விளையாடி மகிழ்வன் அன்றோ? அதுபோல இறைவனுக்கும் நமக்கும் உள்ள சம்பந்தஞானம் கைவரப் பெற்றால், நாம் எம்பெருமானின் உபய விபூதிச் செல்வங்களிலும் சென்றுபுக்கு அடங்கி இன்புறலாம் என்பது தெளிபொருள். **'அடங்குக'** வியங்கோள் வினைமுற்று. (7)

உள்ளம் உரைசெயல்
உள்ளஇம் மூன்றையும்
உள்ளிக் கெடுத்து இறை
உள்ளில் ஒடுங்கே.

**(பொழிப்புரை)** மனம் மொழி மெய் என்றுகூற இருக்கின்ற இந்த மூன்று கருவிகளையும் ஆராய்ந்து, அவற்றின் உலகியற் புறப்பற்றுக்களை நீங்கும்படி செய்து, இறைவனின் பக்கலில் ஈடுபடச் செய்க.

**(குறிப்புரை)** எம்பெருமானுக்கு **உள்ளம் உரை செயல்** என்னும் மூன்றாலும் தொண்டு செய்தல் வேண்டும் என்று உணர்த்தியவாறு. எம்பெருமானுக்குத் தொண்டு செய்வதற்காக, நாம் புதிதாகத் தேட வேண்டிய பொருள் ஏதும் இல்லை, ஏற்கனவே நம் பக்கல் அதற்குரிய கருவிகள் அமைந்திருக்கின்றன என்பார் **"உள்ள இம் மூன்றையும்"** என்றார். உள்ளி-சிந்தித்து, ஆராய்ந்து. இறை உள்ளில்-இறைவனின் இடத்தில். ஒடுங்குதல்-ஈடுபடுதல், ஈடுபடுமாறு செய்வித்தல்; பாழிலே மேட்டிலே செலுத்தும் நீரைப் பள்ளத்திலே பயிரிலே பாய்ச்சுவாரைப் போன்று, கரணங்களை இறைவன்பால் அன்புடன் இருக்கச் செய்க. (8)

ஒடுங்க அவன்கண்
ஒடுங்கலும் எல்லாம்
விடும்; பின்னும் ஆக்கை
விடும்பொழுது எண்ணே.

**(பொழிப்புரை)** அந்த இறைவன் பக்கலிலே ஈடுபட்டால், உயிரை ஒடுங்கச் செய்கின்ற அறியாமை முதலியன எல்லாம் விட்டு நீங்கும்; அதற்குப் பின்னர் உடல் விட்டு விலகும் நாளை எதிர்பார்த்து எண்ணியிரு.

**(குறிப்புரை)** ஒடுங்க-ஒடுங்குக. 'அவன்கண்' என்புழிக் 'கண்' ஏழாம் வேற்றுமை யுருபு. விடும்-விட்டு நீங்கும்; வினைமுற்று. எல்லாம்-இறைவனைத் தொழுவதற்குத் தடையாக உள்ள பகைகள் எல்லாம். 'நெற்செய்யப் புற்றேயு மாபோல' இறைவனை அடைய முற்பட்டால், நம்மிடம் உள்ள குற்றங்களாகிய களைகளும் தடைகளும் ஆகியவை அனைத்தும் தாமே கழியத் தலைப்படும் என்பது கருத்து. ஆக்கை-உடல். விடும் பொழுது-நீங்கும் காலம். எண்-எண்ணிக் கொண்டிரு.

["ஆக்கை விடும்பொழுது எண்ணே" என்று கைவல்ய நிஷ்டனைப் போன்று உடலின் நீக்கத்தினை மட்டும் விரும்பி யிருக்கச் சொல்லியவாறு என்னை? எனின் :—இன்பத்தில் இச்சையுடைய ஒரு பெண் தன் உடம்பில் அழுக்கினைப் போக்கித் தூய்மை செய்து வைத்து, தன்னுடைய கணவனோடு இன்பம் துய்ப்பதற்குரிய காலத்தை எதிர்நோக்கிக் கொண்டிருத்தல் போல, இவனும் பேற்றுக்கு உறுப்பாக உடலைவிட்டு உயிர்நீங்கும் காலத்தினை எதிர்பார்த்திருக்கக் கடவன் என்றவாறு.] (9)

எண்பெருக்கு அந்நலத்து
ஒண்பொருள் ஈறில
வண்புகழ் நாரணன்
திண்கழல் சேரே.

**(பொழிப்புரை)** எண்ணிக்கையால் மிக்கிருப்பனவாய், ஞானத்திற்கு நிலைக்களமாய், ஞான மயமாய், அழிவற்றனவாய் இருக்கிற உயிர்களையும், அழிவற்ற வளப்பம் பொருந்திய புகழ்களையும் உடைய நாராயணனது உறுதியான திருவடிகளைச் சேர்வாயாக.

**(குறிப்புரை)** இத் திருப்பாசுரம் **திருமந்திரம்,** அதன் பொருள் ஆகியவற்றை உணர்த்துகின்றது. **'எண் பெருக்கு'** என்றதனால் உயிர்களின் பன்மையும், **'நலத்து'** என்றதனால் உயிர்கள் ஞானமயமாகத் திகழ்தலும், **'ஈறில'** என்றதனால் உயிர்களின் அழிவின்மையும் உணர்த்தப் பெற்றன.

உயிரானது அறிவிற்குப் பற்றுக்கோடாக இருத்தலின் தன்னையும் பிற பொருள்களையும் அறியும்; அறிவின் மயமாக இருத்தலின் இறைவனை யுணரப் பெறும் என்பது சுட்ட, **நலம், ஒண்மை** என்னும் இரண்டு அடைமொழிகளைக் கொடுத்து ''நலத்து ஒண் பொருள்'' என உயிர்களைக் குறித்தார். **நலம்** - ஞானத்திற்கு நிலைக்களமாதல். **ஒண்மை** - ஞானமயம் ஆதல்.

**'ஈறில ஒண்பொருள்'** என்றும் **'ஈறில வண்புகழ்'** என்றும் தனித்தனியே இயையும். ஈறில ஒண்பொருள் ஆகிய உயிர்களையும், ஈறில வண்புகழ்களையும் உடையவன் ஆதலே **நாராயணன்** என்ற சொற்குப் பொருள் ஆகும். எனவே நித்தர் முத்தர் பத்தர் என்னும் மூன்று வகைப்பட்ட சேதனரையும், நித்தியமான அனந்த கல்யாண குணங்களையும் உடையவன் நாராயணன் என்பதாயிற்று.

அடியார்களை ஒருகாலும் விட்டுக் கொடாமல் காப்பாற்றி யருளுவது ஆகலின், **'திண்கழல்'** என்று புகழ்ந்து சிறப்பித்தார்.

[''கூரத்தாழ்வார் இப்பாட்டளவும் வரப் பணித்து, இப்பாட்டு வந்த அளவில் 'இத்தையும் நும் ஆசிரியர் பக்கலிலே கேட்டுக் கொள்ளுங்கள்' என்று கூற, அவர்தம் அருந்தவப் புதல்வர்கள் ஆகிய பராசர பட்டரும் சீராமப் பிள்ளையும் எழுந்து போகத் தொடங்க, அவர்களை யழைத்து 'இன்ன போது இன்னார் இருப்பார்; இன்னார் போவார் என்று தெரியாது; இருந்து கேளுங்கள்' என்று திருமந்திரத்தினை உபதேசித்து, இப்பாட்டைக் கூறி, 'இப்பாட்டை இதற்குப் பொருளாக நினைத் திருங்கள்' என்று பணித்தார்'' என்பது ஈட்டுரைக் கூற்று.] **(10)**

சேர்த்தடத் தென்குரு
கூர்ச்சட கோபன்சொல்
சீர்த்தொடை ஆயிரத்து
ஓர்த்தஇப் பத்தே

**(பொழிப்புரை)** தடாகங்கள் சேர்ந்திருக்கின்ற அழகிய திருக்குருகூரில் அவதரித்த சடகோபர், இறைவனுடைய மிக்க புகழைத் தொடுத்து அருளிச் செய்த ஆயிரம் திருப்பாசுரங்களுள், இப் பத்துத் திருப்பாசுரங்களும் ஆராய்ந்து செய்யப் பட்டவை.

**(குறிப்புரை)** தடம் — தடாகம், பொய்கை, குளம். தென் — அழகிய; தெற்கேயுள்ள என்றுமாம். குருகூர் — ஆழ்வார் திருநகரி. சடகோபன் - நம்மாழ்வார். 'சடகோபன் சொல்' — நன்மை சொல்ல என்று எழுந்து தீமையைச் சொல்லுவான் ஒருவன் வார்த்தையன்று; நம்பத் தகுந்தவர்களுள் மிக உயர்ந்தவர் (ஆப்ததமர்) வார்த்தை. ஓர்த்த — ஆராயப்பட்டவை; உலக மக்களுக்கு நன்மையாவது எது என்று ஆராய்ந்து உணர்ந்து நிறுவிச் சொல்லப் பெற்றவை; மக்களுக்கு மிகவும் நன்மையை அளிக்க வல்லதொன்றாதலின் எப்போதும் அறிஞர்களால் ஆராயப் படத் தக்கவை. *(11).*

—தொடரும்

---

'' நாவி னால்நவிற் றின்பம் எய்தினேன்
மேவி னேன்அவன் பொன்னடி மெய்ம்மையே
தேவு மற்றறி யேன்குரு கூர்நம்பி
பாவின் இன்னிசை பாடித் திரிவனே ''
—மதுரகவி யாழ்வார்.

# இராமலிங்கரும் கோயில் வழிபாடும்

**முன்னுரை:**

இராமலிங்க அடிகளார், தமிழ் நாட்டில் அண்மைக் காலத்தில் தோன்றியருளிய சான்றோர்கள் பலருள் தலை சிறந்த ஒருவர். தமிழகத்தில் வாழையடி வாழையாகத் தொன்றுதொட்டுத் தோன்றி வந்துள்ள அருளாளர்களின் வரிசையில், இராமலிங்கர் தோன்றியருளினார். "வாழையடி வாழை என வந்த திருக்கூட்ட மரபினில் யான் ஒருவன் அன்றோ"? என அவர்தாமே இதனைக் குறிப்பிட்டருளியிருத்தல் காணலாம். அத்தகைய அவர்தம் அருமை பெருமைகள் அளவிடற்பாலன அல்ல. சித்த புருஷர் (Mystic-Saint) எனத் திகழ்ந்திருந்த நம் இராமலிங்கர் திரு விளங்கவும், சிவயோகச் சித்தியெலாம் விளங்கவும், சிவஞான நிலை விளங்கவும், சிவானுபவ நலம் விளங்கவும் தோன்றியருளிய சான்றோர் பெருந்தகையாவர்.

**கந்தகோட்டம்:**

இராமலிங்க அடிகளார், சித்திகள் பலவும் பெற்றுயர்ந்தொளிர்ந்த, சிறந்த சிவஞான அனுபவப் பெருஞ்செல்வர். எனினும், அவர் திருக்கோயில் வழிபாடு புரிவதிற் பெரிதும் ஈடுபாடு கொண்டவராக இருந்தார். அவர் சென்னையில் வதிந்திருந்த காலத்தில், சென்னைக் **கந்தகோட்டம்** சென்று வழிபடும் வழக்கம் உடையவராக விளங்கினார். '**தெய்வ மணிமாலை**' என்னும் பெயர் கொண்ட திருவருட்பாத் திருப்பதிகம், சென்னைக் கந்தகோட்டப் பெருமானைப் பற்றியதே என்று அன்பர்கள் அனைவரும் அறிவர்.

**திருவொற்றியூர்:**

இங்ஙனமே சென்னையைச் சார்ந்துள்ள **திருவொற்றியூர்க்** கோயிலுக்கு அடிக்கடி சென்று வழிபடுதலையும், நம்

---

## ஆணையர் கலந்துகொண்ட நிகழ்ச்சிகள்.

| | | |
|---|---|---|
| 1—5—1965 | ... | தஞ்சைப் பெரியகோயில் திருப்பணித் தொடக்கவிழா |
| 14—5—1965 | ... | தருமபுரம் ஆதீனம், திருநெறிய தெய்வத் தமிழ் மகாநாடு |
| 15—5—1965 | ... | காவிரிப்பூம்பட்டினம்—இந்திர விழா |
| 16—5—1965 | ... | செம்பொன்னார் கோயில் (மாயூரம்) ஸ்ரீ சொர்ண புரீசுவரர் கோயில், சிவாகமப் பயிற்சிப் பள்ளி, சிவாச்சாரியர்களுக்கு நற்சான்று இதழ் வழங்குதல். |
| 17—5—1965 | ... | திருப்புகலூர் ஸ்ரீ அக்னீசுவரர் கோயில் சிவாகமப் பயிற்சிப் பள்ளித் தொடக்கவிழா |

இராமலிங்க அடிகளார் தமக்குரிய பெரு வழக்கமாக மேற்கொண்டிருந்தார்கள். **வடிவுடை மாணிக்கமாலை, இங்கிதமாலை** முதலிய நூல்களும், மற்றும் எத்துணையோ ஏராளமான பற்பல பதிகங்களும், திருவொற்றியூர்த் தியாகராசப் பெருமான் மீது, நம் வள்ளற் பெருமான் பாடி யருளியிருக்கின்றார். வள்ளற் பெருமானின் திருவருட்பாவில் மிகுதியான பல திருப்பதிகங்கள் திருவொற்றியூரைப் பற்றியனவாக பெரிதும் அமைந்திருத்தல் காணலாம்.

**பிற தலங்கள் :**

இவ்வாறே சென்னைக்கு அணித்தாக உள்ள **திருமுல்லைவாயில் திருவலிதாயம்** முதலிய தலங்களுக்கும், **திருவதிகை திருவண்ணாமலை திருப்பாதிரிப்புலியூர் சிதம்பரம் சீர்காழி திருப்புள்ளிருக்கு வேளூர் திருவாரூர்** முதலிய பல தலங்களுக்கும் சென்று, அங்கங்கேயுள்ள திருக்கோயில்களை யெல்லாம் வழிபட்டுப் பல திருப்பதிகங்கள் அருளிச் செய்துள்ளார் நம் அடிகளார்!

**திருத்தணிகை :**

இராமலிங்கர் திருத்தணிகைப் பெருமானைத் தம் வழிபடு கடவுளாகக் கொண்டிருந்தார். தம் தமையனார் ஆகிய **சபாபதி பிள்ளை**, தாம் படிக்காமல் திரிவதாகக் கருதிக் கவலை யுறுவதை யுணர்ந்த இராமலிங்கர், ஒருநாள் தேங்காய் பழம் பூ ஊதுவத்தி முதலியன வாங்கிக் கொண்டு வந்து, தம் வீட்டில் மெத்தை அறையின் சுவரில் ஒரு கண்ணாடியை மாட்டித் திருவிளக்கேற்றி, மலர் சூட்டியும் பழம் படைத்தும் கற்பூர தீபம் காட்டி, நெடுநேரம் அக்கண்ணாடியை நோக்கிய வண்ணமாகத் தியானித்துக் கொண்டு அமர்ந்திருந்தார். தியானத்தின் விளைபயனாகத், **திருத்தணிகை** முருகப் பெருமானின் திருவுருவம், அக்கண்ணாடியில் தோன்றி அவருக்குக் காட்சியளித்தது.

சீர்கொண்ட தெய்வ வதனங்கள்
ஆறும், திகழ்கடப்பந்
தார்கொண்ட பன்னிரு தோள்களும்,
தாமரைத் தாள்களும், ஓர்
கூர்கொண்ட வேலும், மயிலும், நற்
கோழிக் கொடியும், அருட்
கார்கொண்ட வண்மைத் தணிகா
சலமும், என் கண்ணுற்றதே!

என்று வியந்து தரிசித்து, மகிழ்ந்து பாடித் துதித்து, அன்று முதலாக அத் திருவுருவினையே நம் அடிகளார் உபாசனை செய்து, வழிபடத் தொடங்கினார்கள். திருத்தணிகை முருகனின் உபாசனையாற் கலைஞானம் அனைத்தும் அவர் கைவரப் பெற்றார். அடிகளாரின் இவ்வரலாறும் அனைவரும் அறிந்ததேயாகும். மேலும் திருத்தணிகையினைப் பற்றிப் பற்பல திருப்பதிகங்கள் திருவருட்பாவில் இடம் பெற்றிருத்தலும், இவ்வுண்மையைச் செவ்விதின் வலியுறுத்தும்.

வெம்பும் உயிருக் கோர்உறவாய்
வேளை நமனும் வருவானேல்,
தம்பி தமையன் துணையாமோ?
தனையர் மனைவி வருவாரோ?
உம்பர் பரவும் திருத்தணிகை
உயர்மா மலைமேல் இருப்பவர்க்குத்
தும்பைக் குடலை எடுக்காமல்,
துக்க உடலை எடுத்தேனே!

தொல்லைக் குடும்பத் துயரதனில்
தொலைத்தேன் அந்தோ காலமெலாம்!
அல்லல் அகற்றிப் பெரியோரை
அடுத்தும் அறியேன் அரும்பாவி!
செல்வத் தணிகைத் திருமலைவாழ்
தேவா! உன்றன் சந்நிதிக்கு
வில்வக் குடலை எடுக்காமல்,
வீணுக் குடலை எடுத்தேனே!

அவல வயிற்றை வளர்ப்பதற்கே
அல்லும் பகலும் அதில்நினைவாய்க்
கவலைப் படுவ தன்றிச்சிவ
கனியைச் சேரக் கருதிலேன்!

திவலை ஒழிக்கும் திருத்தணிகைத்
திருமால் மருகன் திருத்தாட்குக்
குவளைக் குடலை எடுக்காமல்,
கொழுத்த உடலை எடுத்தேனே!

எனவரும் இனிய மனம் உருக்கும் பாடல்கள், இராமலிங்கர் கோயில் வழிபாட்டிற் கொண்டிருந்த எல்லையில்லாத ஈடுபாட்டினை விளக்குவனவாகும்.

**விண்ணப்பக் கலிவெண்பா :**

இராமலிங்கருக்குக் கோயில் வழிபாட்டில் எத்துணைப் பற்றும் ஆர்வமும் இருந்தன என்று அளவிடுதல் அரிது. ஒரு சில போலித் துறவிகளும், சித்தர்கள் சிலரும் செய்வது போல, நம் இராமலிங்கர் கோயில் வழிபாட்டினை எளிதாக எண்ணி, ஏளனம் பேசிப் புறக்கணிப்பவர் அல்லர். திருவருட்பா நூலின் தொடக்கத்திலேயே அமைந்துள்ள **விண்ணப்பக் கலிவெண்பா** என்னும் அழகிய அரிய நூலில், சோழ நாட்டிற் காவிரியின் வடகரை தென்கரைகளில் உள்ள தேவாரப் பாடல் பெற்ற சிவதலங்களையும், **ஈழநாடு பாண்டிய நாடு சேர நாடு கொங்குநாடு நடுநாடு தொண்ட நாடு துளுவநாடு வடநாடு** ஆகியவற்றிலுள்ள தேவாரப் பாடல் பெற்ற சிவ தலங்களையும், அவற்றின் பெயர்களையும் சிறப்புக்களையும் குறிப்பிட்டுப் புகழ்ந்து போற்றிப் பாராட்டித் துதித்தருளியிருக்கின்றார்கள்.

இங்ஙனமெல்லாம் திருக்கோயில்களைப் பாடியருளிய நம் இராமலிங்க அடிகளார் இறைவனிடத்தும் அவன் எழுந்தருளி விளங்கும் கோயில்களின் மாட்டும் எத்தனை அழுந்திய பற்றும் ஆர்வமும் ஈடுபாடும் கொண்டிருந்தனர் என்று யாவரும் எண்ணியுணரலாம்.

**கோயில்களின் சிறப்பு :**

நம் அருமைத் தமிழ்நாடு கோயில்கள் நிறைந்தது; எழில்மிக்க கோயில்களின் சிறப்புக் காரணமாக இசையால் திசை போயது; இத்துணைப் பழமையும் பெருமையும் அருமையும் வாய்ந்த ஆயிரக்கணக்கான கோயில்களை வேறு எந்த நாட்டிலும் காண்டல் அரிது; **காவியம் ஓவியம் சிற்பம் இசை நடனம்** முதலிய பலவகை அழகியல் அருங்கலைகட்கெல்லாம் கோயில்களே நிலைக்களமாக விளங்கி வருகின்றன! திருக்கோயில்கள் மக்கட் சமுதாயத்திற்கு விளைவித்துவரும் பலதிற நலங்களுக்கும் அளவேயில்லை.

**கோயில்களின் பயன்கள் :**

நம் தமிழ் நாட்டிற் பழங்காலத்தில் திருக்கோயில்களே பள்ளிக்கூடங்களாகவும், கலைஞர்களின் கலைக்கழகங்களாகவும், அறங்கூறும் அவையங்களாகவும், மருத்துவ மனைகளாகவும், பேணுநர் இல்லோர்க்கு ஊணுடை நல்கி ஓம்பும் புகலிடங்களாகவும், மக்கட்குத் தொழில் தரும் நிறுவனங்களாகவும், பொருள் கொடுத்து வாங்கி உதவி புரியும் நிதி நிலையங்களாகவும், மன்பதை நலங்காக்கும் மன்றங்களாகவும், இன்ன பிறவாகவும் விளங்கி மக்களுக்குப் பெரிதும் பயன்பட்டு வந்தன. இன்றும் அவற்றால் விளைந்து வரும் பயன்களுக்கு எல்லையே இல்லை. *

**முடிவுரை :**

எனவேதான், இராமலிங்க அடிகளார் கோயில் வழிபாட்டிற் பொதும் ஈடுபாடு மிக்கவராக விளங்கியருளினர்! அவர்தம் அடிச்சுவட்டினைப் பின்பற்றி ஒழுகி உய்ய விரும்பும் நாம் அனைவரும்கூட, அங்ஙனமே கோயில் வழிபாட்டில் அழுந்திய உணர்வும் அன்பும் உடையவர்களாக வாழ்ந்து நலம்பெற்று உய்வோமாக!

—ஆசிரியர்

* "Above all, temples became centres of religious and social life..........As landholder, employer and consumer of goods and services, as bank, school and museum, as hospital and theatre, in short, as a nucleus which gathered round itself all that was best in the arts of civilised existence and regulated them with the humaneness born of the spirit of Dharma, the mediaeval South Indian temple has few parallels in the annals of mankind".

*Prof.* R. SATHYANATHA IYER, M.A.

# ஸ்ரீ வைஷ்ணவ குருபரம்பரை

திரு K. பட்சிராஜன், B.A., B.L., திருநெல்வேலி.

(முன் இதழ்த் தொடர்ச்சி)

காச்மீர குத்ருஷ்டி வித்வான்கள் கூடினர். இக்கிரந்தம் நடையாடவே விடலாகாது. இஃதிருந்தால் நம்முடைய மாயா வாதங்கள் மதிப்பிழந்து மறைந்து விடும். இதனை அழித்துவிட வேண்டும் என்று தீர்மானித்துச் சதிசெய்து கோயில் அருச்சகனை அண்டி அவனுக்கு ஏராளமான பொருளளிப்பதாக வாக்களித்து இரவோடிரவாக அக்கிரந்தத்தைக் கொணர்ந்து தங்களிடம் கொடுத்துவிடுமாறு வற்புறுத்தினர். அந்த அர்ச்சகனும் பொருளாசை மேலிட்டவனாய் நள்ளிரவிலே சென்று கிரந்தத்தைக் கொணர்ந்து வித்வான்கள் கையிலே கொடுக்க அவர்களும் அதனைத் தீயிலிட்டனர். இவர்களது செயலைப் பொருத வாணி அக்னிதேவனிடம் உலகுய்யவந்த அக்கிரந்தத்தைச் சுடாது தன்னிடம் கொணருமாறு வேண்டிக்கொள்ள அக்னிதேவனும் அதனை ஒருவித அழிவுமின்றி வாணியிடத்தே கொணர்ந்து சேர்ப்பித்தான். அவளும் அதனைத் தன்னுடைய கூந்தற் பாரக்கற்றைக்குள்ளே மறைத்தனள்.

பின்னர் உறக்கத்திலிருந்த உடையவர் கனவிலே தோன்றினாள் வாணி. உடையவரும் திடுக்கிட்டு எழுந்து அவளை வணங்க, வாணி "எம்பெருமானாரே! அக்கிரந்தத்தின் மகிமை தெரிந்தும் அதை எங்கு ஏற்றுக்கொள்ளவேண்டுமோ அங்கே அதனை ஸமர்ப்பியாமல் என்கையிலே வைத்து விட்டீர்களே!" என்று கூறினாள். உடையவரும் என்ன பதிலிறுப்பதென்று தெரியாது நிற்க, வாணியும் அதனை உரியவிடத்தே சேர்த்துக்கொண்டேன் என்று கூறினாள். உடையவர் அவளை நோக்கி 'தாயே! அடியேன்பால் உமக்குள்ள கிருபையை எண்ணும்போது, இவ்வளவு பரிவுக்கு அடியேன் பாத்திரவான்தானா என்று ஐயுறுகின்றது அடியேன் மனம்" என்று விநயமாக விண்ணப்பித்தார். வாணியும் 'ஸ்வாமீ! மறைவாக்கியங்களுக்கு உண்மைப்பொருள்காண வியலாது மேலே கிடந்தவாறு தான்தோன்றியாகப் பொருளுரைப்பார் மலிந்தவிடத்தே வேதங்களின் உள்ளக்கிடக்கை உணர்ந்து உம்மைப்போல் எவர் கூறினர்? அன்று அந்த யாதவப்ரகாசன் 'கப்யாஸம் புண்டரீக மேவமக்ஷிணி' என்ற உபநிடத வாக்யத்துக்கு அவன் முன்னோர் கூறிய அபத்தப் பொருளைக்கூற, நீர்கண்ணீர் வடித்ததையும், அவன் நெஞ்சுருக்கும்படி அதன் உட்பொருளுணர்ந்து உரை கூறினமையும் நான் அறிவேன். அன்றுமுதல் நான் உம்தாதியாக வல்லவா என்னை நினைத்துக்கொண்டிருக்கிறேன். உம்முடைய வாதத்தை உகப்போடு கேட்டேன். உமது தர்சனம் ஸத்யமென்பதிலும், அதுவே நிலைக்குமென்பதிலும் உண்மையான வேத வித்துக்களுக்கு ஸந்தேகமிருக்க முடியாது" எனக்கூறி மறைந்தாள். உடையவர் உடல் புளகித்து உள்ளமுருகி வாணியைத் தியானித்தவராய் இரவைக் கழித்தார்.

மறுநாள் காலை அரசனும் வித்வான்களும் உடையவரது கோஷ்டியும் ஒன்றாக வாணி ஸன்னதிக்குச் சென்றனர். கதவு திறக்கப்பட்டது. வாணியின் கையில் ஒன்றுமில்லை. வித்வான்களும் அர்ச்சகர்களும் தேடுவதுபோல நடித்தனர். ஒன்றுமறியாதார்போல் என்னவெல்லாமோ பேசினர். அரசனுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. உடையவர் முகத்தை நோக்கினான். அவன் முகத்திலிருந்து ஒன்றும் அறிய இயலவில்லை. "ஸ்வாமீ இது என்ன மாயம். நேற்று நாம் தேவியின் கரத்திலே ஸமர்ப்பித்த கிரந்தம் எப்படி மறைந்தது? கதவும் பூட்டப்பெற்றல்லவா இருந்திருக்கிறது"! என்று வினவினான். உடையவரும் தன்னிடம் வாணி கனவில் கூறியதை உன்னினார். ஆனால் அந்நிகழ்ச்சியை வெளியிடவும் விரும்பவில்லை. ஆகவே அரசனை நோக்கி 'நாம் கிரந்தத்தை வாணியிடம் ஒப்படைத்தோம். அவள்

அதனை எங்கு வைத்துக்கொண்டிருக்கின்றீரோ", என்று கூறலும் அரசனும் அர்ச்சகரை நோக்கித் தேவியின் விக்கிரகத்திலே நன்கு சோதிக்குமாறு கூற அர்ச்சகனும் உண்மை தெரிந்தவனுதலினுலும், வாணியின் செய்கையறியாதவனுனதாலும் தைரியமாகச் சோதிக்க தேவியின் கூந்தற் கற்றைக்குள்ளிருந்து கிரந்தம் தென்பட்டது. அவன் அதை எடுத்து உள்ளநடுக்கத்தோடு அரசன் கையிலே கொடுக்க அவனும் அது தான் முதனுள் ஸமர்ப்பித்த கிரந்தமாயிருக்கக்கண்டு உடையவரை நோக்கி, ஸ்வாமீ நாம் இதனைக் கையிலே ஸமர்ப்பித்தோம். அது தவறு என்பதை நமக்குக் காட்டவே தேவி அதனைச் சிரஸிலே சூடிக்கொண்டு அதன் ஸத்யத்தை நமக்கு விளக்கியுள்ளாள். இனி தேவரீர் ஸித்தாந்தமே வேதங்களோடு ஒட்டியது. மற்றையவை அதற்குப் புறம்பாயவையே என்பதில் ஸத்தியத்தில் நம்பிக்கையுள்ள எவருக்கும் ஐயமிருக்க ஏதுவில்லை. தேவரீருடைய வெற்றி வாணியின் செயல் மூலம் ஊர்ஜிதமாக்கப் பெற்றது. இதுவும் எங்கள் பாக்கியமே என்று அவர் திருவடிகளிலே விழுந்து வணங்கினுன். மற்றைய வித்வான்கள் தங்களுக்குள்ளே ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டும் ஒன்றும் பேசாது திகைத்து நின்றனர்.

குற்றம் என்றுமே மறைந்துவிடாதல்லவா? சில நாட்களிலே வித்வான்களின் சதிச்செயலும் அர்ச்சகனின் துரோகமும் மெல்ல வெளிவரலாயிற்று. ஊரில் ஜனங்கள் தமக்குள்ளே குசுகுசு வெனப் பேசிக்கொண்டனர். இச்செய்தி அரசன் செவியையும் எட்டியது. அவன் உள்ளம் மிகவும் நொந்தது. பின்னர் அது சினமாக மாறியது. இவ்விழிசெயலைச் செய்தவரைக் கொணர்க என ஆணை பிறந்தது. சதி செய்த வித்வான்களும் அர்ச்சகரும் அரசன்முன் கொணர்விக்கப் பெற்றனர். தம் அடாத செயல் வெளிப்பட்டமைக்கு நாணமும் அச்சமும் கொண்ட இவர்கள் நடுநடுங்கியவர்களாய் அரசன் முன் தாங்கள் செய்தவற்றையெல்லாம் ஒன்றுெழியாது ஒப்புக்கொண்டனர். தங்கள் ஆத்திரச்செயலைப் பொறுத்தருளுமாறு அரசனிடம் கெஞ்சினர். உடையவரும் தம்முடைய கனவு நிகழ்ச்சியை அறிவித்தார். அரசன் வித்வான்களை நோக்கி "வேதங்களின் உண்மைப் பொருளை, வேதங்களைப் பரிபாலிப்பவர்கள் தாம் எனச் சொல்லித்திரியும் நீங்கள் உங்கள் சுயநலத்துக்காக மறைத்து வேதங்களுக்கு உங்கள் யுக்தம்போல் பொருள் கூறுவதும், வேதங்களில் பலபகுதிகளை விட்டு உங்களுக்கு உசிதமான சில பகுதிகளைமட்டுமே வைத்துக்கொண்டு இதுதான் வேதாந்த தத்துவம் எனப் பிறரை மயக்குவதும், உண்மையைக் கூறும் நூல்களைச் சதி செய்து திக்கிரையிடுவதும், மறையவர் செயல்களோ? உடையவர் சித்தாந்தத்தில் வேதங்களின் எப்பகுதியும் விலக்கப்படலின்றி எல்லாவற்றையும் ஒரே சீராக நோக்கி அனைத்து வாக்கியங்களுக்கும் இசையப் பொருள் கொள்ளப் பட்டிருக்கின்றனவே! அதுசத்யமா? ஒரு சில வாசகங்களை மட்டும் வைத்து மழுப்பி மக்களை மயக்கும் உங்கள் மாயாவாதம் சத்யமா? க்ரந்தத்தை அக்கினியிலேயிட்டிருக்கின்றீரே! அழிந்ததா? அழிக்க முடியுமா? ஸத்யமேவ ஜயதே என்பது பொய்யாகுமா? தேவி அதைவாங்கிச் சிரத்திலல்லவா சூடிக்கொண்டாள்! ஒரு சிலர் திட்டமிட்டுக் கட்டுப்பாடாக வேதாந்தம் இது தான் என்று சுயநலம் கருதிச்சொல்லும் பொருள்கள் வேதஞானம் இல்லாதவரைச் சிலகாலம் ஏமாற்றலாம். என்றும் முடியுமா? வாணி உங்கள் மாயா சாலச் செப்படி வித்தைகளைப் பகிரங்கமாக்கிவிட்டனளே. உங்கள் கல்வி இப்படியா கோணலாகச் செல்லவேண்டும் என்று, வருத்தமும் கோபமும் கலந்து கூறிக் கண்டித்தான். அவ்வித்வான்களும் அரசன் கோபத்துக்கு அஞ்சியவர்களாய், மீண்டும் அபராதக்ஷாமணம் செய்து கொண்டனர். உடையவர் சித்தாந்தத்தை ஏற்று, அவர் திருவடிகளை ஆச்ரயித்தனர் பலர். அரசனும் வித்வான்கள் திருந்திவிட்டனர் என்று கொண்டு திருப்தியடைந்து, உடையவரைத் தண்டனிட்டு நிற்க, உடையவரும் அரசனும் உவந்து 'ஸ்வாமி அது இங்கே மறைக்கப்பட்டல்லவா கிடந்தது. அதனை வெளிக்கொணர்ந்து உலகை உய்வித்த தேவரீர் பாலே அது இருக்கத் தக்கது என்று, அதனை அவரிடமே ஸமர்ப்பித்துவிட்டான். இதன் பின் உடையவர் அங்கே சிலநாள் தங்கிப்பலரைத் திருத்திப் பணிகொண்டு, பின்னர் அரசனிடம் விடைபெற்றுப் புறப்பட்டார்.

—தொடரும்

# சமயங்கள்

முதுபெரும் புலவர் திரு. புரிசை சு. முருகேச முதலியார் அவர்கள்,
திருவண்ணாமலை.

[தமிழுலகிலும் சமய உலகிலும் தலைசிறந்து, புகழோங்கித் திகழும் முதுபெரும் புலவர் பெருமக்கள் பலருள், திரு. புரிசை. சு. முருகேச முதலியார் அவர்கள் ஒருவர். 'முத்தமிழ் வள்ளல்' 'பெருஞ்சொற் கொண்டல்' 'பிரசங்கரத்தினகரம்' என்னும் பலவகைச் சிறப்புப் பெயர்களைப் பெற்றுத் திகழ்பவர் அவர்!

பாரதம் இராமாயணம் பெரியபுராணம் கந்தபுராணம் முதலிய பல நூல்களிலும் அவர்களுக்குப் பரந்து விரிந்து நுணுகிய பயிற்சியுண்டு. தமிழ்நாட்டின் பற்பல பகுதிகளில் மட்டுமேயன்றி, இலங்கை மலேயா முதலிய பிறநாடுகளுக்கும் சென்று பற்பல சொற்பொழிவுகள் நிகழ்த்தி, நம் தமிழையும் சமயத்தையும் பரப்பி வளர்த்துவரும் சான்றோர் அவர்! அவர்தம் அரும்பெருஞ் சொல்வன்மைத்திறம், யாவர் உள்ளத்தையும் கொள்ளை கொள்ளவல்லது.

திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் அடிகள், தமிழ்ப் பெரியார் திரு. வி. க., கோவை சர். R. K. சண்முகஞ் செட்டியார் போன்ற எத்துணையோ பல பெருமக்களின் நட்புக்கும் நன்கு மதிப்பிற்கும் உரிமைபெற்று, அவர்களாலெல்லாம் பெரிதும் போற்றிப் பாராட்டப் பெற்றவர்கள் நமது முதுபெரும் புலவர் அவர்கள்!

பல மணி நேரம் தொடர்ந்து நிகழும் இவர்தம் சொற் பொழிவுகளில், பயனில் சொற்கள் ஒரு சிறிதும் விரவா. எடுத்த பொருளினின்று சிறிதும் பிறழாமல், கலையியல் நுட்பமும் உலகியலுணர்வும் ஒருங்கே கலந்து மிளிர, அரிய இனிய முறையில் அறிவுக்குப் பெருவிருந்தாக இவர்தம் விரிவுரைகள் விளங்கும்.


'இனியார் உளரோ? முன்னும் இல்லை!' என்னும் நிலையில் ஒப்புயர்வற்ற சொல்லின் செல்வராக விளங்கிவரும் நம் முதுபெரும் புலவர் அவர்கள், "பார்த்தனை வளர்த்த பாட்டன்" என்னும் தலைப்பில், பாரத நூலிற் போதரும் மாபெருஞ் சான்றோர் ஆகிய பீஷ்மாசாரியர் பற்றிய பண்போவிய விளக்கமாகப், பற்பல நலங்கள் பொதுளச் சிறந்த முறையில், எளிய நடையில் இயற்றியுள்ள கவிதைநூல் ஒன்றில் இருந்து, கீழ்வரும் பகுதி எடுத்து இங்குத் தரப்பெறுகின்றது......

அருங்கலை விநோதரும், அன்பியற் பெருந்தகையும், "பண்டிதவத்சலர்" எனத் தக்கவரும் ஆகிய நமது அறநிலைய ஆணையர் அவர்களின் விருப்பத்திற்கு இணங்கி, நமது முதுபெரும் புலவர் அவர்கள் "பாரத நூலிற் பண்போவியங்கள்" என்னும் தலைப்பில், இனி நம் 'திருக்கோயில்' இதழில் தொடந்து பல கட்டுரைகள் எழுதி வருவார்கள்......

—ஆசிரியர்.]

"ஆண்டவன் தண்ணருள் அடைவதற் காக்கிய
மாண்டகு வழிபல மாநிலத் துள்ளன! அவை
ஒருபேர் ஊருக்கு எண்திசைச் சிற்றூர்
தன்னிலும் நின்றுறு சாலைகள் போல்வன!
சிறிதுறும் இன்பமே சிற்றூர் ஆகும்!
பேரின் பம்அப் பேரூர் ஆமே!
துன்பம் தொலையவும் இன்பமே எய்தவும்
வேண்டா தவர்ஆர்? எல்லாம் விரும்புவர்—
ஆனால்,
அதற்குறும் வழிதுறை அறியா தலைந்தே
சுழன்று சுழன்றுதம் சூழலே துன்னுவர்!

அருளால் அதற்குறு செவ்வழி யாக்கிய
பெரியோர் பலர்பல சமயம் பேசினர்!
சமயமென்றூர் பல சான்ருேர் இதனையே!
மதமெனப் புகலுவர் மக்கள் உலகினில்.
சமயமென் றூலென், மதமெனில் தானென்?
இரண்டும் ஒன்றுதான் எனநினைப் போர்பலர்.
நெல்லென் றூலென், அரிசியென் றூலென்?
நிகழ்வொன் றென்ன நினைத்திட லாமோ?—
உடனே
உண்டிக் குதவுவது ஒன்று; உமி நீக்கப்
பின்றைக் குதவுவது ஒன்று; இது பேதம்!
இதுபோல்,
உலகியல் எல்லாம் உன்னி உணர்ந்த
நல்லோர் கொள்கையை மதமென நவின்றனர்!
கொள்கையை அலசிக் கோது நீக்கிக்
கண்டது சமயம் கடைந்தெழும் அமுதென!
சமைந்ததை நன்ருய்ச் சமையம் என்றனர்!
சமயங் கண்ட சான்ருேர் எல்லாம்
பெரியவ ரென்பதில் பேதுறவு இல்லை!
அறநெறி நடந்து, அதில் அசையா தூன்றிப்
பெருநெறி குறித்தவர் சமயம் பேசினர்!
தாயைத் தந்தையைப் பழியெனக் கூறும்
சமயத் தார்எச் சார்பிலும் உளரோ?
பகைமையை மக்கள்பால் பாராட்டு கென்றே
இசைப்பவ ரும்ஒரு சமயத் திருப்பரோ?
இருப்புளார் ஏழைகட்கு இரங்கா தீர்என
உரைப்பவரும் ஒரு சமயத் துளரோ?
எதிர்த்தவர் மொழிவதைச் சிறிதும் ஏற்காது
உன்சொலே பெரிதென உரையென்பர்
உளரோ?
கற்றவர், 'மற்றவர் கண்தெரி யார்என
ஏமாற் றிடுமின்' என்மரும் உளரோ?—
உளரேல்
'எச்சமயத்தோர் சொல்லும் தீதொழிய நன்மை
செயலென்ற' செம்மொழி தன்னைச் செந்தமிழ்
ஆய்ந்துணர் அவ்வையார் அறைதர லாகுமோ?-
ஆதலால்
எச்சமயத்தையும் எவர்தொழும் உருவையும்
இகழ்ந்து கூற, நாம்எண்ணலும் பிழையாம்!"



தஞ்சாவூர்க் கோயிலின் தோற்றம்

# வண்ணத் தியல்பு நூல்

(மகான் வண்ணச் சரபம் திருப்புகழ்த் தண்டபாணி சுவாமிகள்)

(முன் இதழ்த் தொடர்ச்சி : பக்கம் 394)

## இதுவுமது

குறிலுடன் இடையின மெய்யும் வல்லின
மெய்யும் அவ்வுயிர் மெய்க்குறில் ஒன்றும்
மெல்லினத் திடையினத் தொற்றினில் ஒன்றும்
தத்த ஆமெனச் சாற்றுவர் புலவோர்.

**(இ-ள்)** ஒரு குறிலுடன் இடையின மெய்யொன்றும் வல்லொற்றொன்றும் வல்லினக் குறிலொன்றும் மெல்லொற்றொன்றும் அல்லது இடையொற்றொன்றும் வரினும் தத்தச்சந்தமென்று புலவோர் கூறுவரென்பதாம்.

உதாரணம்; **மெய்ச்சொல், கர்த்தன்.**

## உதாரணச் சூத்திரம்

பத்தி யென்பதும் ஒற்றரும் சிட்டனும்
நெய்த்தென் றுரைப்பதும் மெய்ச்சொலும் கர்த்தனும்
தத்தஎன் றியங்கும் சந்தத் துதாரணம்.

**(இ-ள்)** மேல் நான்கு சூத்திரங்களில் வரையறுக்கப்பட்டுள்ள முறைப்படி அமையும் உதாரணப் பதங்களை இச் சூத்திரம் தொகுத்துக் கூறிற்று. அதனால் தத்தச் சந்தமானது மேற்கண்ட உதாரணப்படி ஆறுவகையினால் பிறக்குமென் றறிக (12).

## தத்தாச் சந்தம்

குறிலொடு வல்லினத் தொற்றிசைந்து அவ்வினத்து
உயிர்மெய் நெடில்வரில் தத்தா வாகுமே.

**(இ-ள்)** ஒரு குற்றெழுத்துடன் வல்லின மெய் சேர்ந்து அவ்வினத்து நெட்டெழுத் தொன்றும் வரின் 'தத்தா' என்ற சந்த மாகும் என்பதாம்.

உதாரணம்; **அத்தா (13).**

## இதுவுமது

குறிலொடு வல்லொற்று அவ்வுயிர் மெய்ந்நெடிற்
புணர்ப்பின்மற் றிருவகை யொற்றொன்று அடுப்பினும்
தத்தா வென்றே சாற்றுவர் பெரியோர்.

**(இ-ள்)** குற்றெழுத் தொன்றுடன் வல்லினமெய்யும் வல்லின நெடிலும், இடையொற்றேனும் மெல்லொற்றேனும் ஒன்று சேர்ந்தாலும், தத்தாச் சந்தமென்று பெரியோர் கூறுவர் என்பதாம்.

உதாரணம்: **கற்றூர், தொட்டான் (14).**

## இதுவுமது

குற்றெழுத் ததன்பின் இடையினத் தொற்றும்
வல்லின மெய்யும் அவ்வினத் துயிர்மெய்
நெடிலுஞ் சேரினும் தத்தா வாகுமே.

**(இ-ள்)** ஒரு குற்றெழுத்தின் பின் இடையின மெய்யொன்றும் வல்லின மெய்யொன்றும், அவ்வினத்து நெட்டெழுத்தொன்றும் சேர்ந்து வரினும் தத்தா என்ற சந்தமாகும் என்பதாம்.

உதாரணம்: **பொய்க்கோ (15).**

## இதுவுமது

எவ்வகைக் குறிலொடும் இடையினத் தொற்றும்
வல்லினத் தொற்றோடு உயிர்மெய் நெடிலும்
இடையின மெல்லினத்து ஒற்றி லொன்றும்
தத்தா என்றே சாற்றுதல் வழக்கே.

(இ-ள்) உயிர் உயிர்மெய் என்னும் ஏவ்வகைக் குறிலேனும் ஒன்றின்பின், இடையின மெய்யொன்றும், வல்லின மெய்யொன்றும், வல்லினநெடிலும், இடையின மெய்யேனும், மெல்லின மெய் யேனும் ஒன்றும், சேர்ந்துவரினும் தத்தாச் சந்தமென்பது முறை யென்ப தாம்.

உதாரணம்: **நெய்க்கோல், மெய்க்கோன்** (16).

## உதாரணச் சூத்திரம்

அத்தாவென்பதும் கற்ருர் என்பதும்
தொட்டான் என்பதும் பொய்க்கோ என்பதும்
நெய்க்கோல் என்பதும் மெய்க்கோன் என்பதும்
தத்தா வென்னும் சந்தத் துதாரணம்.

மேல் நான்கு சூத்திரங்களால் வரை யறுக்கப்பட்டுள்ள முறைப்படி அமையும் உதாரணப் பதங்களை இச் சூத்திரம் தொகுத்துக் காட்டிற்று.

அதனல் தத்தாச்சந்தமானது, மேற் கண்ட உதாரணப்படி ஆறுவகையால் பிறக்குமென்றறிக (17).

## தாத்தச் சந்தம்

நெடிலுடன் வல்லினத் தொற்ருேடு உயிர்மெய்க்
குறில்வரில் சந்தம் தாத்த வாகுமே.

(இ-ள்) நெட்டெழுத்துடன் வல்லொற் ருென்றும், அவ்வினக் குறிலொன்றும் வந்தால் தாத்த என்ற சந்தமாகும் என்பதாம்.

உதாரணம்: **காற்று** (18).

## இதுவுமது

நெடிலுடன் வல்லினத் தொற்றும்அவ்
வுயிர்மெய்க்
குறிலும்மற்று இருவகை ஒற்றில் ஒன்றும்
சாரினும் சந்தம் தாத்த வாகுமே.

(இ-ள்) ஒரு நெட்டெழுத்துடன் வல் லின மெய்யும் வல்லினக் குறிலொன்றும், இடையொற்றேனும் மெல்லின ஒற்றே னும், பொருந்தினும் தாத்தச் சந்தம் ஆகும்

உதாரணம்: **பாட்டர், கூத்தன்** (19).

## இதுவுமது

நெடிலோடு இடையின மெய்யும்வல் லொற்ருேடு
உயிர்மெய்க் குறிலும் ஒன்றினும் தாத்தவே.

(இ-ள்) நெட்டெழுத் தொன்றுடன், இடையின மெய்யொன்றும், வல்லொற் ருென்றும், அவ்வினக் குற்றெழுத்தும் சேர்ந்தாலும், தாத்தச் சந்தமேயாகுமென் பதாம்.

உதாரணம்: **பார்ப்பு** (20).

—தொடரும்

---

## (ஓர் இறைவன் உண்டு.)

கடற்காட்சி வான்காட்சி கார்வரைசூழ் காட்சி
உடற்காட்சி அவ்வுடல் ஒண்சூல் — படற்காட்சி
உய்த்துய்த் துணர்ந்தக்கண் ஓர்இறைவன் உண்டுஎன்னுப்
மெய்த்தன்மை நெஞ்சின் மிகும்.

# 'அவனன்றி இல்லை'

'பாலகவி' வயிநாகரம் வே. இராமநாதன் செட்டியார் (தத்புருஷ தேசிகர்) தேவகோட்டை.

"அவனன்றி ஓரணுவும் அசையாது" என்பது தமிழ்நாட்டு முதுமொழி. இங்கே, 'அவன்' என்று சேய்மைச் சுட்டினால் சுட்டப் பெறுபவன் ஆண்டவன். அவன், உலகுயிர்களுடன் கலந்து ஒன்றாகவும் உடனாகவும் இருப்பவனாயினும் "உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன" என்று தெய்வப் புலமைச் சேக்கிழார் பெருமானும் "உயிர் தொறும் ஒளித்து நின்ற கள்வன்" என்று பரஞ்சோதி முனிவரும் அருளிச் செய்தபடி, நமது மனம், வாக்கு காயங்களுக் கெட்டாத நெடுந்தொலைவில் இருப்பவனேயாவான்.

உலகியலிற் புகுந்து உழன்று கொண்டிருக்கின்ற நம் போலியர்க்கு "அவன்" என்று சேய்மைச் சுட்டால் சுட்டத்தக்க அவன், அருகிடத்தானாகவும் இருப்பான். "எச்சில் மயங்கிட உனக்கு ஈது இட்டாரைக் காட்டென்று" தந்தையாராகிய சிவபாத விருதயர், அருள் ஞானப்பாலுண்ட ஆளுடைய பிள்ளையைக் கேட்ட பொழுது "பீடுடைய பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே" என்று ஆண்டவனை அண்மைச் சுட்டினால் அவர் சுட்டிக் காட்டினார். திருவாசகத்துக்குப் பொருளருளிச் செய்ய வேண்டுமென்று தில்லை வாழந்தணர்கள் கேட்ட பொழுது கனக சபையில் எழுந்தருளியுள்ள கூத்தப் பெருமான் திருவுருவத்தை முன்னிறுத்தி "இது பொருள்" என்று, அண்மைச் சுட்டினால் ஆளுடைய அடிகள் சுட்டிக் காட்டினார்.

பொய்யர்க்குப் பொய்யாகவும், மெய்யர்க்கு மெய்யாகவும் இருந்தருளுகின்ற ஆண்டவன், சிவஞானியரது சிந்தைக்கு நெருங்கியவனாகவும், ஏனையோரது நெஞ்சத்துக்கு எட்டாதவனாகவும் இலங்குகின்றானென்பது வேதாகமங்களின் முடிவு.

"மனத்தகத்தான் தலைமேலான்
வாக்கி னுள்ளான்
வாயாரத் தன்னடியே பாடுந் தொண்டர்
இனத்தகத்தான் இமையவர்தஞ்
சிரத்தின் மேலான்
ஏழண்டத் தப்பாலான்"

என்ற அப்பரடிகள் திருவாக்கில், இறைவனது அண்மைநிலை சேய்மைநிலை ஆகிய இரண்டு நிலைகளும் குறிக்கப் பெற்றுள்ளன.

நிலையில்லாத உலகத்தை நிலையென்று கருதி வாழும் நம் போலியரால், 'அவன்' என்று நெடுந்தொலைவில் வைத்துச் சுட்டப் பெறும் சிவனையன்றி 'எவரும் ஏதும் இல்லை' என்பதைக் கயிலாயச் சித்தர் ஆகிய திருமூல தேவ நாயனார், திருமந்திர மாலைக் கடவுள் வாழ்த்து ஆறுவது செய்யுளில் அருளிச் செய்கின்றார். அந்தத் திருப்பாடல்,

அவனை யொழிய அமரரும் இல்லை
அவனன்றிச் செய்யும் அருந்தவம் இல்லை
அவனன்றி மூவரால் ஆவதொன் றில்லை
அவனன்றி ஊர்புகும் ஆறறி யேனே

என்பதாகும்.

அனைத்துயிர்களுக்கும் அந்தரியாமியாய் இருந்து, அவையவற்றின் வாழ்க்கை நிலைகளுக்கு மூலமாய் இருப்பவன் சிவபெருமான் ஒருவனே என்பதும், அவனையின்றி அமரர் முதலாகிய எவருமில்லை என்பதும், அவ்வுயிர்களைச் செயற்படுமாறு உய்க்கின்றவன் அவனே என்பதும் "அவனை ஒழிய அமரரும் இல்லை" என்ற முதல் வரியில் உணர்த்தப் பெற்றன. "அமரரும்" என்பதிலுள்ள உம்மை, எச்சவும்மையாய் மற்ற உயிர்களையும் குறித்தது.

சிவபெருமானை மறந்து "தாமே தேவ தேவர்" என்று செருக்குக் கொண்டதால், தக்கயாகத்திலும், சூரபன்மன் அரசியலிலும் தேவர்கள் பட்ட துன்பங்களுக்கு எல்லைகூற முடியாது. திருப்பாற் கடலைக் கடைந்து அமுதெடுத்தருந்தக் கருதிய தேவர்கள், அங்கே எழுந்த ஆலகால விடத்திற்கஞ்சி ஓட்டமெடுத்த வேளையில், அந்த நஞ்சையுண்டு சிவபெருமான் அவர்களைக் காத்திரா விட்டால், அமரர்களில் எவரேனும் மிஞ்சியிருப்பாரா? அவர்களுக்கு அமுதருந்தி மகிழும் வாய்ப்புத்தான் கிட்டியிருக்குமா? சிவபெருமான் "ஆலமுண்டிலனேல் தேவர் அமுதுமுண் டிடுவதெங்கே" என்று வினவுகிறது சிவஞான சித்தியார். அண்டவனது நீலகண்டம் "**அவனையொழிய அமரரும் இல்லை**" என்பதற்கு ஒரு அழியாத சான்ருக விளங்கிக் கொண்டிருக்கிறதல்லவா?

மக்கள் செய்யும் தவம் இருவகைப்படும். ஒன்று பிறவிக்குக் காரணமாகிய போக போக்கியங்களை வேண்டிச் செய்வது; மற்ருென்று அப் போக போக்கியங்களைத் துச்சமென வெறுத்து, என்றும் அழியாத முத்திப்பேற்றை நாடிச் செய்வது. அழிதன் மாலையவாகிய போகங்கள் பலவாகவே இருக்கின்றன. எல்லாப் போகங்களையும் குறையின்றி நுகருதற்குரிய முழுத்தவத்தையும் செய்தவர் யாருமில்லாமையினாலேயே இவ்வுலகத்திற் குறையின்றிப் போகம் நுகருவார் யாரும் இலராயினர். உலக போகங்களும் தவத்தினாலேயே அடைதற்குரியன என்பதை "மேலைத் தவத்தளவே யாகுமாம் தான் பெற்ற செல்வம்"; என்ற மூதுரையால் அறியலாம்.

புறச் சமய நூலாகிய சீவகசிந்தாமணி, ஏமாங்கத நாட்டுச் சிறப்பைக் கூறுமிடத்து, "நற்றவஞ் செய் வார்க்கிடம் தவஞ்செய் வார்க்கு மஃதிடம்" என்றது. இதற்கு உரை எழுதிய ஆசிரியர் நச்சினார்க்கினியர் "அது வீடு பெறத் தவஞ் செய்வார்க்கு இடம்: மறுமை கருதி இல்லறம் நடத்து வார்க்கும் இடம்," என்று கூறிப், போகம் விரும்பிச் செய்வது தவமென்றும், முத்தி விரும்பிச் செய்வது நற்றவமென்றும் உணர்த்தி, அவற்றது உயர்வு தாழ்வுகளை அறிவுறுத்திப் போந்தார். இவ்விருவகைத் தவத்துக்கும் பயன் தருபவர் சிவபெருமானேயாயினும், போகம் விரும்பிச் செய்யும் தவத்தைச் சிவபெருமானல்லாத மற்றைத் தேவர்களைக் குறித்தும் செய்வதுண்டு. அத்தேவர்கள் சிவபெருமான் வழங்கிய மேலான அதிகார சத்தியினுல் தவஞ் செய்பவர்களுக்கு முன்னிலையாகி வேண்டிய வரத்தைக் கொடுப்பார்கள்.

வேண்டுவார் வேண்டுவதை யீயும் சுதந்திரம் சிவபெருமான் ஒருவனுக்கே உண்டு. மற்றைத் தேவர்கள் ஆன்மாக்களுக்கு வழங்கும் நலங்கள் எல்லாம், சிவபெருமானிடம் அவர்கள் பெற்று வழங்குவனவே என்னும் உண்மையை,

> "யாதொரு தெய்வம் கொண்டீர்
> அத்தெய்வ மாகி யாங்கே
> மாதொரு பாகனுர் தாம் வருவர்"

என்று சிவஞான சித்தியார் அறிவிக்கின்றது. தேவர்கள் அனைவரும் சிவபெருமானைக் குறித்துச் செய்த தவ வலிமையினாலேயே, மேலான பதங்களிலிருந்து வருகிருர்கள்.

செய்கின்ற தவத்தின் இயல்பையும், சிறப்பையும் அறிந்து அதற்கேற்ற பயனை வழங்க வல்லவர் சிவபெருமான் ஒருவரேயாதலாலும், மற்றைத் தேவர்களுக்கு அந்தத் தகுதி அணுவளவேனும் இல்லாமையாலும், அவர்களும் தங்களைத் தகுதியுடையவர்களாக்கிக் கொள்ளச், சிவபெருமானை நோக்கிப் பெருந்தவம் செய்த வரலாறுகள் பல புராண இதிகாசங்களிற் கேட்கப் பெறுதலாலும் "**அவனன்றிச் செய்யும் அருந்தவம் இல்லை**" என்று ஆசிரியர் திருமூலதேவ நாயனர் இங்கே அருளிச் செய்தார். சிவபெருமானை முன்னிட்டுச் செய்யாத தவம், இம்மைப் போகம் பற்றியதாயினும் மறுமைப் போகம் பற்றியதாயினும் எட்டுணையும் பயன் தராததாகவே போய்விடுமென்பதும் இதனுல் உணர வேண்டியதாகும்.

CONNEMARA LIBRARY
10 JAN 1966
MADRAS



## ஸ்ரீ சங்கர பகவத் பாதர்

(துதி)

துங்க ராசத குணத்தோர்
துலங்குசத் துவத்தோர் போற்ற

வெங்கரா அனைய சிந்தை
மேயதா மதத்தோர்க் கெட்டாப்

பொங்கரா அணியி னுன்றன்
பொருவில்அங் கிசமாத் தோன்றும்

சங்கரா சாரியன் சீர்த்
தாள்மலர் பணிந்து வாழ்வாம்!

“ காண்பவன் சிவனே யானால்
அவனடிக் கன்பு செய்கை
மாண்பறம் அரன்றன் பாதம்
மறந்துசெய் அறங்க ளெல்லாம் வீண்
செயல்

என்ற சிவஞான சித்தியார் இதனை வலியுறுத்துதற் கெழுந்ததே.

பிரமன், திருமால், உருத்திரன் ஆகிய மூவரும் தமக்குரிய படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய மூன்று தொழில்களைச் செய்வதற்குச். சிவபெருமானது திருவருளே முன்னணியில் நின்று அவர்களைச் செலுத்தி வருகின்றது. அனைத்துச் செயல்களுக்கும் நிமித்த காரணனாயிருக்கும் ஆண்டவன், அம் மூவரையும் அதிட்டித்து நின்று முத்தொழில்களையும் அவர்கள் செய்யுமாறு செய்கின்றாரென்பதை “மூவண்ணல் தன்சந்நிதி முத்தொழில் செய்ய வாளா, மேவண்ணல்” என்ற பராசத்தி வணக்கச் செய்யுளிற் பரஞ்சோதி முனிவர் அருளிச் செய்கின்றார்.

“ விண்முதல் பூதலம் ஒன்றிய இருசுடர் உம்பர்கள் பிறவும் படைத்தளித் தழிப்படும் மூர்த்திக ளாயினை” என்பது ஆளுடைய பிள்ளையார் திருவாக்கு. இவ்வுண்மை “ அவனன்றி மூவரால் ஆவதொன்றில்லை” என்று திருமூலதேவரால் குறிக்கப் பெற்றது. சிவபெருமானை வேதங்கள் “துரீய மூர்த்தி” என்று துதிப்பது கொண்டும் மூவர்க்கும் முதல்வன் என்பது உணரக்கிடக்கிறது.

முத்தித் தலைவனாகிய சிவபெருமான், அம்முத்தியை ஆன்மாக்களுக்கு வழங்குகின்ற அளவில்மட்டும் நின்றுவிடாது, அதனை அவர்கள் பெறுதற்குரிய சாதனங்களில் ஒழுகுமாறும் அவர்களைச் செலுத்தி வருகின்றான். அங்ஙனம் அவன் செலுத்தாது போவானானால் “ காண்பாரார் கண்ணுதலாய்க் காட்டாக்காலே ” என்ற தமிழ் மறையின்படி, உயிர்கள் உய்யுமாற்றை அறிந்து எதனையும் காணவும், செய்யவும் இயலாதவராய்ப், பிறப்பதற்கே தொழிலாகி இறந்து வருந்துவார்கள். எல்லாவற்றிற்கும் துணையாயிருந்து உதவி வருகின்ற அவனது திருவருள், அதனைப் பெறுதற்கும் துணைநின்று உதவ வேண்டும். “அவனருளாலே அவன் தாள் வணங்கி” என்பது திருவாசகம். இதனாலேயே சிவபெருமானையின்றி முத்தியாகிய பேரூரைச் சென்று சேரும் வழியை அறியமாட்டேனென “ அவனன்றி ஊர்புகு மாறறி யேனே” என்ற இறுதியடியில் அருளிச் செய்தார்.

---

## திருவாசகம்

அரைசே பொன்னம் பலத்தாடும் அமுதே என்றுன் அருள்நோக்கி
இரைதேர் கொக்கொத் திரவுபகல் ஏசற் றிருந்தே வேசற்றேன் ;
கரைசேர் அடியார் களிசிறப்பக் காட்சி கொடுத்துன் அடியேன்பால்
பிரைசேர் பாலின் நெய்போலப் பேசா திருந்தால் ஏசாரோ ?

---

இன்றெனக் கருளி இருள்கடிந் துள்ளத் தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன் ! நீயலாற் பிறிதுமற் றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றாம் திருப்பெருந் துறையுறை சிவனே!
ஒன்றும்நீ யல்லை ! அன்றிஒன் றில்லை ! யார்உனை அறியகிற் பாரே ?
—மாணிக்கவாசகர்.

# பராங்குச முனியும் - பரகால கவியும்

(மஹாவித்வான் ஸ்ரீ காஞ்சீ P. B. அண்ணங்கராசாரிய சுவாமிகள்.)

(முன் இதழ்த் தொடர்ச்சி : பக்கம், 396)

ஆபாஸ பந்துக்களின் ஹேயத்தன்மை பற்றி விளக்கி, (9—1.) 'கொண்ட பெண்டிர் மக்களுற்றார்' என்னுமொரு பதிகத்தினல் மிக விரிவாக வுரைத்தார் நம்மாழ்வார்; அதனை இவ்வாழ்வார் பெரிய திருமொழியில் (8-9-7) "பெற்றாரும் சுற்றமுமென்றிவை பேணேன் நான், மற்றாரும் பற்றிலேன்" என்று சுருக்கி யுரைத்தனர். ஸ்ரீமந் நாராயண னுடைய பரத்துவத்தை நம்மாழ்வார் "உயர் வற வுயர் நலம்" "திண்ணன் வீடு" "அணைவ தரவணை மேல்" "ஒன்றுந் தேவும்" என்னும் நான்கு பதிகங்களில் மிக விரிவாக வருளிச் செய்தார்; அதனை இவ்வாழ்வார் பெரிய திருமொழியில் (11-6.) "மைந்நின்ற கருங்கடல் வாயுலகின்றி" என்கிற ஒரே பதிகத்தினல் சுருக்கி யுரைத்தனர். அவர் விஸ்தரித்ததை இவர் சுருக்குவதென்னுமிதனை மற்றுஞ் சில விஷயங்களிலுங் கண்டு கொள்க.

## — நம்மாழ்வார் சுருக்கி இவ்வாழ்வார் விஸ்தரித்தது —

அவர் விஸ்தரித்ததை இவர் ஸங்க்ரஹித்தமை கீழே காட்டினோம். அவர் ஸங்க்ரஹித்ததை இவர் விஸ்தரித்தமை இங்குக் காட்டுவோம். நம்மாழ்வார் திருவாய் மொழியில் (5-3.) "மாசறு சோதிப் பதிகத்தில்" குதிரியாய் மடலூர்துமே" என்றும் "யாம் மடலூர்ந்தும் எம்மாழியங்கைப் பிரானுடைத் தூமடல் தண்ணந்துழாய் மலர் கொண்டு சூடுவோம்" என்றும் இரண்டு துண்டுகளால் மடலூர்தலை ப்ரஸ்தாவித்தார்; மடலூர்தலைப் பற்றி நம்மாழ்வார் திருவாக்கில் வேறு பேச்சு கிடையாது, இங்ஙனே சுருக்கமாக வுள்ளதை இவ்வாழ்வார் சிறிய திருமடல், பெரிய திருமடல் என்னுமிரண்டு திவ்வியப்பிரபந்தங்களினுல் மிக விரித்துரைத்தார். அவருடைய இரு சிறு வார்த்தைகளுக்கு இவர் இரண்டு பிரபந்தங்கள் இட்டருளினாராயிற்று. நாராயண மந்திரத்தின் சிறப்பை நம்மாழ்வார் திருவாய் மொழியில் (1-2-10) "எண் பெருக்கந் நலத்தொண் பொருளீறில, வண் புகழ் நாரணன்" என்றும், (10-5 1) "கண்ணன் கழலிணை நண்ணும் மனமுடையீர்! எண்ணுந் திரு நாமம் திண்ணம் நாரணமே" என்றும் இரண்டு சிறு பாசுரங்களினுலருளிச் செய்தனர். அதனை இவ்வாழ்வார் பெரிய திருமொழியில் (1-1.) "வாடினேன் வாடி யென்றும் (6-10)" கிடந்த நம்பி குடந்தை மேவி யென்று மிரண்டு பதிகங்களில் "நான் கண்டு கொண்டேன் நாராயணா வென்னும் நாமம்" "நாமஞ் சொல்லில் நமோ நாராயணமே" என்றும் ஒருகாற் சொன்னுப்போலே ஒன்பதின்காற் சொல்லி வைத்தனர். எம்பெருமான் ஸம்ஸாரி சேதந ஸம்ரக்ஷணார்த்தமாகப் பல திருவவதாரங்கள் செய்தருளும் படியை நம்மாழ்வார் திருவிருத்தத்தின் தொடக்கத்தில் "உயிரளிப்பான் எந்நின்ற யோனியுமாய்ப் பிறந்தாயிமையோர் தலைவா" என்றும், திருவாய் மொழியில் (5-1-10) "மீனாமையுமாய் நரசிங்கமுமாய்க் குறளாய், கானாரேனமுமாய்க் கற்கியாமின்னங் கார்வண்ணனே" என்றும் சுருக்கமாகப் பேசி வைத்தார். அதனை இவ்வாழ்வார் பெரிய திருமொழியில் (8-8) "வானோ ரளவும் முதுமுந்நீர்" (11-4.) "நிலையிடமெங்குமின்றி" என்கிற இரண்டு பெரிய பதிகங்களினல் மிக விரித்துரைத்தார். நம்மாழ்வார் சுருக்கியதை இவ்வாழ்வார் விஸ்தரித்தாரென்னுமிதனை மற்றுஞ் சில விஷயங்களிலுங் கண்டு கொள்க.

**—விபவ அர்ச்சைகளில் அபிநிவேச விசேஷங்களையெடுத்துக் காட்டுதல்—**

மத்ஸ்ய கூர்ம வராஹ ராமக் கிருஷ்ணாதி யவதாரங்களுக்கு விபவாவதாரமென்று பெயர். இவற்றுள் எந்த அவதாரத்தில் நம்மாழ்வார்க்கு அபிநிவேசாதிசய மென்று ஆராய்ந்தால், முதற் பிரபந்தமான திருவிருத்தத்தின் முடிவில் "ஏனத் துருவாயிடந்த ஞானப் பிரானையல்லாலில்லை நான் கண்ட நல்லதுவே" என்றும், திருவாய் மொழியின் முடிவில் "கோலவராக மொன்ராய் நிலங் கோட்டிடைக் கொண்ட வெந்தாய்" என்று மருளிச் செய்திருப்பதை ஊன்றி நோக்கின திருமங்கையாழ்வார் வராஹாவதாரமே இவர் மிக ஈடுபட்டதென்று துணிந்து தமது பெரிய திருமொழியின் தொடக்கத்தில்–பன்றியாயன்று பாரகங் கீண்ட பாழியானுழியானருளே—என்று அவ்வவதாரந்தன்னையே போற்றினர். இனி அர்ச்சையிற்செல்வோம். கோயில் திருமலை பெருமாள் கோயில் முதலான திவ்யதேச மூர்த்திகளுக்கு அர்ச்சாவதாரமென்று பெயர். இவற்றுள் நம்மாழ்வாருடைய ஈடுபாடு எந்த திவ்யதேசத்தில் மிக்கதென்று ஆராய்ந்த திருமங்கையாழ்வார் திருக்குடந்தையிலென்று கண்டார். (எங்ஙனே யென்னில்;) திருவாய் மொழியின் முடிவில் "சூழ்விசும்பணி முகிற்பதிகம்" திருநாட்டிலநுபவத்தைப் பரக்கப் பேசுவது; அங்கு லீலாவிபூதியின் நினைவு வருவதற்கு ப்ரஸக்தி கிடையாது. அப்படியிருந்தும் "குடந்தையன் கோவலன் குடியடியார்க்குத் தொடர்ந்தெங்கும் தோத்திரஞ் சொல்லினர்" என்கிற பாசுரம் மிகவற்புதமாக அவதரித்துள்ளது. அங்குள்ள ஸூரிகள் இவர்களை யுபசரிக்கும் போது 'இவர்கள் திருக்குடந்தை யெம்பெருமான் திருக்குணங்களிலே ஸந்தானமாக ஈடுபட்டவர்கள்' என்று சொல்லித் தொடர்ந்து தோத்திரஞ் செய்ததாகச் சொல்லிற்று. திருவரங்கம் திருவேங்கடம் திருமாலிருஞ்சோலை முதலான திருப்பதிகள் கிடக்க, அவற்றை யெல்லாம் விட்டுத் திருக்குடந்தையிலீடுபாட்டையே யெடுத்துரைத்துத் தோத்திரஞ் செய்ததாக வருளிச்செய்ததன் காரணம் ஆராயுமளவில், திவ்யப்பிரபந்தங்களெல்லாம் லோபித்திருந்த காலத்தில் திருக்குடந்தை விஷயமான "ஆராவமுதே" யென்கிற பதிகமொன்றுமட்டும் ஸ்ரீமந் நாதமுனிகள் திருச்செவியிலேபட அதிலிருந்தே நாலாயிரமும் புநரவதாரம் செய்ய ப்ராப்தமாயிற்றென்று ஐதிஹ்யமாகையினாலே, ஆழ்வார்க்கும் அங்குள்ள ஸூரிகட்கும் பவிஷ்யத் ஜ்ஞானமிருந்தே இப்படி பாசுரம் தோன்ற நேர்ந்ததென்பது ரஹஸ்ய மருமம். இவ்வாறாக நம்மாழ்வார்க்குத் திருக்குடந்தையிலே அபிநிவேசமிருக்கும்படியை யுணர்ந்தே திருமங்கை யாழ்வார் ஸ்வப்ரபந்தாரம்பத்திலேயே (1–1–2) சூழ்புனற் குடந்தையே தொழுது என்றும் (1–1–7) சூழ்புனற்குடந்தையே தொழுமின் என்றும் அருளிச்செய்ததன்றியும், சரமப்பிரபந்தமான திருநெடுந்தாண்டகத்தை முடித்தருளும் போதும், தண்குடந்தைக் கிடந்தமாலை நெடியானையடி நாயேன் நினைந்திட்டேனே என்று நம்மாழ்வாரைப் போலவே திருக்குடந்தை நினைவாலே முடித்தருளினார்.

அதற்கடுத்த பாசுரத்திலும் ஒரு விசேஷத்தை அற்புதமாக்கிக் காட்டி நின்றார்; (அதாவது) "அன்னமாய் முனிவரோடு அமரரேத்த அருமறையை வெளிப்படுத்த வம்மான் தன்னை" என்று, நம்மாழ்வார்க்குத் திருநாட்டில் திருக்குடந்தை நினைவு வருவதற் குறுப்பான ஐதிஹ்யத்தை முத்ராலங்காரரீதியில் காட்டிவைத்தார். ஆசார்யஹிருதயத்தில் (151.) "நாத யாமுனர் போல்வாரை அன்னமென்னும்" என்றருளிச் செய்தபடி அன்னமாயும், நாதமுனிகளென்னும்படி முனிவராயுமுள்ள ஸ்ரீமந் நாதமுனிகளோடே கூட **(அமரர் ஏத்த)** திருக்குருகூரிலுள்ள நிலத்தேவர்கள் துதிக்க, **(அருமறையை வெளிப்படுத்த வம்மான்)** "நாதனுக்கு நாலாயிர முரைத்தான் வாழியே" என்கிறபடியே அருந்தமிழ் மறையை நம்மாழ்வார் வெளியிட்டருளினபடி காட்டிற்றாயிற்று.

### தாமான தன்மையிற் பேசுவதோடு நில்லாமல் பெண்மை யெய்தியும் பேசுவதில் ஒற்றுமை —

நம்மாழ்வார் குருகூர்ச் சடகோபனுன நிலைமையோடு மட்டும் பேசாமல், தலை மகளாக நின்றும் தாயாக நின்றும் தோழியாக நின்றும் பேசுவதைத் திரு விருத்தத்திலும் திருவாய் மொழியிலும் காணு நின்றோம். திருவிருத்தம் நிறக. திருவாய் மொழியில் தலைமகளாக நின்று பேசின பதிகங்கள் பதினேழு. தாயாக நின்று பேசின பதிகங்கள் ஏழு. தோழி யாக நின்று பேசின பதிகங்கள் மூன்று. ஆக 27 பதிகங்கள் வேற்று வாயாலே பேசினவை. மற்ற 73 பதிகங்கள் தா மான தன்மையில் நின்று பேசினவை.

**தலைமகள் பாசுரமான பதிகங்களாவன ;-**

1. அஞ்சிறைய மட நாராய்.
2. வாயுந்திரையுகளும்
3. ஏறாளுமிறை யோனும்
4. மாசறு சோதி
5. ஊரெல்லாந் துஞ்சி
6. எங்ஙனேயோ வன்னை
7. மானேய் நோக்கு நல்லீர்
8. வைகல் பூங்கழிவாய்
9. மின்னிடை மடவார்கள்
10. பொன்னுல காளீரோ
11. வெள்ளைச் சுரிசங்கொடு
12. ஏழையர் ஆவி யுண்ணும்
13. நங்கள் வரிவளை யாயங்காளோ
14. இன்னுயிர்ச் சேவலும் நீரும்
15. எங்கானல கங்கழிவாய்
16. மல்லிகை கமழ் தென்றல்
17. வேய்மரு தோளிணை, ஆக 17.

**— தாய் பாசுரமான பதிகங்களாவன —**

1. ஆடியாடி.
2. பாலனாய்
3. மண்ணையிருந்து
4. கடல் ஞாலம்.
5. மாலுக்கு.
6. உண்ணுஞ் சோறு.
7. கங்குலும் பகலும்.

ஆக 7.

**— தோழி பாசுரமான பதிகங்களாவன —**

1. தீர்ப்பாரையாமினி.
2. துவளில் மாமணிமாடம்.
3. கருமாணிக்க மலை. ஆக - 3.

இங்ஙனே திருமங்கையாழ்வார் பதிகங் களும் காட்டுதும் ;

(தொடரும்.)

---

## கோயில் நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| ஸ்ரீ சாமவேதீசுவர சுவாமி கோயில், திருமங்கலம். | பெருந்திருவிழா. |
| ஸ்ரீ கோதண்ட ராமசுவாமி கோயில், வடுவூர். | பெருந்திருவிழா. |
| ஸ்ரீ ஆதிபுரீசுவரர் கோயில், சிந்தாதிரிப்பேட்டை (சென்னை). | பெருந்திருவிழா. |
| ஸ்ரீ கைலாச நாத சுவாமி கோயில், கடாரங்கொண்டான். | மகா கும்பா பிஷேகம். |
| ஸ்ரீ மாரியம்மன் கோயில், உதகை. | திருத்தேர் விழா. |
| ஸ்ரீ ரங்கநாத சுவாமி கோயில், திருநீர்மலை. | பிரம்ம உத்சவம். |
| ஸ்ரீ பூவணநாத சுவாமி கோயில், கோவில்பட்டி. | பங்குனிப் பெருவிழா. |
| ஸ்ரீ சுந்தர ராசப்பெருமாள் கோயில், பரம்பக்குடி. | சைத்ரோற்சவம். |
| ஸ்ரீ சட்டைநாத சுவாமி கோயில், அம்பல். | சைத்ரோத்சவம். |
| ஸ்ரீ உத்தமர் கோயில், பிட்சாண்டார் கோயில். | பிரம்ம உத்சவம். |
| ஸ்ரீ சந்தான ராமசுவாமி கோயில், நீடாமங்கலம். | பிரம்மோத்சவம். |
| ஸ்ரீ காளத்தீசுவரசுவாமி கோயில், திண்டுக்கல். | பிரம்மோத்சவம். |

# மதுராந்தகம் கல்வெட்டுக்கள்-2

திரு. டாக்டர் மா. இராசமாணிக்கனர்

## (பெருமாள், சிவன் கோவில்கள்)

மதுராந்தகம் என்பது சென்னைக்குத் தெற்கே ஏறத்தாழ ஐம்பதுகல் தொலைவில் அமைந்துள்ள ஊராகும். இவ்வூரில் ஒரு பெருமாள் கோவிலும் இரண்டு சிவன் கோவில்களும் உள்ளன. பெருமாள் கோயிலின் இன்றைய பெயர் கோதண்டராமர் கோவில் என்பது. சிவன் கோவில்களுள் ஒன்றன் பெயர் சுவேதாரண்யேசுவரர் கோவில் என்பது; மற்றொன்றன் பெயர் அருளாளேசுவரர் கோவில் என்பது. பெருமாள் கோவிலில் ஆறு கல்வெட்டுக்களும், சுவேதாரண்யேசுவரர் கோவிலில் பதினேழுகல்வெட்டுக்களும், அருளாளேசுவரர் கோவிலில் இரண்டு கல்வெட்டுக்களும் கல்வெட்டுத் துறையினரால் படியெடுக்கப்பட்டுள்ளன.

அரசர்கள், அரசியல் அலுவலர், வணிகர், கோவில் பணிமக்கள் பொதுமக்கள் முதலியோர் கோவிலில் பலவகை விளக்குகள் எரிப்பதற்கு ஆடுகள், பசுக்கள், நிலங்கள், காசுகள் முதலியவற்றை ஊரவையாரிடம் அல்லது ஆட்சியாளரிடம் அல்லது கோவில் குருக்களான சிவப்பிராமணரிடம் ஒப்புவித்தல் வழக்கம்; இவ்வாறே கோவில் வழிபாட்டிற்கும் விழாக்கள் முதலியவற்றிற்கும் நிலத்தையும் பணத்தையும் கொடுப்பது வழக்கம்; கடவுளர் திருவுருவங்களை எழுந்தருளச் செய்து அவற்றின் பூசை விழாக்களுக்காக நிலத்தையோ காசையோ கொடுப்பதும் உண்டு. இத்தகைய அறங்கள் என்றும் நடைபெறுவதற்காகவே கோவில் சுவர்களில் அவை பற்றிய விவரங்கள் வெட்டப்பட்டுள்ளன. அக்கல்வெட்டுக்களில் அவை வெட்டப்பட்ட காலத்தில் ஆட்சிபுரிந்த அரசர் பெயர்களும் அவர்தம் வீரச்செயல்களும் அக்கல்வெட்டுக்கள் எழக் காரணமான அறங்கள் பற்றிய விவரங்களும் பொறிக்கப்படுதல் அக்கால வழக்கம். இனிக் கல்வெட்டுக்களில் காணப்பெறும் விவரங்களை இங்குக் காண்போம்.

### கோதண்டராமர் கோவில்

| | |
|---|---|
| பராந்தகன் | கி. பி. 907—955 |
| இராசேந்திரன் I | கி. பி. 1022—1044 |
| விக்கிரமசோழன் | கி. பி. 1118—1135 |
| குலோத்துங்கன் II | கி. பி. 1113—1150 |
| கர்னல் லயனல் பிளேஸ், செங்கற்பட்டு ஜாகீர் கலெக்டர், கிழக்கிந்தியக் கம்பெனி. | கி. பி. 1795—1798 |

### அருளாளேசுவரர் கோவில்

| | |
|---|---|
| விக்கிரமசோழன் | கி. பி. 1118—1135 |
| குலோத்துங்கன் | கி. பி. 1113—1150 |

### பெருமாள் கோவில்

பெருமாளின் பெயர் இன்று கோதண்டராமர் என்று கூறப்படுகிறது. ஆயின் இவர் பெயர் கல்வெட்டுக்களில் **திருஅயோத்திப் பெருமாள்** என்று காணப்படுகிறது. (1) முதற் பராந்தகன் காலத்தில் அப்பெருமாளுக்கு நிலம் விடப்பட்டது. (2) விக்கிரமசோழன் காலத்தில் ஒரு பெண்மணி பெருமாளின் வழிபாட்டுக்காகக் கோவில் நிலத்தில் நான்கு பாடகம் உழவுக்குக் கொண்டு வந்தாள்.

### அருளாளேசுவரர் கோவில்

(3) விக்கிரம சோழனது ஆறும் ஆட்சியாண்டில் (கி. பி. 1123இல்) ஊரவையார் 25 பாடகம் நிலத்தை வழங்கினர். அதன் விலை 20 காசு. அதனில் கோவில், மண்டபம், திருச்சுற்று

---

*இக்கட்டுரை, கல்வெட்டு ஆண்டு அறிக்கைகள் (1896, 1901, 1922) துணைக்கொண்டும், தென் இந்தியக் கல்வெட்டுக்கள் ஐந்தாம் தொகுதியின் துணைக்கொண்டும் எழுதப்பெற்றது.

மாளிகை, நந்தவனம், மடைவிளாகம் அமைக்கப் பட்டன. (4) இரண்டாம் குலோத்துங்கன் காலத்தில் இவ்வூர் அகளங்கீசுவர முடைய மகாதேவர் கோவிலுக்கு நிலதானம் செய்யப் பட்டது. இக்கோவிலில் தேவகன்மிகளும் ஸ்ரீ மாகேசுவரக் கண்காணி செய்வார்களும் இருந்தார்கள்.

## விளக்கு அறம்

இரண்டாம் குலோத்துங்கன் காலத்தில் மதுராந்தகச் சதுர்வேதிமங்கலத்து ஆளுங்கணத் தாருள் ஒருவரான பரகேசரிச்சேரி குண்டூர் யக்ய பட்டன் மகன், திருஅயோத்தி கருணாகரப் பெரு மாளுக்கு ஒரு நந்தா விளக்குக்கும் ஒரு சந்தி விளக் குக்கும் கமுகந்தோட்டத்தை விட்டான். அதன் அளவு கால்பாடகம். இதனை எழுதியவன் அவ்வூர்க் கரணத்தான் சீராமபட்ட சோமயாஜி.

## பிற அறங்கள்

ஆளிபட்டன் பிராமணி பெரியநங்கைச்சாநி என்பவள் திருஅயோத்திப் பெருமான் உத்தரா யணத்தில் ஊர்வலம் புறப்பட்டு அருள, ஸ்ரீ பண்டாரத்தில் நான்கு காசுகள் வழங்கினள். ஒரு காசுக்கு ஆண்டுக்கு இரண்டு திரமம் வட்டி. இந்த வட்டியைக் கொண்டு ஊர்வல விழா நடை பெற்றது. ஸ்ரீ காரியம் செய்வார்களும் ஸ்ரீ வைஷ்ணவ வாரியமும் இதனை மேற்பார்த்தனர்.

## பொதுச் செய்திகள்

(1) சோழர் காலத்தில் நில அளவு வேலி, பாடகம் குழி என நில அளவுக்கேற்றபடி பலவாறு பெயர் பெற்றது. (2) மதுராந்தகச் சதுர்வேதிமங்கலத்துப் பெருங்குறிச் சபையினர், ஆளுங்கணத்தார், ஸ்ரீகாரியம் செய்பவர்கள். ஸ்ரீ வைஷ்ணவாசாரியர் என்பவர் ஊராட்சி மன்றத் திலும் கோவில் ஆட்சியிலும் பங்கு கொண்டிருந் தனர். (3) முதற்பராந்தகனுக்கு, விருதுப் பெயர்கள் பல. அவற்றுள் மதுராந்தகன், வீரசோழன், வீரநாராயணன் என்பவை குறிப்பிடத்தக்கவை. இப்பெயர்களால் மதுராந் தகம் என்ற ஊரும், வீரநாராயணவதி என்ற ஏரியும் வீரசோழவாய்க்கால் என்ற வாய்க் காலும் விளங்கலாயின. (4) மதுராந்தகப் பேரேரி, மிகப் பல சுற்றூர்களுக்கு நீரை வழங்கி வருகிறது. இது முதற் பராந்தக சோழன் பெயரால் அமைந்தது. (5) மதுராந்தகச் சதுர் வேதிமங்கலத்துக் கடைத்தெரு 'வீரசோழப் பேரங்காடி' எனப் பெயர் பெற்றது. வணிகர் தெரு 'புவனமுழுதுடைப் பெருந்தெரு' எனப் பெயர் பெற்றது. (6) விக்கிரம சோழன் பெயர்களுள் 'அகளங்கன்' என்பது சிறப்புடை யது. அப்பெயரால் அமைந்த சிவன்கோவிலே, அகளங்க ஈசுரம் என்பது. அஃது அருளாள ஈசுரம் என்றும் பெயர் பெற்றது.

## ஊர்கள்

பெருமாள் கோவில் கல்வெட்டுக்களில் மதுராந் தகத்தை அடுத்துள்ள சில ஊர்ப் பெயர்கள் காணப்படுகின்றன. அவை மதுராந்தகச் சதுர்வேதிமங்கலத்துத் தென்பிடாகை வீர போகி, செங்கோட்டூர்க் கிழைச்சேரி, சின்றிப் பாக்கம், செய்யூர், பாக்கூர் பெரும்பாக்கம், கல்லம்பாறை என்பன.

## மக்கட் பெயர்கள்

பெருமாள் கோவில் கல்வெட்டுக்களில் கீழ் வரும் பெயர்கள் காணப்படுகின்றன: ஸ்ரீராம பட்டன், யக்ஞபட்டன், ஆளிபட்டன், பெரிய நங்கைச்சாநி, மதுராந்தகமுடையான் தர்மப் பிரியன் வைத்தமாநிதி, நாலாயிர ஆசாரியன்.

## அருளாளேசுவரர் கோவில்

இக்கோவிலில் திருமதில் இல்லை; கருவறை யும் நடு மண்டபமும் பழையவை; முன் மண்ட பம் புதியது; 30 ஆண்டுகட்கு முன்பு கட்டப் பட்டது. கல்வெட்டுத்துண்டுகள் கோவிலின் வெளிப்புறத் தெற்கு, வடக்கு, கிழக்குச் சுவர் களில் உள்ளன. இவையே முன்பு குறிக்கப் பட்டவை, கோவிலுக்கு உள்ளே நுழைவாயிலை அடுத்துச் சிதைவுற்ற நந்தி, பிள்ளையார் சிலைகள் உள்ளன. தட்சிணாமூர்த்தி சிலை பழைமை வாய்ந் தது—சிதைவுற்றது. தட்சிணாமூர்த்தியின் புதிய சிலை கோவிலுள்ளே வைக்கப்பட்டுள்ளது.

---

* யான் 16, 17-1-65 இல் இக்கோவில்களைப் பார்வையிட உதவிபுரிந்த பெருமக்கள் மதுராந்தகம் கே. வி. கே. பிள்ளை, பள்ளித் துணை ஆய்வாளர் திரு. இராம. கலியாண ராமன், புலவர் சி. கயிலாயம் ஆவர். இப் பெருமக்கட்கு எனது நன்றி உரியது.

## குமரவேள் மேடு,

வயல்களுக்கு நடுவில் ஏறத்தாழ நானூறு அடி நீளமும் 150 அடி அகலமும் உள்ள மேடு குமரவேள் மேடு எனப்படுகிறது. மேட்டின் கரையில் ஆங்காங்குக் கருங்கற்கள் மிக்குள்ளன. அவை நிலத்திற்கடியிலிருந்து எடுக்கப்பட்டவை. உடைந்து கிடக்கும் கற்பகுதிகளில் எழுத்துக்கள் உள. மேட்டின் நடு இடத்தில் பழைய கோவிலின் அடிப்பகுதியை இன்றும் காணலாம். இம் மேட்டின் வடபகுதியில் புதரிலிருந்து லிங்கமும் முருகன் சிலையும் கிடைத்தன. அவ்விடத்திற்கு நேர் எதிரில் சிவலிங்கம் நாட்டப் பெற்றிருந்த எட்டுக் கோணப் பள்ளம் உள்ளது. மேட்டில் மூன்று நந்திகள் உள. குமரவேள் மேட்டுக்குத் தென்பால் ஆறு உறைகிணறுகளைக் கொண்ட கோயில் குளம் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இது சென்ற ஆண்டுவரை வயலாக இருந்தது. இப்பகுதிக்குக் கிழக்கில் சுமார் நூறடித் தொலைவில் உள்ள வயலில் வேறு ஓர் உறைகிணறு உள்ளது; அதன் குறுக்களவு இரண்டரை அடி; ஆழம் மிகுதியானது. ஆறு கிணறுகள் உள்ள பள்ளத்தில் கல்வெட்டுள்ள கருங்கல் துண்டுகளும் உறை கிணற்றுத் துண்டுகளும் உள. இந்த மேட்டிலிருந்து எடுக்கப்பட்ட கற்கள் மதுராந்தகப் பேரேரியின் படிக்கட்டுக்கள் கட்டவும் அகோபிலமடம் கட்டவும் பயன்பட்டனவாம். ஏரியின் படிக்கட்டுகளில் கல்வெட்டுள்ள கற்களும் காணப்படுகின்றன.

---

*கி. பி. பதினைந்தாம் நூற்றுண்டினரான அருணகிரிநாதர்,

(1) "மதுராந்தகத்து வடதிருச்சிற்
றம்பலத் தமர்ந்த பெருமாளே"

என்று திருப்புகழில் இரண்டு பாடல்களில் பாடியுள்ளார்.

திருச்சிற்றம்பலம் என்பது சிவன்கோவிலைக் குறிக்கும் பெயராகும். அது முருகனுக்குரிய தனிக் கோவிலைக் குறியாது. எனவே, வடதிருச்சிற்றம்பலம் என்னும் சிவன் கோவிலுள் உள்ள சிறுகோவிலில் எழுந்தருளியிருந்த முருகனையே அருணகிரிநாதர் பாடினுர் என்று கொள்வது பொருத்தமாகும்.

இம்மேட்டில் உள்ள சிறிய அறையில் ஒரு லிங்கமும் (ஆவுடையார் இல்லாதது) அறுமுகன் மயில்மீதுள்ள கோலத்துடன் கூடிய சிலையும் உள்ளன. அருணகிரிநாதர் பாடல்பெற்ற வடதிருச்சிற்றம்பலத்து முருகன் இப்பெருமானே என்று ஊர்ப் பெரியவர்கள் உரைக்கின்றனர்.* "மதுராந்தகத்து வடதிருச்சிற்றம்பலம்" என்று அருணகிரிநாதர் குறிப்பிட்டது குமரவேள் மேட்டையே குறிக்கும் என்று திருவெண்காடர் கோவில் குருக்களான காலஞ்சென்ற சுப்பிரமணிய குருக்கள் அடிக்கடி கூறியதுண்டு என்று அவர் மகனுர் வித்துவான் சண்முகசுந்தர குருக்கள் என்னிடம் கூறினுர்.

குமரவேள் மேட்டுக்குத் தென்புறம் உள்ள நிலங்கள் சுவாமி, அம்மன் பெயர்களாலேயே வழங்கப்படுகின்றன. அம்மேட்டுக்குக் கிழக்கிலுள்ள நிலம் 'மதுராபுரி' என்றும் அதற்கு வடபால் உள்ள நிலம் 'நட்டுவப் பள்ளம்' என்றும் இன்றும் வழங்குகின்றனவாம். ஊர்க் கணக்கர் மேலும் பல விவரங்களைத் தருதல் கூடும்.

குமரவேள் மேட்டையடுத்த மேட்டுத் தெருவில் பிள்ளையார் கோவில் ஒன்று உள்ளது. அது மாமல்லபுரம் திரௌபதியம்மன் கோவில் அமைப்புடையது. கோவிலுக்கு முன்புறம் நாகம், பிட்சாடனர், சூரியன் சிலைகள் நிறுத்தப்பட்டுள்ளன. பின் சுவரில் கல்வெட்டுப் பகுதி உள்ளது. இங்குள்ள கற்சிலைகளும், கல்துண்டுகளும் குமரவேள் மேட்டைச் சேர்ந்தவை என்று ஊரார் உரைக்கின்றனர்.

குமரவேள் மேட்டுக்கும் இப்பிள்ளையார் கோவிலுக்கும் இடைப்பட்ட நிலத்தில் 'பெரியகால்' (வாய்க்கால்) அமைந்துள்ளது. அதனை அடுத்துள்ள மேட்டில் புங்கநாச்சியார் சிலையும் இரண்டு யானைகளைக் குறிக்கும் சிறிய சிலைகளும் உள்ளன. அந்த மேட்டுப் பகுதி அம்மனுக்கு உரியது. அம் மேட்டை அடுத்த வயலில் ஆண், பெண் உருவங்களில் இரண்டு தலைகள் மட்டும் கிடைத்துள்ளன. அவை மண்ணுல் செய்யப்பட்டுச் சுடப்பட்டவை; வேலைப்பாடு கொண்டவை.

குமரவேள் மேட்டுக்குக் கிழக்கில் முன்பு தெருவாக இருந்த பகுதி இப்பொழுது வயலாக மாறி

புள்ளது. அது 'தெருக்கழனி' எனப்படுகின்றது.

குமரவேள்மேடு அருணகிரிநாதர் காலத்தில் (கி. பி. 15-ஆம் நூற்றுண்டில்) வடதிருச்சிற்றம்பலம் என்ற பெயர் கொண்ட சிவன் கோவிலைத் தன்னகத்தே பெற்றிருந்தது என்று கூறுவதற்கு மேலே கூறப்பெற்ற சான்றுகள் இடந்தருகின்றன. 'அருணகிரிநாதர் திருவெண்காடர் கோவிலிலுள்ள முருகனையே பாடினுர் என்று ஏன் கொள்ளக்கூடாது?' என்று சிலர் மதுராந்தகத்தில் கேட்கின்றனர். அம் முருகன் உள்ள கோவில் 'திருவெண்காடுடையார் கோவில்' என்று பெயர் பெற்றுள்ளதே தவிர, 'வடதிருச்சிற்றம்பலம்' எனப் பெயர் பெறவில்லை என்பது இங்கு அறியத்தகும். எனவே வடதிருச்சிற்றம்பலம் என்ற பெயர் கொண்ட சிவன் கோவிலில் இருந்த முருகனைத்தான் அருணகிரிநாதர் பாடினுர் என்பது மிகத் தெளிவாகும். ஆதலில், குமரவேள் மேட்டில் இருந்த சிவன் கோவில் வடதிருச்சிற்றம்பலம் எனப் பெயர் பெற்றிருந்தது என்று கொள்வது பெரிதும் பொருத்தமாகும். சோழநாட்டில் 'தென் திருமுல்லைவாயில்' இருத்தலால் தொண்டைநாட்டுச் சிவத்தலம் 'வடதிருமுல்லை' எனப் பெயர் பெற்றது. அவ்வாறே 'தென்திருச்சிற்றம்பலம்' (சிதம்பரம்) இருத்தலைக் கொண்டு மதுராந்தகத்துச் சிவன் கோவில் 'வடதிருச்சிற்றம்பலம்' எனப் பெயர் பெற்றது என்று கருதுதல் அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் பொருத்தமாகும்.

## திரு ஏகம்பமுடையார் கோவில்

குமரவேள் மேட்டுக்கு நேர் எதிரில் இரண்டு பர்லாங்கு தொலைவில் வயலில் பெரிய சிவலிங்கம் உள்ளது. அதனை அடுத்துப் பழைய காசிப் பாட்டை (காசிக்குச் செல்லும் பழைய வழி) அமைந்துள்ளது. அப்பாட்டையில் பெரிய நந்தி ஒன்று உள்ளது. அதன் நீளம் 4 அடி அகலம் 2½ அடி; உயரம் 3 அடி. அந்த லிங்கத்திற்குத் தெற்கில் உடைத்த கருங்கற்கள் கிடக்கின்றன. லிங்கம் உள்ள வயல் ஓரத்தில் கட்டட அடிப்படை காணப்படுகிறது. பக்கத்தில் உள்ள கால்வாய்க் கரைகளில் கோவிலின் கற்கள் சிதறிக் கிடக்கின்றன. லிங்கத்திற்கு நேர் வடக்கில் ஒன்றரைக் கல் தொலைவில் கருங்குழிக் கோட்டை உள்ளது. கருநாடகப் போர்களின் காலத்தில் அங்கிருந்து சுடப்பட்ட பீரங்கிக் குண்டுகளுக்கு இக்கோயில் இரையானது என்று ஊரார் உரைக்கின்றனர்.

இக்கோவில் அக்காலத்தில் என்ன பெயர் பெற்றிருந்தது என்பது தெரியவில்லை. "இரண்டாம் இராசராசன் காலத்தில் (கி. பி. 1146—1163) "மதுராந்தகச் சதுர்வேதி மங்கலத்து ஆட்சிக் குழுவினருள் சிலர் திருவேகம்பமுடையார் கோவிலுக்கு ஒரு நிலத்தை விற்றனர்" என்று திருவெண்காடுடையார் கோவில் கல்வெட்டு ஒன்று (A.R.E. 399 of — 1922) குறிப்பிடுகிறது. அக்கோவில் இன்று மதுராந்தகத்தில் காணுமாறு இல்லை. எனவே, வேறு தக்க சான்றுகள் கிடைக்கும் வரையில், அழிந்துபட்ட இச்சிவன் கோவிலே கல்வெட்டில் குறிக்கப்பட்ட திரு ஏகம்பமுடையார் திருக்கோயிலாய் இருந்திருக்கலாம் என்று கொள்வது பொருத்தமாகும். *

---

## சங்கர பகவத் பாதர் துதி

நான்முகன் சொலும்வே தத்தின் நவில்இரு மூன்று மார்க்க
மேன்முறை விளங்கி மற்றும் வேறுள பவுத்தம் ஆதி
நூன்முறை மதங்கள் யாவும் நுடக்கமுற் றழிய வென்ற
கோன்முனி சங்க ரன்தாள் குறித்தவர் குறையில் லாரே.

# "ஸ்ரீ வைஷ்ணவ-பரிபாஷைச் சொற்கள்"

( திரு. என். எஸ். தாத்தாச்சாரியர், தஞ்சை )

காள வலம்புரி அன்ன நற்காதல் அடியவர்க்குத்
தாளம் வழங்கித் தமிழ்மறை இன்னிசை
தந்தவள்ளல்
மூளும் தவநெறி மூட்டிய நாதமுனி கழலே
நாளும் தொழுது எழுவோம் நமக்கு ஆர்நிகர்
நானிலத்தே.
— (தேசிகன்)

(அன்று ஈன்ற கன்றுக்கு இரங்கிச் சுரக்கும் தேனுவைப் போல் நல்லாசிரியர்கள் சிஷ்யர்களுக்கு ஞானமுதம் ஊட்டுகிறார்கள்).

## மனப்பண்பாடு (1)

உடலில் இரத்த ஓட்டம் குறைந்தால் மனிதனுடைய உடல்நலம் கெட்டு விடுகிறது. அவ்வாறே மனப்பண்பாடு குறைந்தால் ஆன்மநலம் குன்றிவிடுகிறது. ஆன்மநலம் கெட்டுப்போன மனிதன் பின்பற்றும் சமயமும் பழுதுபடுகிறது. ஆன்மநலம் கெட்ட மனிதன் மனத்தில் அறியாமை என்னும் இருள் சூழ்கிறது. அதனால் அம்மனிதன் தீயவழியிலேயே செல்லுகிறான். பல மரங்கள் சூழ்ந்த இடத்தைத்தான் தோப்பு என அழைக்கிறோம். அவ்வண்ணமே, பல நல்லோர்கள் பின்பற்றும் மதத்தையே சமயம் என அழைக்கிறோம். நல்லோர்கள் இல்லாத சமுதாயமோ, அல்லது சமயமோ வாசனையற்றமலர்போல் ஆகிவிடுகிறது. எந்தச் சமயமாயினும் அது மனப் பண்பாட்டைத்தான் ஜீவாதாரமாகக் கொண்டுள்ளது. மனப்பாடு செயலிலும், சொல்லிலும் வெளிப்பட்டே தீரும். பெரும்பாலும் முதலடியாக ஒரு மனிதனுடைய பேச்சிலிருந்தே அவன் மனப்பண்பாட்டை அறிந்துவிட முடியும். பண்பாடும் சில நேரம் சூழ்நிலையால் கெடலாம், ஆயினும் சமயப்பற்றும், நல்லோர் பழக்கமும் ஏற்பட, அப்பண்பாடு தேற்றாங்கொட்டை போட்ட நீர்போல் மறுபடியும் தெளிவடையும். சிறுவயதிலிருந்தே நல்ல பழக்கம், நல்ல படிப்பு இவைகளால் சிறுவர்களின் மனப்பண்பாட்டை மிக்க கவனத்துடன் நம்முன்னோர்கள் வளர்த்து வந்துள்ளார்கள். படிப்பைவிட நல்லொழுக்கமே மிகமிக முக்கியமானது. "மறப்பினும் ஓதிக்கொளலாகும் பார்ப்பான் பிறப்பொழுக்கம் குன்றக்கெடும்" என்ற திருக்குறளில் இக்கருத்தை எவ்வளவு அழகாகவும், அழுத்தமாகவும் திருவள்ளுவர் கூறி இருப்பதைப் பார்க்க வேண்டும். தீயநாப்பழக்கம் அகந்தையினை வளர்க்கும் ஒரு கொடிய விஷச் சொட்டாகும். விஷம் பட்டவனுக்குத் தேனும் கசக்குமா போலே அகந்தை கொண்டவனுக்கு நல்ல பேச்சும், நல்ல பழக்கமும் கசந்தே காணும். "நான்" என்னும் அகஅகந்தையும், "எனது" என்ற புற அகந்தையையும் களைந்தால் அன்றி உண்மை அறிவு வளர முடியாது. உள்ளதை மாறிக் காண்பதே "விபரீத ஞானம்" என்பார்கள். "யானே என்னை அறியகிலாதே, யானே, என்றனதே என்றிருந்தேன்" என்று திருவாய் மலர்ந்த நம்மாழ்வார், விபரீத ஞானத்தினால் ஏற்பட்ட கொடுமைக்கு அங்கலாய்க்கிறார், பெரியோர்கள் உகந்த இனிய சொற்களைப் பேசுவதே நல்லநாப் பழக்கமாகும், "இனிய உளவாக இன்னாத கூறல் கனியிருக்கக் காய் கவர்ந்தற்று" என்றும் திருவள்ளுவர் இன்சொல்லின் பெருமையைப் பேசினார்.

## இரு பரிபாஷைச் சொற்கள் (2)

ஒரு ஸ்ரீ வைணவர் மற்றொருவர் அகத்திற்குச் சென்றால், உடனே வீட்டில் உள்ளவர் வந்தவரைத் தண்டனிட்டு தேவரீர், அல்லது தேவரீர்கள் எழுந்தருள வேண்டும் என்றே அழைப்பார்கள்.

"தங்களுக்கு நல்வரவு" என்றே உலக நடையில் கூறுவது வழக்கம். தேவரீர் என்ற சொல்லே போதுமானாலும், மதிப்பின் மிகுதியால் சிலசமயம் தேவரீர்கள் என்று மூன்று அடுக்குப் பன்மையுடன் கூடிய சொற்களைக் கையாளுவதும் உண்டு. இதுவே இவர்களது ஸம்பிரதாயமாகும். ஸம்பிரதாயம் என்ற சொல்லிற்குப் பரம்பரைச் சொத்து என்று பொருளாகும். ஸம்+ப்ர+தாயம் என்ற மூன்று சொற்கள் அடங்கிய இது ஒரு சொல்லாகும். இவர்களுக்கு நூல் ஆதாரத்தை விட ஓரான் ஒருவழியாகவந்த பழக்கமே அதாவது ஆசாரமே சிறந்த குறிக்கோளாக இருக்கும். இவர்கள் அறிவுத் துறையிலும் "பேசிற்றே பேசும் ஏக மிடற்றர்" என்றவாறு இருப்பார்கள். வீட்டிற்கு வரும் விருந்தினரைக் கடவுளாக நினைத்து, தம்மை மனிதனாக நினைக்கும் மனப்பண்பாட்டை வெளியிடும் பழக்கமே இது. "ஸர்வஸ்ய அப்யாக தோகுரு" (எப்பேற்பட்டவருக்கும் விருந்தினர்களே சிறந்தவர்கள்) என்று தர்ம சாஸ்திரத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. தாங்கள் என்ற சொல்லைவிடத் "தேவரீர்கள்" என்ற சொல்லில் மந்திர சக்திமிகுந்திருக்கும். இவ்வாறு பேசிப் பழகுங்கால் கெட்ட நெஞ்சத்திலும் அமைதியும், அன்பும் தானே வளருமன்றோ? "தேவரீர்கள்" என்ற சொல்லை எடுத்துக் கொண்டால், அச்சொல்லில் பலர்பால் பன்மையும், முன்னிலைப்பன்மையும், சிறப்புப் பன்மையும் ஆக மூன்று பன்மைகள் உள்ளன. மெய் அறிவு, ஒழுக்கம், துறவு என்று பெயர் கொண்ட ஞானம், அனுஷ்டானம், வைராக்கியம் என்ற குணங்களையே இம்மூன்று பன்மைகள் சிறப்பிக்கின்றன எனலாம். திருப்பாவைப் பாட்டில் "வையத்து வாழ்வீர்காள்" என்ற சொற்றொடரில் காணும் இருபன்மைக்கும் உரையாசிரியர்கள் பொருள் நயம் கூறி இருப்பதையும் கவனிக்க வேண்டும். தேவரீர் என்பதனால் வைகுந்தத்தமர்களான நித்தியசூரிகளே" இவர்கள் என்றும் பொருள்படும். ஒரு ஸ்ரீவைணவரை தேவர்களுக்கு ஒப்பானவர் என்று கருதும் பொழுதே தன்னை ஒரு மனிதனாகவே மற்றவர் கருதுகிறார் என்ற கருத்தும் வெளியாகுகிறது. பகவானைக் கண்டாலும், பாகவதர்களைக் கண்டாலும் "நீசனேன் நிறைவொன்றுமிலேன்" என்று தம்மை எண்ணி இருப்பது ஸ்ரீவைணவர்களின் தலையாய கடமையாகும். உலகமுறையில் பேசப்படும் அடிமையாக இதைக் கருதவே கூடாது. "கிங்கரத்வாதி ராஜ்யம்" (அடிமைப்படும் பேரரசு) என்றும் "தாஸ்ய மஹாரஸம்" (அடிமை என்ற பெரும் சுவை) என்றும் இந்த அடிமை மனப்பான்மையை ஸ்ரீவைணவ உலகம் மிகவும் போற்றுகிறது. பாகவதர்களின் அடிமைக்கு ஒரு ஸ்ரீவைணவர் அடியார், அடியார், அடியார்.........என்று ஏழ்படிகால் இறங்கி இன்பம் அனுபவிப்பார். மன ஒருமைப்பாடு என்ற பேரின்பம் அல்லவோ இத்தகைய பழக்கத்தால் பொங்கி வளரும். "ஒக்கத் தொழுகிற்றீராகில் கலியுகம் ஒன்றில்லையே" என்ற ஆழ்வார் ஸ்ரீசூக்தியையும் இதற்குச் சான்றாகக் கொள்ளலாம். பாகவதர்களே ஒரு ஸ்ரீவைணவருக்குக் கோக்களர் (எஜமானர்கள்) ஆகிறார்கள். இராமனை அழைத்துச் செல்ல விரும்பி, தசரதர் அவைக்கு எதிர்பாராமல் விசுவாமித்திரர் வருகிறார். அவரை எதிரழைத்து உபசரிக்கும் தசரதர் பல இனிய உரைகள் கூறும்பொழுது, "தைவதம் ஹி பவான் மம" (தாங்களே என்வழிபடும் தெய்வம்) என்கிறார். ஸ்ரீவைணவர்கள் கையாளும், "தேவரீர்" என்ற சொல் வழக்குப் போன்றதே இவ்வழக்கு. பெரியோர்களைக் காணும் நாளே "திதி" ஆகும். அவர்களைக் காணாத நாளே "அதிதி" யாகும். பெரியோர்களாகிய அடியார்களைக் காண்பதே கண்பெற்ற பயனாகும். "அது காணும் கண் பயனாவதே" என்றும் பெரியோர் திருவாக்கு.

அடுத்த படியாக 'எழுந்தருள வேண்டும்' என்ற சொல்லை எடுத்துக்கொள்ளலாம். பெரியோர்கள் எழுவதே—அதாவது தம்மிடத்திலிருந்து புறப்படுவதே பிறருக்கு அருள்பாலிக்கவேதான். 'அருள்' என்றால் இன்னார், இனியார் என்ற பாகுபாடு இல்லாமல் எல்லோரிடமும் காட்டும் அன்பாகும். அன்பு என்பது சுருங்கிப் பரவும் தன்மை. அருள் என்பது பரந்து

விளங்கும் தன்மையாகும். எம்பெருமானும் அருள் பாரிக்கும்பொழுது அடியார்களின் துணைகொண்டே இருக்கிருன். அடியார்களின் அருட்பார்வை படரப்படர மனிதன் உள்ளம் கனிகிறது. கனிந்த உள்ளத்தில் தற்பெருமை மறைகிறது. அருளுக்கு ஆளும் சக்தி உண்டு. அன்பிற்கோ பாரிக்கும் சக்திதான் உண்டு. அருள் தோய்ந்த உள்ளம் பிறரை வெறுக்காது. கொடியவர்களையும் அணைத்தே பழகும். "தம்மிடம் இல்லாத குறைகளை இருப்பதாக ஒருவர் காட்டினுலும், அவரிடம் சீற்றம் கொள்ளாது. "நானே தாஞயிடுக" என்று கூறுவதே ஸ்ரீவைணவத்தில் கண்ட உண்மை. திருவரங்கத்தில் அரங்கன் திருமுன் ஸ்ரீபட்டர் என்ற ஆசார்ய வள்ளல் நின்று ஆராத அமுதமான அரங்கனை அனுபவித்துக் கொண்டிருந்தார். அவருக்குத் திருப்பரி வட்டம் (தலையில் சூட்டி அருளும் ஒருவகை மரியாதை) சார்த்தப்பட்டது. அப்பொழுது அருகே இருந்த ஒருவர் ஆற்ருமையினுல் அம்மகானைப்பற்றிக் குறையாகப் பேசினுர். அச்சொல் ஸ்ரீபட்டர் திருச்செவியில் விழுந்தது. உடனே குறை கூறியவரை நோக்கி வணங்கி, அடியேனுக்கே தெரியாதவைகளும், எம்பெருமான் முன்பு விண்ணப்பிக்கப்படாதவைகளுமான அடியேன் குற்றங்களை, அரங்கன் திருச்செவியிற்பட எடுத்துரைத்த தங்களுக்கு, என்ன கைம்மாறு செய்யமுடியும். தங்யோஸ்மி! இதோ இத்திருப்பரிவட்டம், இதோ இந்த மோதிரம்" என்று கூறித் திருப்பரிவட்டத்தையும், பொன்னுழியையும் களைந்து அவருக்குச் சார்த்தி மகிழ்ந்தாராம். இந்த மாதிரிப்பண்பு ஸ்ரீவைணவனுக்கு நறுமணத்துடன் மலரும் மலர்போல், தோன்றும் பொழுதே ஏற்பட வேண்டும். ஆகவேதான் ஒரு ஸ்ரீவைணவன் வீட்டிற்கு வருவதை அருள் பாரிக்கவே எனக்கொண்டு "எழுந்தருள வேண்டும்" என்று ஸ்ரீவைணவர்கள் கூறுகிருர்கள். "தேபுனந்தி உருகாலேன, தர்சனு தேவஸாதவ" (தெய்வங்களின் அருள், நாள் கழித்தே பயன்தரும். அடியார்களின் அருளோ கண்பட்டதுமே அன்றே நற்பயனைத் தரும்) என்றும் பெரியோர்களின் அருள்மகிமையை எடுத்துப் பேசினுர்கள். ஆக ஒரு பெரியவரை "தேவரீர், அல்லது தேவரீர்கள்" என்று அழைப்பதும், அவரை வரவேற்கும் பொழுது, "எழுந்தருளுக! அல்லது எழுந்தருள வேண்டும்" என்று சொல்லுவதும் ஸ்ரீவைணவ ஸம்ப்ரதாயமாகும். அதற்குப் பதில் கூறும்பொழுது. "எழுந்தருளினேன் என்று வந்தவரும் மறுமொழி கூறக்கூடாது. எப்பொழுது எழுந்தருளியாயிற்று எனக்கேட்டால், அடியேன் இப்பொழுது தான், என்றே பதில் கூற வேண்டும். தேவரீர்கள் என்ற சொல், "தேவன்" என்றும், "எழுந்தருளவேண்டும்" என்ற சொல் "ஏள்ள வேண்டும்" என்றும், மருவி வந்தன.

—தொடரும்

---

## கோயில் நிகழ்ச்சிகள்.

| | |
|---|---|
| ஸ்ரீ வீர ஆஞ்சநேய சுவாமி கோவில், திருப்பாதிரிப்புலியூர். | இலட்ச தீப மகோத்சவம். |
| ஸ்ரீ அரங்கநாத சுவாமி கோயில், நாமக்கல். | பிரம்மோத்சவம். |
| ஸ்ரீ தேவி கருமாரியம்மன் கோயில், திருவேற்காடு. | சித்திரா பௌர்ணமி இலட்சார்ச்சனை. |
| ஸ்ரீ கனககிரி வேலாயுத சுவாமி கோயில், சிவகிரி. | இரதோற்சவம். |
| ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி கோயில், செட்டிக்குளம். | இலட்சார்ச்சனை |
| ஸ்ரீ தேவநாத சுவாமி கோயில், திருவகீந்திரபுரம். | பிரம்மோத்சவம். |
| ஸ்ரீ அக்னீசுவர சுவாமி கோயில், திருப்புகலூர். | மகோத்சவம். |
| ஸ்ரீ திருநாவுக்கரசு சுவாமிகள், திருவதிகை. | மகோத்சவம். |
| ஸ்ரீ செயங்கொண்டநாத சுவாமி கோயில்-மன்னுர்குடி. | மகா கும்பாபிஷேகம். |

# திருஞான சம்பந்தர் பிள்ளைத் தமிழ்

ஸ்ரீலஸ்ரீ மாணிக்க வாசக ஞான தேசிக சுவாமிகள்
(சிவராஜ யோக மடம், மேலையூர், திருவெண்காடு.)

## (அம்புலிப் பருவம்)

மாநிலம் போற்றிமகிழ் தழையத் தழைத்தொளிசெய்
வான்மருவு தோற்ற மதனால்
மருவிவளர் மூன்றினில் உலகுபர வப்பெறும்
மாண்புடைய நிலைமை யதனால்
வானதி யடங்குநிலை தனிலோங்கு மாக்கடல்
மகிழ்பொங் கிடத்தோன் றலால்
வளரொளித் திருநீற்றி னிலவொளி வழங்கியிவ்
வையகம் விளக்கு மதனால்
தேனமுத மொழுகுசெங் குமுதம் வாய் விள்ளச்
செழுங்கமல முகை கூம்பலால்
செம்மலிவ னின்னையொத் துளனால் நினக்கும்
சிறந்ததுணை யிவனன் றியில்
ஆனமுத மாடிதரு ஞானசம் பந்தனுடன்
அம்புலீ யாடவாவே
ஆளுடைய பிள்ளையென வந்தசிவ ஞானியுடன்
அம்புலீ யாடவாவே. (1)

துன்பவெம் பகல்மாறத் தண்ணளி சுரந்துநீ
தொல்லுலகு குளிரவைப்பாய்
சொல்லரிய செந்தமிழ்த் திறம்நுகரு வார்க்கெலாம்
சூழ்துணை யெனத் தழைப்பாய்
பம்பியொளி செய்கணம் பல்லாயிரம் சூழ்ந்து
பரவவளர் தலைவனுவாய்
பதினாறில் நிறைவெய்து பூரண னெனச்சொலும்
பான்மை பெற் றுடையதன் றி
எம்பிரா னருள்பெறும் மதிக்குழவி யென்றுனை
இயம்புவது முண்டாதலால்
ஏதுமொரு பேதமிலையென் றெண்ணிப் போலுமின்
றெம்மைய னினையழைத்தான்

அம்பிகை யளித்தசெம் பொற்கிண்ண வள்ளலுட
னம்புலீ யாடவாவே
ஆளுடைய பிள்ளையென வந்தசிவ ஞானியுட
னம்புலீ யாடவாவே! (2)

புறவிருளை வானெழீஇச் சில்லிரவு போக்குவாய்
பூதலத் தெவ்வுயிர்க்கும்
புகலுமக விருளோட ஞானநீற் றருளிதந்த
புண்ணிய னிவனறிதியால்
குறைவுநிறை வுடையைநீ யெம்பிரா னென்றுமே
குறையாத நிறைவி னுள்ளான்
கோளரவு கவ்வநீ நைந்தொழிவை யெம்மையாள்
கொந்தணவு பூம்புகலியான்
நறவினிய செந்தமிழ்ப் பதிகத்தி னுணையால்
நாள்கோளி னலிவொழித்தான்
நாடியிவை யோர்ந்துணரி னின்னின் மிக்கானெங்கள்
நாதனென் றோத வேண்டா
அறிவரிய ஞானமுணர் சிறியபெரி யோனுட
னம்புலீ யாடவாவே
ஆளுடைய பிள்ளையென வந்தசிவ ஞானியுட
னம்புலீ யாடவாவே! (3)

புலனழிய வந்ததொரு மாபழியு ளாயிவன்
புண்ணியப் பதிறுறினில்
பூமகனும் நாணுறக் காமாரி தன்னருட்
புணரியை வியந்துகண்டான்
உலகில்வளர் பைம்பயிர்க ளங்குரித் தோங்குமா
றுதவுமத் தனையுற்றல்
ஒப்பற்ற கோசிகனும் நாணுமா றெம்மிறை
உயிர்க் கெலாம் முத்திதந்தான்
கலையமுது தருவைநீ யென்பதொரு புதுமையோ
கவுணியென வந்தஎம்மான்
கலைமுடிவி லோங்குபர ஞான அமுதத்தினைக்
கனிசுவைத் தமிழிலீந்தான்
அலைகடற் கரைமருவு புகலியா னிவனுட
னம்புலீ யாடவாவே
ஆளுடைய பிள்ளையென வந்தசிவ ஞானியுட
னம்புலீ யாடவாவே! (4)

பவநெறி யொழித்தருளு மெங்தைமுடி சார்ந்துமீ
    பகல்வினக் காயதொன் றேநு

பரங்குறையும் வல்லரவு கவ்வுமென் றஞ்சிப்
    பனித்துடல் குன்றி நின்றாய்

தவவரிய ஞானசம் பந்தனிவன் வாய்மலர்
    தண்டமிழ்ப் பதிகமோதித்

தண்டுளவ மாலையணி மாலோனு மெம்பிரான்
    தன்னுருவ நிலையெய்தினன்

சிவனதய ராணையே ஐந்தொழில் நடாத்துமிது
    திண்ணமென வையமுணரச்

சேயிழையை யென்பிலெழ வாவென் றழைத்தனன்
    தேவரோ யாவர் வல்லார்

அவனையிவ னன்றே யெனச்சுட்டும் மதலையுட
    னம்புலீ யாடவாவே

ஆளுடைய பிள்ளையென வந்தசிவ ஞானியுட
    னம்புலீ யாடவாவே! (5)

மன்னுதமிழ் ஞானசம் பந்தனெனும் நாமமே
    மந்திரமெ னத்தழைப்ப

மற்றவ னளித்தவெண் டிருநீறணிந்த நாள்
    வழுதியும் முழுதும் உய்ந்தான்

பின்னரும் அல்லல்தரு வல்லமணர் வாதிடப்
    பேரெரியில் வைகையாற்றில்

பிறங்கு செம்பொருளெழுது மேடிட் டெடுத்தனன்
    பேராற்ற லிதனினுண்டோ

வன்னிமதி வைத்தசெஞ் சடையண்ண லருள்தந்த
    மதலையிவ னருளி நினையின்

வாராத வாழ்வுனக் கிகபரத் தொன்றுமிலை
    மற்றிவை மதித்துணர்தியேல்

அன்னையிலு மினியவென் குருநாத னிவனுட
    னம்புலீ யாடவாவே! (6)

கமலமல ரயனுமரி யமரர்கோ ளிவர்களைக்
கமலமொடு சங்கம் வச்ரம்

காட்டுக வெனக்குறித் தஞ்சலியி னவிநயம்
கட்டுரைத் திடும்முதல் வனை

நமவெனத் துதிபாடும் மறைவிதியி னூற்போற்றி
நவிலரும் வேள்வி செய்ய

நற்கனக மாயிரம் கொண்டபொற் கிழிதந்த
நாதனிவ னென்பதுணரின்

குமையும் இரவோனெனும் இழிபகல வந்திவன்
குறை கழற் கேகிடப்பாய்

கூடுமல இருளோட ஆடல்புரி யுந்திருக்
கோலத்தை யன்றினையாய்

அமுதொழுகு குமுதவாய்த் தமிழ்ஞான னிவனுட
னம்புலீ யாடவாவே

ஆளுடைய பிள்ளையென வந்தசிவ ஞானியுட
னம்புலீ யாடவாவே! (7)

உலையாத வாழ்வினை உயிர்க்கருள வந்தெனக்
கொண்கழற் போதளித்தோன்

ஒல்குபூங் கொடியனைய மாதரார் மங்கலில்
உகுத்தகண் ணீர்துடைத்தான்

கலையார் செழுங்கவுணி யருளாண்மை தனையோர்ந்து
கழலிணை பணிந்த மழவன்

கன்னியுறு துயர்தீர மன்னுசெந் தமிழாற்
கடைக்கணித் தருள்புரிந்தே

தொலையாத முயலகன் தொலையக் கெடுத்ததோர்
தோன்றலிவன் நாடியொருசொல்

சொல்லியருளப்பெறின் நின்மேனி முயலகன்
தோன்று தொளித்தோடுமே

அலையார் புனற்பொன்னி வளநாட னிவனுட
னம்புலீ யாடவாவே

ஆளுடைய பிள்ளையென வந்தசிவ ஞானியுட
னம்புலீ யாடவாவே! (8)

பழமறைக் கிழவஞெடு மாலுமோர்ந் தறிகிலாப்
பரநாத முடிவிலோங்கும்
பரமனைச் சுட்டுமொரு திருவிர லெடுத்துனைப்
பரிவோ டழைத்து நின்ருன்
குழவிமதி யிதுநின் றன் புண்ணியப் பயனெனக்
கொள்ளாது இகழ்ந்தனை யெனின்
கோற்ருெழில் திருத்தும் குலச்சிறையி ஞலன் று
கொடியவல் லமணர்பெற்ற
கழுமுனையை நீட்டிடக் கருதுமொரு செயலிவன்
கண்சிவக்கப் பொருதார்
கௌரியொடு கண்ணுதற் பெருமானு மாதலால்
காலம் கடத்தாதினி
அழகிய பொழிற்புகலி தழைவுற்ற இவனுட
னம்புலீ யாடவாவே
ஆளுடைய பிள்ளையென வந்தசிவ ஞானியுட
னம்புலீ யாடவாவே ! (9)


செக்கர்வா னைத்தழுவி நிற்கும்நின் னிலைகண்டு
சிவபிரான் தனைநினைந்தோ
திருவுள மிரங்கிநின் றனையருள எண்ணியோ
தெரிகிலோம் நினையழைத்தான்
எக்கரா மமணர்சூழ் பட்டபா டதுநிற்க
எதிரேற்ற போதியர் குழாம்
இடியேறு வீழ்ந்தபி னடிவீழ்ந்து தப்பிஞ
ரெஞ்சியோ ரென்பதறி நீ
முக்கணு யகனதுயர் நாமத் தெழுத்தஞ்சும்
முன்னிய தமிழ்த் தொடையலை
மொழிகுநர்தம் வன்மைக்கு மூவுலகு மீடரிது
மூடமதி நீயலை யெனின்
அக்குமா மணியணிகொள் திருவாள னிவனுடன்
அம்புலீ யாடவாவே
ஆளுடைய பிள்ளையென வந்தசிவ ஞானியுட
னம்புலீ யாடவாவே ! (10)



திருச்செந்தூர் முருகன் கோயிலில், தமிழக முதலமைச்சர் பெருந்தகை அவர்களை அறங்காவலர் குழுவினர் வரவேற்றல்.



திருச்செந்தூர் முருகன் கோயிலில் தமிழக முதலமைச்சர் திருமிகு எம். பக்தவத்சலம் B.A., B.L. அவர்கள் தண்ணீர்க் குழாய்த் திறப்பு விழாவில் உரை நிகழ்த்துதல்—(23—4—65).



திருவாரூர்க் கடாரம் கொண்டான் கயிலாசநாத சுவாமி கோயில்
மகா கும்பாபிஷேகக் காட்சி (7—4—65).

Edited and Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Admn.) Dept. Madras-34, Printed at Manorama Press, 39, M. J. B. St., Madras-5.